

# ஞானச்சுடர்

வைகாசி 2017



சந்நிதியான் ஆச்சிரமம்

233 ஆவது மலர்

ஓம் முருகா

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்.

பொருள்: தவத்தால் வலியார்க்கு ஏற்படும் வலிமையாவது தமக்கு நேரும் பசியைப் பொறுத்தல்; இவ்வலிமை தானும், பொறுத்தற்கு அரிய பசியைக் கொடையால் ஒழிப்பவரின் வலிமைக்குத் தாழ்ந்ததே. (225)

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.


பொருள்: வறியவரின் கடும் பசியைத் தீர்த்தலால் உண்டாகும் அறமே பொருள் உடையவனுக்கு அப்பொருளைச் சேமித்து வைத்தற்குரிய களஞ்சியம். (226)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### பராபரக் கண்ணிகள் - 2



அஞ்செழுத்தை நெஞ்சில் அழுத்தா தழுத்திநிற்கக்
கஞ்ச மலரடியைக் காட்டாய் பராபரமே 07

பஞ்சப் புலன்வழிபோய்ப் பாரி லலையாமல்
செஞ்சரணே தஞ்சமெனச் செய்வாய் பராபரமே 08

கட்டுப்படா மனத்தைக் கட்டத் திருவருளை
இட்டமுடன் நீதாராய் எந்தாய் பராபரமே 09

ஊனா யுயிராய் உடலாயென் னுட்கலந்த
தேனா ரமுதே தீங்கரும்பே பராபரமே 10

ஒருதெய்வம் ஒருலகம் உண்மை முழுதுமென்னும்
திருவருளில் நிற்கவருள் செய்வாய் பராபரமே 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 233

2017 பொருளடக்கம் வைகாசி


| | | |
|---|---|---|
| திருவெம்பாவை - திருப்பாவை... | செல்வி கு. தயாளினி | 01 -02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 -06 |
| சக்தியின் மகிமை | திருமதி பொ. திலகவதி | 07 -08 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 09 -12 |
| கிரிசாம்பாள் | மூ. சிவலிங்கம் | 13 -14 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 15 -17 |
| தியானத்தால் வளமான... | கே. குணாளன் | 18 -20 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 21 -23 |
| "அம்மா" | திருமதி ப. நடராஜா | 24 -26 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 27 -29 |
| வைகாசி மாதச் சிறப்பு | ஆர்.வீ. கந்தசுவாமி | 30 -31 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 -33 |
| அன்னைக்குப் புகழ்... | கே.எஸ். சிவஞானராஜா | 34 -36 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 37 -39 |
| சிவ தொண்டர்க்கு வழி... | ம. சிவயோகசுந்தரம் | 40 -41 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 42 -44 |
| நாம் கண்ட தசீதரன் | மோகனதாஸ் சுவாமிகள் | 45 -46 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 47 -52 |
| வருடாந்த வைகாசிப் பெருவிழா | வல்வையூர் அப்பாண்ணா | 53 -62 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 232ஆவது மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சிறுப்பிட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய கிராம சேவையாளர் திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தமது உரையின்மூலம் ஆச்சிரமம் ஆரம்ப காலத்தில் நடாத்திய வாராந்த நிகழ்வில் விடயதானம் செய்பவரோடு அவர் பற்றிய அறிமுக உரைக்கு எம்போன்றவர்களை அழைத்து அந்நிகழ்வுகளை அரங்கேற்றிக்கொண்டிருந்தார்கள். காலநிலை மாற்றத்தில் அறிமுகவுரை எனும் பகுதி நீக்கப்பட்டு விடயதானம் செய்பவர்களை மாத்திரம் அழைத்து நிகழ்வுகளை நடாத்தினார்கள்.

அப்போது இடம்பெற்ற அறிமுக உரையின்மூலம் ஆச்சிரம செயற்பாட்டில் ஈடுபட்ட நான் நீண்டகாலத்தின்பின் முதன்முதலாக வெளியீட்டுரை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆனாலும் ஆரம்பகால ஞானச்சுடரிலிருந்து இன்றுவரை ஞானச்சுடர் வாசகனாக இருந்து மாதந்தோறும் இம்மலரைப் பெற்று வருகின்றேன். அவ்வகையில் ஆச்சிரம செயற்பாடு, ஞானச்சுடர் வெளியீடு பற்றிய நிகழ்வுகளுக்கு சந்நிதி வேலவனது அருள் இங்கே வியாபித்திருப்பதால்த்தான் இடம்பெறுகிறது என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஞானச்சுடர் சித்திரை மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் ஆச்சிரமப் பணிகளுக்கு ஊன்றுகோலாக விளங்கிவருபவருமான திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தமது ஆரம்ப உரையில் தற்காலத்தில் இடம்பெறும் சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளின் தன்மை பற்றியும் அவை மேலோங்குவதற்கு காரணம் ஆன்மீகத்தில் மக்களுக்கு நாட்டமில்லாமல் போனதே காரணம் என்று கூறியதோடு சந்நிதியான் ஆச்சிரமத்தின்மூலம் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஓரளவு மக்களை ஆன்மீகப் பணியில் இட்டுச்செல்வதற்கு வழிசமைக்கின்றது. ஆகவே அந்த மலரின் வளர்ச்சிக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்ற கோரிக்கையினை மண்டபத்தில் கூடியிருந்த சபையினரிடம் எடுத்துரைத்தார்.

வருடா வருடம் சித்திரை மாத மலருக்கு மதிப்பீட்டுரை வழங்குவதுபோல் இம்முறையும் சந்நிதி வேலவன் அச் செயற்பாட்டில் ஈடுபட வைத்துள்ளான் என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மை பற்றி கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற சித்திரை மாத ஞானச்சுடர் வெளியீட்டின் போதும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வைகாசிப் பெருவிழாவின் போதும் அனைத்து அன்பர்களாலும் பகரப்பட்ட விடயம் அனைவரதும் கவனத்தைக் கவர்ந்தது.

கலை, கலாச்சாரத்திற்குப் பெயர் பெற்ற யாழ் மண்ணில் இடம்பெறுகின்ற சமூகத்துக்கு ஒவ்வாத விடயம் பற்றியும் அதன்மூலம் மக்களது செயற்பாடு பற்றியும் விமர்சிக்கப்பட்டது.

இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் இளவயதுடையோராக இருப்பதுடன் தாம் மேற்கொள்ளும் காரியங்களின் தன்மை பற்றியும், அதனால் தாம் அடையும் பலாபலன்களையும் விளங்கிக்கொள்ளாதிருப்பதே ஆகும். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பது எமது முன்னோரின் மூதுரையாகும். அப்பெரியோர்களின் வாக்கு பொய்யாகாது. ஒரு காலத்தில் நாம் இப்பிறவியில் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு மறு பிறவியில் அனுபவிக்க நேரிடும் என்று கூறுவார்கள். ஆனால் இன்றோ அப்படி இல்லை. நாம் வாழும் இப்பிறவியிலேயே அதற்குரிய பலனை அனுபவிப்பதை கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இத்தகையோரின் செயற்பாட்டினை உற்றுநோக்குமிடத்து இவர்களிடம் பல குறைபாடுகள் காணப்படுவதனை அவதானிக்கலாம். இதில் முக்கியமாக இவர்களுக்குரிய அறநெறிகள் போதிக்காமை பற்றியும் ஆன்மீகச் செயற்பாட்டில் நம்பிக்கை அற்றவர்களாகவும் இருப்பதே இவர்களது சமூக விரோதச் செயல்களுக்கு அடிப்படைக் காரணிகளாக இருக்கின்றது. அதனால் இத்தகையோரை திருத்தி சமூகத்திற்குள் உள்வாங்குவதென்பது குதிரைக்கொம்புக்கு ஒப்பான விடயமாகப் பார்க்கப்படுகிறது.

எப்படியாயினும் "சமூகம்" என்பது இவர்கள் மட்டுமல்ல. வளர்ந்து வரும் சமூகமும் இவ்வழியில் செல்லவிடாது அவர்களை வழிப்படுத்தி அறநெறிப் போதனைகளை வகுத்து ஆன்மீகச் செயற்பாட்டிற்கு உட்படுத்துவது சமூகம் சார்ந்த பெரியோர்களது கடமையாகும். வாய் வழியே பேசிக்கொண்டிராமல் அனைத்து சமூகம் சார்ந்த பெரியோர்களும் நடைமுறைச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். அறநெறிப் பாடசாலைகளை உருவாக்க வேண்டும். அப்பாடசாலைகள் மூலம் பிள்ளைகளை இணைத்து அத்துடன் பெற்றோர்களை அழைத்து அறநெறிப் போதனைகளை போதிக்க வேண்டும். இச்செயற்பாடு கிராமந்தோறும் இடம்பெற வேண்டும். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற வாக்குக்கு அமைவாக நாம் செயற்பட்டால் கந்தபுராணக் கலாசாரத்தை மீளவும் நாம் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 01. சீர்பாத வகுப்பு

முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்கெட
முடுகுவது மருணெறியி லுதவுவது நினையுமவை
முடியவரு வதுமடியர் பகைகோடி சாடுவதும்
மொகுமொகுகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு
முறியுமலர் வகுளதள முழுநீல தீவரமும்
முருகுகமழ் வதுமகில முதன்மைதரு வதும்விரத
முநிவர்கரு தரியதவ முயல்வார் தபோபலமும்
முருகசர வணமகளி ரறுவர்முலை நுகருமறு
முககுமர சரணமென வருள்பாடி யாடிமிக
மொழிகுழற வழுதுதொழு துருகுமவர் விழியருவி
முழுகுவதும் வருகவென வறைகூவி யாளுவதும்
முடிய வழி வழியடிமை யெனுமுரிமை யடிமைமுழு
துலகறிய மழலைமொழி கொடுபாடு மாசுகவி
முதலமொழி வனநிபுண மதுபமுக ரிதமவுன
முகுளபரி மளநிகில கவிமாலை சூடுவதும்.

மதசிகரி கதறிமுது முதலைகவர் தரநெடிய
மடுநடுவில் வெருவியொரு விசையாதி மூலமென
வருகருணை வரதனிக லிரணியனை நுதியுகிரின்
வகிருமட லரிவடிவு குறளாகி மாபலியை
வலியசறை யிடவெளியின் முகடுகிழி படமுடிய
வளருமுகில் நிருதனிரு பதுவாகு பூதரமும்
மகிடமொரு பதுமுறிய வடுபகழி விடுகுரிசின்
மருகனிசி சரர்தளமும் வருதார காசுரனும்
மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி
மறுகிமுறை யிடமுனியும் வடிவேல னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர
வசனிபயி ரவிகவுரி யுமையாள்த்ரி சூலதரி
வநசைமது பதியமலை விசையைதிரி புரைபுநிதை
வநிதையயி நவையநகை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனது பவனபய னுபயசதுர்
மறையின்முத னடுமுடிவின் மணிநாறு சீரடியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr T.** ஸ்ரீஸ்கந்தராசா
(லண்டன்)
பொ. கஜேந்திரகுமார்
(யாழ்ப்பாணம்)
ச. கந்தசாமி
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
மா. நாகலிங்கம்
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)
க. அரியரத்தினம்
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)
கா. அருந்தவராசா
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
சி. தங்கவேல்
(கேம்பிரிட்ஜ கல்வி நிறுவனம், நவிண்டில்)
க. கிருபாகரன்
(சந்தைவீதி, உடுப்பிட்டி)
நா. சுந்தரம்
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)
ந. நற்குணராசா
(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)
**P.** சாந்தரூபன் **G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)
திருமதி இ. லோகநாதன்
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)
**Dr V.** பாலகிருஷ்ணன்
(கரவெட்டி)
இ. கணேசலிங்கம்
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
ஆ. வேலாயுதம்
(உலக்கை ஓடை, கம்பர்மலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீ. நடராசா**
(சாவகச்சேரி)
**சி. கஜன்**
(சண்டிலிப்பாய்)
**S. இராசரத்தினம்**
(நீர்வேலி)
**த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், அச்சுவேலி)
**செ. கஜேந்திரன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஐ.கோ. சந்திரசேகரம்**
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
**செல்வி T. பெரியதம்பி**
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
**செல்வி பா. ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**Dr P. சிவபாலன்**
(உரும்பராய்)
**மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
**சாவித்திரி அருணாசலம்**
(தும்பளை, பருத்தித்துறை)
**க. பொன்னுச்சாமி**
(அம்மன் கோவிலடி, கரணவாய்)
**பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்**
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
**ஐ. புவனேஸ்வரன்**
(அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நி. ஜெயந்தன்
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
சு. சந்திரலிங்கம்
(ஆனைக்கோட்டை)
பாலகுரு விமலேந்திரன்
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
பொ. கந்தையா
(புளூடிலேன், அரியாலை)
செ. கிருஷ்ணராஜா
(கலட்டி வீதி, கோண்டாவில்)
வை. சிற்றம்பலம்
(தேவி வாசம், கொக்குவில்)
மா. தங்கவேல்
(சுண்ணாகம்)
வரதலிங்கம் செல்வமோகன்
(மோகன்கடை, ஆவரங்கால்)
திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
(பத்தமேனி, அச்சுவேலி)
தா. தர்மலிங்கம்
(கொக்குவில்)
ச. தங்கராசா J.P
(இளை. அதிபர், சிறுப்பிட்டி)
ம.செ. சபாநாயகம்
(மாலிசந்தி, கரவெட்டி)
K. வேணுகோபாலு
(வேணி இல்லம், புலோலி)
க. செல்வராசா
(கட்டைவேலி, கரவெட்டி)
திருமதி S. உமாரதி
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
செ. ஸ்ரீதரன்
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
சி. மதியழகன்
(திக்கம், அல்வாய்)
ஜெகநாதன் ஜனனி
(யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. சரஸ்வதி
(போதராமடம், துன்னாலை)
ஐ. சிவஞானம்
(கமலபதி, கரவெட்டி)
அ. சின்னத்தம்பி
(மாய்க்கிராய்ன், துன்னாலை)
கதிரவேலு சதாசிவம்
(அந்திரான், கரவெட்டி)
ச. ஜெகசோதிராசா
(ஆனைக்கோட்டை மேற்கு)
ம. பிரசாந்தன்
(யாழ்ப்பாணம்)
த. முருகானந்தா
(பிரம்படிலேன், கொக்குவில்)
A.T. கதிரவேல்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
த. யாழினி
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
ஆறுமுகம் மயில்வாகனம்
(இணுவில் கிழக்கு)
வே. பாண்டியர்
(கைதடி தெற்கு)
வ. இராசையா
(இருபாலைவீதி, கோப்பாய்)
சோ. இராசலிங்கம்
(ஆவரங்கால் கிழக்கு)
சி.க. இராசரெத்தினம்
(பத்தமேனி, அச்சுவேலி)
K. குலரெட்ணம்
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
சி. பாலபாரதி
(கற்கோவளம், பருத்தித்துறை)
சு. பானுஜா
(துன்னாலை, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை - திருப்பாவை

## -ஓர் ஒப்பீடு-

- செல்வி கு. தயாளினி -
(3ஆம் வருடம் தமிழ்த்துறை, பேராதனை பல்கலைக்கழகம்))

பக்தி இயக்க காலம் எனப்படும் பல்லவர் காலத்தில் தோற்றம்பெற்ற நூல்களாகத் திருப்பாவையும் திருவெம்பாவையும் விளங்குகின்றன. திருப்பாவை விஷ்ணுவைப் பாட்டுடைத் தலைவனாகவும் திருவெம்பாவை சிவனைப் பாட்டுடைத் தலைவனாகவும் கொண்டு எழுதப் பட்டன. இவ்விரண்டு பிரபந்தங்களும் பாவைப் பாட்டு வகையைச் சேர்ந்தவை. திருப்பாவை ஆண்டாளாலும், திருவெம்பாவை மாணிக்க வாசகராலும் இயற்றப்பட்டது. இவ்விரு நூல் களும் பக்தி இலக்கிய வரலாற்றில் முதன்மை பெற்றனவாகக் காணப்படுகின்றன. திருப் பாவை பாசுரங்கள் என்றும், திருவெம்பாவை பாடல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. திருப் பாவையும் திருவெம்பாவையும் "எம்பாவாய்" என முடிகின்றமை சிறப்பாகும்.



இவ்விரு பிரபந்தங்களும் பாவை நோன்பு நோற்றலை மையமாகக்கொண்டு விளங்குகின் றன. அதிகாலையில் தோழிகளைத் துயில் எழுப்பி நீராடச் சென்று, பாவை பிடித்து வழிபடு வதுபற்றி இரு நூல்களும் பதிவு செய்துள்ளன. திருப்பாவையில் இவ்விடத்தைப் "பாவைக் களம்" என்று சொல்லுவர். மார்கழி மாதத்தில் திருப்பாவையும் திருவெம்பாவையும் அனுஷ்டிக்கப்படும். "மாதங்களில் சிறந்தது மார்கழி" என்று கிருஷ்ண பரமாத்மா கூறினார். அவ்வகையில், சிறப்புப் பொருந்திய மார்கழி மாதத்தில் திருவாதிரை விரதமும் ஏகாதசி விரதமும் அனுஷ்டிக்கப்படுவது சிறப்பானதாகும். திருவெம் பாவையிலும், திருப்பாவையிலும் மார்கழி நீராடல் இடம்பெறுகின்றது. இதை,

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்",

என்று திருப்பாவையும்,

"போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்"

எனத் திருவெம்பாவையும் குறிப்பிடுகின்றது.

மழை பொழிதலைக்கூட விஷ்ணுவிற்கும், சிவனுக்கும் உவமித்துச் சொல்வதைக் காணலாம். திருப்பாவையில் "ஊழி முதல்வன்" என விஷ்ணுவும், திருவெம்பாவையில்

*நமது வாழ்வை வளமாக்குவது நம்பிக்கைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊழி முதல்வன்" என சிவனும் குறிப்பிடப்படுகின்றனர். மழை பொழியும் சத்தம் உமையின் கிண்கிணிச் சத்தம்போல் ஒலிக்கின்றதென திருவெம்பாவை பதிவு செய்துள்ளது. திருப்பாவையில், பாஞ்சசன்யம்போல் ஒலி கேட்கின்றது என ஆண்டாள் கூறியிருக்கின்றாள். இதை,

"ஆழி மழைக் கண்ணா...." என்னும் பாடலூடு ஆண்டாள் கூறியுள்ளாள்.

"முன்னிக் கடலைச் சுருக்கி..." என மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

மேலும் உறங்கிக்கொண்டிருப்பவர்களை எழுப்பும் முறையிலும், நகைச்சுவையாகப் பெண்கள் பேசிக்கொள்ளும் முறையிலும் திருப்பாவைக்கும், திருவெம்பாவைக்கும் ஒற்றுமைகள் உள்ளன. திருவெம்பாவையில் முதலாவது பாசுரத்தில் துயில் எழுப்புபவள் "வன் செவியோ நின் செவிதான்" என்று மாணிக்கவாசகர் கேட்கின்றார். திருப்பாவையில் ஒன்பதாவது பாடலில் "ஊமையோ அன்றிச் செவிடோ" என்று ஆண்டாள் கேட்கின்றாள். திருப்பாவையில் விஷ்ணுவைச் சரண்புகுந்துவிட்டோம். எந்தக் கெடுதியும் நமக்கு உண்டாகாதவாறு பார்த்துக் கொள் என விஷ்ணுவைப் போற்றித் துதிப்பதாக இப் பாசுரங்கள் அமைந்துள்ளன. திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் உன்னை நான் சரண்புகுந்து விட்டேன். நான் உனக்கு உரிமை உடையவனாகுவேன் என வணங்குவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. இரு பிரபந்தங்களிலும் இறைவனை உரிமை கொண்டாடி மகிழ்வதைக் காணலாம். ஆண்டாள் தன்னை இறைவன்பால் கொடுத்ததையும், அவனை தனக்கே என்று உறவு கொண்டாடுவதையும்,

"மானிடவர்க்கு என்று பேசுப்படில்
வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே..."

எனும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

திருப்பாவை, விஷ்ணுவினுடைய் அருமை, பெருமை, சிறப்பு என்பவற்றைக் கூறுகின்றது. திருவெம்பாவை சிவனின் சிறப்புக்களைக் கூறுகின்றது. இரு பிரபந்தங்களும் செவிக்கு இன்பம் தருவனவாகக் காணப்படுகின்றன. திருவெம்பாவையில் சிவன் "கண்ணுக்கு இனியான்" எனக் குறிப்பிடப்படுகின்றான். திருப்பாவையில் ஆண்டாள் விஷ்ணுவை "மனதுக்கு இனியான்" எனக் குறிப்பிடுகின்றாள். இவை இரு பிரபந்தங்களினுமுடைய ஒற்றுமையாகும். இவ்வாறாக இவ்விரு நூல்களினுமுடைய ஒற்றுமை வேற்றுமையை நாம் நோக்கலாம்.

தொகுத்து நோக்கின், திருப்பாவை விஷ்ணுவை முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட நூல் ஆகும். திருவெம்பாவை சிவனை முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட நூல் ஆகும். இந்நூல்களில் வரும் பாவைநோன்பு சிறந்த கணவனை வேண்டியும், மழை வளம் வேண்டியும் நோற்கப்பட்டதென்பது தெளிவு.

திருப்பாவை வைணவப் பண்பாட்டுத் தளத்தைப் பிரதிபலிப்பதாகவும், திருவெம்பாவை சைவ பண்பாட்டுத் தளத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. திருவெம்பாவைப் பாடல்களையும், திருப்பாவைப் பாசுரங்களையும் தினமும் ஓதிவந்தால் தீவினைகள் நம்மைவிட்டு அகலும்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூன் | 10 | வைகாசி | 27 | சனி | திருஞானசம்பந்தர். |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூன் | 28 | ஆனி | 14 | புதன் | மாணிக்கவாசகர் |
| யூலை | 30 | ஆடி | 14 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நாயனார் |

*பிறர் குற்றங்களைக் காண முயல்பவன் அரை மனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 04. ஆத்தும சுத்தி

ஆத்தும சுத்தி என்பது உயிரினது தூய்மையான நிலை. அது யான், எனது என்னும் அகப்பற்று புறப்பற்றுக்களின் நீக்கமும், அவற்றுக்கு ஏதுவாகிய கன்ம நீக்கமும் உளவாயவழி உண்டாவதாகும். கன்ம நீக்கத்திற்கு இடையறாத இறைபணி வேண்டுவதாகும், அதுவும் தூய்மையுடைய மனமொழி மெய்களாற் செய்யப்படுவதாகும்.

35. ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிண நெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்றறி யேனே.

**ப-ரை:**

துணை இலி பிண நெஞ்சே- எனக்குத் துணையாதல் இல்லையான பிணம்போலப் பயனற்றுக் கிடக்கும் நெஞ்சமே, கூத்து உடையான் கழற்கு அன்பு இலை- திருக்கூத்தை யுடைய சிவபெருமான் திருவடிக்கண் அன்பு செய்கின்றிலை; என்பு உருகி பாடுகின்றிலை- அன்பு இன்மையால் என்பு உருகப் பாடுகின்றாயுமில்லை- பாடலின்மையால் அதற்கேற்ப ஆனந்தக்கூத்து ஆடுகின்றாயுமில்லை. பதைப்பதும் செய்கிலை- இறைவன் திருவருளைப் பெறவேண்டுமென்று துடித்தலும் செய்கின்றாயில்லை; பணிகிலை- வணங்குகின்றாயும் இல்லை; பாத மலர் சூடுகின்றிலை- இறைவன் திருவடியாகிய மலரை நின் தலைமேற் சூடுகின்றாயு மில்லை; சூட்டுகின்றதும் இலை- அவ்விறைவன் திருவடிக்கண் மலரைச் சூட்டுவதும் செய்கின்றாயில்லை. தேடுகின்றிலை- அவ்விறைவன் யாண்டு உள்ளான் என்று தேடுகின்றாயு மில்லை. தெருவு தொறு அலறிலை- தெருக்கள்தோறும் அவ்விறைவனைத் தேடி அலறுகின் றாயுமில்லை. நீ இவ்வாறு பிணம்போற் பயனற்றுக் கிடப்பின், செய்வது ஒன்று அறியேன்- உன்னோடு கூடிய யான் உய்தி அடைவதற்குச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன்.

துணையிலி பிணநெஞ்சே, கூத்துடையான் திருவடிக்கண் அன்பிலை; என்புருகிப் பாடுகின்றிலை; ஆடுகின்றிலை; பதைப்பதுஞ் செய்கிலை; பணிகிலை; இறைவன் பாத மலர்களை நின் தலைமேற் சூடுகின்றாயுமில்லை; அவ்விறைவன் திருவடிக்கண் மலரைச் சூட்டுகின்றாயுமில்லை; அவ்விறைவனைத் தேடுகின்றாயுமில்லை; தெருக்கள்தோறும் அவ் இறைவனைத் தேடி அலறுகின்றாயுமில்லை; இந்நிலையில் உன்னோடு கூடிய யான் உய்தி அடையச் செய்யத்தக்கது ஒன்றையும் அறிகின்றிலேன் என்பதாம்.

*அமைதியைவிட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துடையான்- திருக்கூத்தையுடையவன்; சிவபெருமான். கழற்கு என்னும் நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. இறைவன் திருவடிக்கண் அன்பின்மையாற் பாடுதலும் ஆடுதலும் செய்கின்றிலை; அதைப் பற்றிப் பதைப்பதுஞ் செய்கிலை என்றார். உருகி என்னும் செய்தென் எச்சத்தை செயவென் எச்சமாக்குக. அன்பின்மையால் பாடுவது செய் யாமையாலும் அதனால் என்புருகாமையாலும் "அன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை" என்றார். பாடுதல் நெகிழ்ச்சிக்கேதுவாதல், "பாடி நைந்து நைந்துருகி" (சத100) "கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம் உள் நெருக்கு நின்றுருக" (திருவெம்4) "மாலுக் கரியானை வாயார நாம்பாடிப் பூலித் தகங்குழைந்து" (பொன்னூசல்8) என வருவனவற்றாலுமறிக.

அன்பின்மையும் பதைப்பின்மையும் மனத்தின் செயல்களாகும். பாடுதலும் அலறுதலும் மொழியின் செயலாகும். என்புருகுதலும் ஆடலும் பணிதலும் பாதமலர் சூடுதலும் பாதத்திற்கு மலர் சூட்டுதலும் தேடுதலும் மெய்யின் செயல்களாகும். ஆகவே மனமொழி மெய்கள் இறைவன் பணியில் நில்லாமையின் செய்வதொன்றறியன் என்றார். என்ற கருத்து மனமொழி மெய்கள் முற்கூறப்பட்ட இறைபணியில் நிற்றற்கு இறைவன் அருள்செய்ய வேண்டுமென்பதும், அதனால் உயிர் தூய்மையான நிலையடைய வேண்டும் என்பதும் குறிப்பெச்சம்.

பதைத்தல்- துடித்தல். "பதையேன் மனமிக உருகேன்" செத்2. பாதமலர் சூடுகின்றிலை என்றது இறைவன் திருவடி மலரை நின்சிரசிற் சூடுகின்றிலை என்றவாறு. பாதமலர் சூட்டு கின்றதுமிலை என இயைத்து திருவடிக்கண் மலரைச் சாத்துகின்றாயுமில்லை எனவுரைக்க. நெஞ்சே என விளித்துப் பாடுகின்றிலை; ஆடுகின்றிலை; பணிகின்றிலை; சூடுகின்றிலை சூட்டு கின்றதுமிலை; தேடுகின்றிலை; அலறிலை என மொழி மெய்களின் செயல்களையும் அதன் செயல்களாகக் கூறியது மனநினைவின்படி மொழியும் மெய்யும் தொழிற்படும் இயைபு பற்றியதாகும்.

தேடுகின்றிலை என்றது இறைவன் யாண்டுள்ளான் அவனை யார் கண்டனர் என்று தேடுகின்றாயில்லையென்றவாறு: "தேடிற்றிலேன் சிவனெவ்விடத்தான் எவர்கண்டனரென்று" (நீத்தல்45) அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. தேடுதல் கடனாகுதல் "உள்ளு கித் தேடுவேன்" (அம்17) "ஒருத்தனே யுன்னை ஓலமிட்டலறி யுலகெலாந் தேடியுங் காணேன்" (அருட்2) என வருவனவற்றாலுமறிக. தெருவு தொரு அலறிலை என்றது அன்பின்மையால் தெருவுதொறும் இறைவனைத் தேடி அலறுகின்றாயுமில்லை என்றவாறு.

"மருளிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருக்கத்
தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமா னென்றேத்தி"

ஏசறவு 9

என்பதும் ஈண்டு அறியற்பாலது. துணையிலி நெஞ்சு என்றது உயிராகிய எனக்குத் துணையாதல் இல்லையான நெஞ்சு என்றவாறு. பிணநெஞ்சு என்றார் ஆடுதல் பாடுதல் பதைத்தல் முதலிய செயல்களைச் செய்யாமல் உயிர் நீங்கிய உடல்போற் கிடத்தலின்.

இதன்கண், ஆடல்பாடல் முதலிய அன்பின் செயல்கள் உயிரின் தூய்மைக்கு இறைவன் திருவருளாற் கிடைக்க வேண்டியன என்பது பெறப்படுதலின் ஆத்தும சுத்தி என்னும் நான்காம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

*ஆழ்ந்த நம்பிக்கை இமயமலை போன்றது. அதை எவராலும் அசைக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே.

**ப-ரை:**

பிண நெஞ்சே- பிணம்போலப் பயனற்றுக் கிடக்கும் மனமே, அறிவு இலாத என்னை புகுந்து ஆண்டுகொண்டு- தன்னை அறியும் உண்மையறிவு இல்லாத அடியேனை வலிய வந்து ஆளாகக்கொண்டு, அறிவதை அருளி- தன்னை அறிதற்குக் கருவியாகிய அவ்வுண்மை யறிவைத் தந்தருளி, மேல் நெறி எலாம் புலம் ஆக்கிய எந்தையை- மேலாகிய வீட்டிற்குரிய வழிகள் எல்லாவற்றையும் புலப்படச் செய்த எங்கள் தந்தையும், பந்தனை அறுப்பானை- பாசப்பிணிப்பினை ஒழிப்பவனுமாகிய இறைவனை, பிறிவு இலாத இன் அருள்கள் பெற்றிருந் தும்- எஞ்ஞான்றும் நீங்குதலில்லாமைக்கு ஏதுவாகிய இனிய அருள் உதவிகளை எளிதாகப் பெற்றுக்கொண்டிருந்தும், மாறாடுதி- தடுமாறுகின்றாய்; கிறி எலாம் மிக கீழ்ப்படுத்தாய்- அத்தடுமாற்றத்தினால் பொய்ந்நெறிகளெல்லாம் மேற்பட என்னைக் கீழ்ப்படுத்தி விட்டாய்; என்னை கெடுமாறு கெடுத்தாய்- அங்ஙனம் கீழ்ப்படுத்தமையால் என்னைக் கெட்டுப்போமாறு கெடுத்துவிட்டாய்; உன் இயல்பினை என்னென்பேன்.

பிணநெஞ்சே, அறிவில்லாத என்னை வலியவந்து அடிமைகொண்டு தன்னை அறி தற்குக் கருவியாகிய உண்மை அறிவினைத் தந்தருளி வீட்டு நெறிகள் எல்லாவற்றையும் புலப்படுத்திய எந்தையும் பந்தனை அறுப்பானுமாகிய இறைவனை எஞ்ஞான்றும் பிரியாமைக் கேதுவாகிய இன்னருள் பெற்றிருந்தும் தடுமாறுகின்றாய்; அத்தடுமாற்றத்தினால் பொய்ந்நெறி களெல்லாம் மேற்பட என்னைக் கீழ்ப்படுத்தி விட்டாய்; அங்ஙனம் கீழ்ப்படுத்தமையால் என்னைக் கெடுமாறு கெடுத்து விட்டாய்; உன் இயல்பினை என்னென்பேன் என்பதாம்.

அறிவு- இறைவனை அறியும் உண்மை அறிவு. புகுந்தாண்டு கொண்டு என்றது இறைவன் தானே வந்து ஆளாகக் கொண்டு என்றவாறு.

"தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்" — திருவெம் 6.

"பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே" — கோயின்மூத் 8.

"எனைத்தான் புகுந்தாண்டான்" — உயிருண்ணி 4.

"பொருளா வென்னைப் புகுந்தாண்டு" — திருக்கோவை 73.

எனப் பிறாண்டும் அடிகள் அருளியமை காண்க.

அறிவதை என்பதில் அது இறைவனை அறியும் உண்மை. அறிவை (ஞானத்தைச்) சுட்டியது. மேல்நெறி என்றது வீட்டு நெறியை. புலமாக்கல்- அறியச் செய்தல். பந்தனை அறுப்பானை- சிவநெறிக்கட் சேறற்குத் தடையாகவுள்ள பாசப் பிணிப்பை ஒழிப்பவனை.

"பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்" — பூவல் 2.

"பந்த மறுக்கும் ஆனந்த மாக்கடலே" — கோயிற் 9.

*கோபம் அன்பை அழிக்கும், கர்வம் அடக்கத்தைக் கெடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடியார் பந்தனை விண்டறநல்கும் எங்கள் பரமன்" வார்த். 5.
"பந்தமறுத் தாண்டு.... அருளி வாறு" அச்சோ 6.

என அடிகள் அருளியவாறுங் காண்க. எந்தையை, அறுப்பானை என்னும் இரண்டாம் வேற்றுமைகள் "பிறிவு" என்னும் தொழிற் பெயரைக்கொண்டு முடிந்தன. பிறிவு- பிரிவு. "பிறியும் மனத்தார் பிரிவரிய பெற்றியனை" குலாப் 4. பிறிவிலாத அருள்- தன்னை என்றும் பிரியாமைக்கு ஏதுவாகிய அருள். இலாத என்னும் எச்சம் ஏதுப்பொருட்டு. இன்னருள்- இனிய அருள். "மண்ணுழை யாவுமறிதில்லை மன்னன தின்னருள் போல்" திருக்கோவை 348. இன்னருள் பெற்றிருந்தும் என்பதில் உம்மை தடுமாறாதிருப்பதற்குரிய அருள்கள் பெற்றிருந்தும் பயிற்சி வயத்தால் தடுமாறுகின்றாய் என உயர்வு சிறப்பு. மாறாடுதல்- தடு மாறுதல். கிறி- பொய். வஞ்சனையுமாம். "கிறியும் கீழ்மையுங் கெண்டையங் கண்களும்" அற்புதப் 10. மாறாடுதலினால் பொய்ந்நெறிகளெல்லாம் மேலோங்குதலின் "கிறியெலாமிக" என்றார். அங்ஙனம் மிகுதலால் யான் கீழ்படுதலின் "கீழ்ப்படுத்தாய்" என்றார். கெடுமாறு கெடுத்தாய் எனக் கூட்டுக.

மேலைத் திருப்பாட்டில் (சத13) நெஞ்சு தூய்மையடைவதற்கு உதவியான பாடல் ஆடல் முதலிய செயல்கள் அற்றுக்கிடந்தமையைக் கூறி, இத்திருப்பாட்டால் உதவி செய்யாமையோடு மாறாடிக் கீழ்ப்படுத்தி என்னை ஒருவாற்றானும் உய்தி கூடாதபடி கெடுத்து விட்டாய் எனப் பயனற்றுக்கிடக்கும் மனம் என்னைப் பயனற்றுப் போகும்வண்ணம் செய்த தனைக் கூறியருளினார்.

இதன்கண், பிறிவிலாத இன்னருள் பெற்றிருந்தும் கிறியெலாம் மிகக் கீழ்ப்படுத்துக் கெடுத்த தம் மனத்தினைக் கடிந்து கூறும் வாயிலாக அதனைத் தூய்மைசெய்து தரல் வேண்டுமென வேண்டிக் கோடல் புலப்படுதலின் ஆத்துமசுத்தி என்னும் நான்காம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 32.

(தொடரும்...

## வெம்பிணி அகற்றிடுவான்

தொண்டைமானாற்றங் கரை வீற்றிருந்தே
தொண்டர் துயர் துடைத்திடுவான் தோகை மயில் வாகனன்

பிரணவப் பொருளை உரைத்துமே சற்குரு நாதன் ஆனவர்
சரவணப் பொய்கையில் உதித்தே சரவணன் நாமம் கொண்டவர்

அனவரதமும் அன்னம் வழங்கிடும் செல்வச் சந்நிதியில்
அன்னதானக் கந்தனாய் அருளாட்சி செய்கின்றான்

உடற்பிணி உளப்பிணி இரண்டினையும் ஒருங்கே போக்கிடுவான்
உயிர்ப்பிணி தன்னையும் இல்லாதே ஒழித்திடுவான்

எப்பிணி கண்டவரும் செல்வச் சந்நிதி வந்திடினில்
வெம்பிணி அகன்றுமே விரும்பியது அடைந்திடுவார்

-திருமதி புனிதவதி சண்முகலிங்கம்-

*வீணாகாத ஒரே விஷயம் உழைப்பு மட்டுமே.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் மகிமை

- திருமதி பொன்னுத்துரை திலகவதி அவர்கள் -

சக்தியைத் தெய்வமாக வழிபடும் முறை உலகெங்கும் இருந்து வருகிறது. அவளின் வழிபாட்டின் ஒப்பற்ற மகிமையையும் புனிதத் தன்மையையும் எவராலும் கூறமுடியாது. அவளைத் தாயாக வணங்கும் பெருமை சைவ சமயத்தின் சிறப்பை உணர்த்துவதாகும். அவளின் அன்பையும் அருளையும் அளந்து பார்க்க முடியாதளவிற்கு அருள் நிறைந்தவை.



சக்தியின் வழிபாடு இம்மைக்கும், மறுமைக்கும் பேரின்பத்தைத் தரும். நாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் அனைத்தும் அந்த சக்தியின் செயலாலேயே நடக்கின்றன. அவள் எம்மை பஞ்சபூதங்களாலே ஆக்கியுள் ளாள். அவள் பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்பவள், சகல சித்தியும் கொடுப்பவள், தஞ்சமடைந்தோரைக் காப்பவள். தாய் அன்பை விட ஒரு அன்பில்லை. இதனால்த்தான் இறை வனை தாயாகக் கொண்டு வழிபடுகின்றோம்.

தாய்க்கும், பிள்ளைக்கும் இடையே காணப்படும் அன்பு உன்னதமானது. உலகில் வேறு எதுவும் அதற்கு ஈடாகாது. தந்தை இடத்தில் பிள்ளை அதிக உறவு வைப்ப தில்லை. ஆனால் தாயின் அரவணைப்பில் தாய் நன்மை செய்தாலும், தீமை செய்தாலும் தாயன்பு என்றும் மாறாது. இறைவன் எங் களுக்கு அன்பை அள்ளிச் சொரிகிறான். அவர் எங்களுக்கு தந்தையாக மட்டுமன்றித் தாயாகவும் இருக்கிறார். மனம் இடைவிடாமல் சக்தியைப் போற்றினால் எமது மனம் சாந்தி பெறுகிறது. வெற்றி, வீரம், கல்வி, செல்வம், இனிமை என அனைத்தையும் சக்தி தருவாள். நாம் சக்தி சக்தி எனக் கூவி அழைத்தால் "கன்றின் குரலைக்கேட்ட தாய்ப் பசுவைப்போல் கதறிக்கொண்டு எங்கள் முன் ஓடி வந்து குறைகள் தீர்ப்பாள்.

தாயின் அன்பைக் காட்ட ஒரு கதை. அதாவது ஒருநாள் பெருமானார் (ஸல்) தமது சீடர்களுடன் இருந்தார். அப்பொழுது ஒருவன் வந்து "பெருமானாரே ஓர் அற்புத சம்பவம் என்று கூறினான். அது என்ன அற்புத சம்பவம் எனக் கேட்டார். நான் ஒரு புதரைத் தாண்டிவரும்போது கீச்சிடும் குரல் கேட்டது. நான் எட்டிப் பார்த்தேன் இரண்டு

வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறாக் குஞ்சுகள் இருப்பதைக் கண்டேன். குஞ்சுகளைப் பிடித்து என் மேற்சட்டைக்குள் வைத்துக்கொண்டு வந்தேன். அப்போது தாய்ப்புறா பறந்து வந்தது. குஞ்சுகளைக் காணாது அழுகுரல் எழுப்பி தத்தளித்தது. நான் என் மேலங்கியைத் திறந்து காட்டினேன். தாய்ப்புறா எனது மேலங்கிக்குள் பறந்து தனது குஞ்சுகளை அணைத்துக் கொண்டது எனக் கூறியபடி தன் மேலங்கியைத் திறந்து காட்டினார். அவற்றைப் பார்த்ததும், "உடனேயே கொண்டு சென்று விட்டுவிடு" எனப் பெருமானார் கூறினார். இது இஸ்லாமிய கதையாகும்.

ஆதி சங்கரரும், பட்டினத்தடிகளும் தாயின் இறுதிக்கிரியை செய்து முத்தியின்பம் பெறச் செய்தனர். ஓர் அன்னையின் அன்பு அளவு கடந்தது என்பதை நாங்கள் அறிகிறோம். இதிலிருந்து எங்கள் அன்னை சக்தி உலக உயிர்களில் எவ்வளவு அன்பாக உள்ளாள் என்பதை அறியமுடிகிறது.

சக்தி வழிபாட்டின் உயர்ந்த புனிதத் தன்மையை உலகிற்கு வாக்காலும், வாழ்க்கையாலும் விளக்கிய பெருமை பகவான் இராமகிருஷ்ணரையே சார்ந்ததாகும். சாரதா மணி தேவியாருடன் நடந்துகாட்டிய வாழ்வு உன்னத லட்சியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அண்ட சராசரங்கள் யாவும் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பது சக்தி. சக்தியின் ஆற்றலும், மகிமையும் அளவிடுவதற்கு அரியன. ஆணவம், அறியாமை, மிருகத் தன்மை ஆகியவற்றை ஒழித்து ஆன்ம ஞானம் பெற சக்தி வழிபாடுதான் சிறந்தது.

சக்தியைத் துதிக்கும் சுலோகங்களில் லலிதா சகஸ்ர நாமம் தனிச்சிறப்புடன் குறிப்பிடப்படுவது. "நாம பாராயணப்பீதா" என்ற திருநாமம் அம்பாளின் திருநாமம். இத் திருநாமத்தைச் சொன்னால் அருளும் பொருளும் ஆசிகளாகக் கிடைக்கும். "சாத்தியப்பிரசாதினி" என்ற திருநாமத்தை துதித்தால் நமக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்து அருளுவாள். "நிர்வாண சுகதாயினி" என்ற திருநாமத்தைத் துதித்தால் இகத்தில் எல்லா ஆசைகளும் ஈடேறுவது மட்டுமின்றி மோட்சமும் கிட்டும். சக்தியை வழிபடுவோர் எல்லோரும் லலிதா சகஸ்ர நாமத்தைச் சொல்லலாம். இவ் உலக வாழ்க்கையில் நற் பயன்களையும் தொடர்ந்து மோட்ச சக்தியையும் தருவாள்.

தீ சுடர்விட்டு எரியும்போது நுனியில் நீல நிறம் படரும். சிவப்பாக எரிவது சிவம், நீலம் பரவியிருப்பது அம்பாள். நம்மைப்போல் ஸ்தூல சரீரம் எம்பிராட்டிக்கு இல்லை, தோல் இல்லை, ரத்தம் இல்லை, எலும்பு இல்லை. அவள் ஞானாம்பாள். அவ்வளவும் ஞானம் ஞானமேதான். சிவனின் நெற்றிப் பொட்டில் தோன்றிய பொறியொரு ஆறும் சரவுணப்பொய்கையில் தவழ்ந்து மகிழ்வோடு மாதுமை மார்போடு அணைத்து வேலைக் கொடுத்து சூரனை அழித்து மூவுலகுக்கும் தாய் ஆனாள்.

எங்களை ஆட்கொண்டு ஆதரிக்கும் தாயே எங்களை ஆதரிப்பாயே. உன்னையே நம்பி வாழ்வோமம்மா.

ஓம் சக்தி ஓம்.

உங்களைவிட உயர்ந்தவர்களிடமும், உங்களுக்குச் சமமானவர்களிடமும் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். ஆனால், அதைவிட முக்கியம் உங்களைவிடக் கீழான நிலையில் இருப்பவர்களிடம் காட்டும் நேர்மைதான்.

*உயர்ந்த பண்புக்கு அடிப்படை சிறுசிறு தியாகங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 58. திருவருள் ஒளியைக் காணும் முறை

ஓராதே ஒன்றையும் உற்று உன்னாதே; நீ முந்திப்
பாராதே; பார்த்ததனைப் பார்.

**பொருள்:**

மனம், மொழி, மெய்களின் தொழிற்பாடாகிய முயற்சிகளுள் யாதொன்றையும் உன்னுடையதாகக் கருதாதே. அம் முயற்சியால் விளையும் நலம் தீங்குகளை உன்னுடையனவாகக் கொண்டு அவற்றில் அழுந்தாதே. தற்போதம் நீங்கிய இடத்து வேறற விளங்கி நிற்பதாகிய திருவருளை உனது தற்போதத்தினால் காண முற்படாதே. உன்னறிவில் நிலைத்து நின்று உன்னைக் கண்டு வருவதாகிய அத்திருவருளை மனம் அசைவற நின்று காண்பாயாக.

**சொற்பொருள்:**

ஒன்றையும் ஓராதே- மனம், மொழி, மெய்களாற் செய்யும் செயல்களுள் எந்த ஒன்றையும் உன்னுடையதாகக் கருதாதே, உற்று உன்னாதே- அச்செயல்களால் விளையும் நலன் தீங்குகளை உன்னுடையனவாகக் கொண்டு அவற்றில் அழுந்தாதே, நீ முந்திப் பாராதே- திருவருளை உன்னுடைய தற்போதத்தால் காண முற்படாதே, பார்த்ததனை- உன் அறிவில் நின்று உன்னைக் கண்டு வருவதாகிய அத்திருவருளை, பார்- மனம் அசை வற்று நின்று காண்பாயாக.

**விளக்கம்:**

எந்நிலையிலும் தனக்குத் துணையாய் நின்று உதவும் திருவருளை உயிர் மறந்து யான் என முனைத்து நிற்றலே சீவபோதம் அல்லது தற்போதம் எனப்படும். "இந்த உலகத்தில் நான் வாழ்கிறேன். இவை எல்லாம் எனக்கு உரிய பொருள்கள். நான் நினைத்தால் எந்த இன்பத்தையும் அனுபவிக்கலாம்" என்று வரும். "நான் நான்" என்ற நினைப்பே சீவபோதம்.

சீவபோதம் இருக்கும்வரை திருவருள் வெளிப்படாது. ஓர் எடுத்துக் காட்டுக் கூறி இதனை விளக்கலாம். மேட்டினை அடுத்து ஒரு வயல் இருக்கிறது. அருகிலேயே ஆறும்

உழைப்பிற்கு ஓர் உதாரணம் எறும்பு. மற்றொன்று இதயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடுகிறது. ஓடி என்ன பயன்? மேடு இடையில் தடையாக இருப்பதனால் ஆற்று நீர் வயலில் பாய முடியவில்லை. வயலுக்கு நீர் வேண்டுமானால் ஆற்றோரத்தில் இருக்கிற மேட்டினை வெட்டிவிட வேண்டும். பிறகு ஆற்றுநீர் தானே வயலில் பாயும்.

வயல்போல இருப்பது உள்ளம். தடை செய்கின்ற மேடாக இருப்பது தற்போதம். அதனை நீக்கினால், தன் முனைப்போடு மற்றச் செயல்களைச் செய்யாமல் மனம் அடங்கி மௌனமாக இருந்தபடி இருந்தால் அருள் அங்கே வரும்.

"யான் எனதென்றற்ற இடமே திருவடி" என்பார்கள். யான் என்ற அகங்காரத்தையும், எனது என்ற மமகாரத்தையும் நீக்கினால் அங்கே திருவருள் வெளிப்படும் என்பது இதன் கருத்தாகும்.

ஒரு கவிஞர் பின்வருமாறு சொன்னார்.

"நான் மறையைக் கற்றவனா ஞானி? - தன்னுள்
நான் மறையக் கற்றவனே ஞானி"

என்று அழகாக விளக்கம் அளித்தார். நான் மறையாகிய வேதங்களைக் கற்றதனால் மட்டும் ஒருவன் ஞானியாகிவிட முடியாது. நான் என்று எழுகிற தற்போதம் மறையக் கற்றவனே உண்மையான ஞானியாவான் என்று நயம்படக் கூறினார்.

எனவே, தன் முனைப்புத் தோன்ற நில்லாமல், உரையும் உணர்வும் அற்று அசைவற்று நிற்பின், அருளொளியாகிய சிவஞானம் உன்னறிவில் தானே வெளிப்பட்டு உன்னை அடக்கிக் கொள்ளும் என்பது மாணவனுக்கு ஆசிரியர் கூறும் அறிவுரையாகும்.

## 59. ஒளிக்குள் ஒளிந்து நில்!

களியே மிகுபுலனுமாக் கருதி ஞான
ஒளியே ஒளியா ஒளி.

**பொருள்:**

ஞானமாகிய அருள் வழியாக உண்டாகும் இன்பத்தையே அடையத்தக்க மேலான பேரின்பமாக உணர்ந்து, அத்திருவருள் ஞானத்தையே பற்றாகப் பற்றி நின்று, அந்த ஞான ஒளிக்குள் புகுந்து நீ ஒளிந்து நிற்பாயாக.

**சொற்பொருள்:**

களியே- முதல்வனை அவனது அருள் வழியாகக் காணுமிடத்துத் தோன்றுகிற இன்பத்தையே, மிகு புலனுமா- அடையத்தக்க மேலான பேரின்பமாக, கருதி- உணர்ந்து, ஞான ஒளியே- அத்திருவருள் ஞானத்தையே, ஒளியா- பற்றாகப் பற்றி நின்று, ஒளி- அந்த ஞான ஒளிக்குள் புகுந்து நீ ஒளிந்து நிற்பாயாக.

**விளக்கம்:**

**இனிய சுவைக் கரும்பு:**

இறைவன் "கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியை ஒத்திருப்பன் அந்த முத்தியினில்" என்பர். பார்த்தாலும் நினைத்தாலும் பரிந்து உள்ளுணர்ந்தாலும்

முதலாவது செல்வம் ஆரோக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும் இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பாக அவன் இருக்கிறான் என்பர்.

**முன்பு கண்டறியாத இன்பம்:**

இத்தகைய இனிய பொருளாகிய அவனை நமது அறிவாகிய பாச ஞானத்தால் அறிய முடியாது. அவனது அறிவாகிய பதி ஞானத்தாலேயே அவனை அறிய முடியும். அருளே பதி ஞானம் எனப்படுகிறது. பேரின்பப் பொருளாகிய பதியைப் பதிஞானமாகிய அருள் வழியாகக் காணுமிடத்து, முன்பு என்றும் கண்டறியாத ஓர் இன்பம் தோன்றும். ஞான நெறியிற் செல்லும் சாதகன் அதனையே அடையத்தக்க பெரும் பயனாகக் கருதிப் பற்ற வேண்டும் என்பார், "களியே மிகு புலனுமாக் கருதி" என்றார்.

**பதி ஞானமாகிய ஒளி:**

அருளாகிய பதிஞானம் ஒளியாய் இருப்பது; உயிரில் உள்ளொளியாய்க் கலந் திருப்பது. இதுவரையில் கருவிகளால் வரும் பாச ஞானத்தைப் பற்றி நின்ற சாதகன் அப் பாசஞானத்தை விடுத்துத் தன்னுள் விளங்கும் பதி ஞானத்தையே தனக்குப் பற்றுக்கோடாகப் பற்ற வேண்டும் என்பார். "ஞான ஒளியே ஒளியா" என்றார்.

**ஒளியிலே ஒளிந்து நில்:**

அவ்வாறு பதி ஞானமாகிய ஒளியையே பற்றாகப் பற்றி நீ அதனுள் ஒளிந்து நிற்பாயாக என்று மாணவனுக்கு அறிவுறுத்துகிறார் ஆசிரியர்.

இருளான இடத்திலேதான் ஒளிந்து நிற்கமுடியும். ஒளியிடத்தில் எப்படி ஒளிந்து நிற்பது! இஃது உலகியலில் நடவாத காரியம். ஆனால் அருளியலில் இந்நிலை மாறுகிறது. இங்கே, ஞான ஒளியில் சாதகன் ஒளிந்து நிற்க வேண்டும். அதன் கருத்து, அவன் தன்னை இழந்து, யான் எனது என்னும் நினைப்பு இன்றித் திருவருளின் வசப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும்.

ஞான ஒளியிலே புகுந்து நின்றால் உலகப் பொருள்களிலே அவனது கருத்துப் போகாது. தண்ணீருக்குள் மூழ்கி நிற்பவனுக்கு வெளியிலுள்ள பொருள்கள் எப்படித் தெரியும்? அதுபோல, ஞானத்துள் மூழ்கி நிற்பவனுக்கு வெளியுலக விடயங்களாகிய இன்ப துன்பங்கள் தோன்றுதலும் இல்லை. அவற்றால் அவன் கவரப்படுதலும் இல்லை.

**நாவுக்கரசர் வாழ்வில்:**

நாவுக்கரசர் வாழ்வில் நிகழ்ந்த ஒன்றை இங்கே நினைத்துப் பார்க்கலாம். அவரை வெய்ய நீற்றறையில் விடுத்துக் கதவைத் தாளிட்டுக் காவலும் இட்டனர். ஆளுடைஅரசு அதனுள்ளே சென்றபொழுது அம்பலத்தில் ஆடல் புரிந்தருளும் பெருமானுடைய தாள் நிழலைத் தலைக் கொண்டார் என்றும், மூண்ட மனம் நேர் நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார் என்றும் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

தாள் நிழலைத் தலைக் கொண்டார் என்பது, அவர் தன் செயலற்றுத் திருவருளுக்குள் அடங்கி நின்றார் என்பதைக் காட்டும். "மூண்ட மனம் நேர் நோக்கி" என்பது, தன்னறிவில்

*ஆற்றலைவிட ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொன்றும் புலப்படாது திருவடி நினைவில் உறைந்து நின்ற அவரது நிலையைக் குறிக்கும்.

இவ்வாறு அவர் ஞான ஒளியில் ஒளிந்து நின்றமையால் ஊனம் இலராகி இருந்ததோடு, ஆனந்த வெள்ளத்தின் இடை மூழ்கி உவந்திருந்தார்.

இவ்வரிய நிகழ்ச்சியை நினைப்பிக்கும் வகையில், "களியே மிகு புலனுமாக் கருதி ஞான ஒளியே ஒளியா ஒளி" என்றார் ஆசிரியர் எனலாம்.

(தொடரும்...

## சக்திவேலின் ஞானஒளியே சந்நிதியின் மோட்சார்ந்த வழி

இருள்சூழ் கண்ணின் மலகேவலத்தினிதமின்றி எவ்வுயிரும்
குருவாதி முன்றுமுனமுய்த்த தவத்தினுளதாகி நின்று
இருவேறு கன்மமிசைவித்தருத்து முருகா யானுமிசைப்பேன்
பெருமாயை நீத்ததிருமேனி கொண்டென்கண் காணவா குமரா!

வாதங்கடந்து பலமாயை கன்மவகையுங் நீக்கியாளும்
ஏதங்கடந்து பொருளொன்றுமின்றி எழுகின்ற எவ்வுயிரும்
போதங்கடந்து துரியங்கடந்த பொருளோயை யானறிவேன்
வேதங்கடந்த திருமேனி கொண்டென்விழி காணவந்திடுவாய் வேலா!

யோகத்தினாலும் முணரப்படாமையுயர் ஞானயோக நிலையை
பாகத்தில் சேர்த்து படுகின்ற பாதபதுமங் கெடாதுதுதிக்க வைத்து
யாகத்தினான பயனாந்துறக்கவைத் தெம்மைகளிப்பார்வை நீக்கி
போகத்தின் மல்கவிடாதிடரின்றி யாண்டருளும் ஞானவேல் சந்நிதியே!

கேடாமெம்மனதைமுறு காரணங்கள் சேராவிடைநிறுத்தி பாடாதுணரவைத்த
பரமஞான செந்தில்வேல் மோகனனேயென்றும் பொங்குற்றவரம் புகலும் கந்தனே
வீடாமை வேண்டுமதுவன்றி எம்முள்ளவிழைவுக்குன்னருள் வேண்டுமய்யா
கோடாதநவமணி கணக்கல்லா நின்னடிப்பதம் நாமுறல் வேண்டுவதேயென்றும் சரவணபவனே!

என்மனமெங்கே நானெங்கே தவமெங்கே அலையுற்று மாழச் சோராதே
சின்மயசிற்குணக்குன்றோடுற்ற தொண்டை நீராடும் பலத்தினாலும்
மண்டு பெருந்தவம் மாற்றிச்சேரும் பாவம் போக்கிதருக்கிலாத் தவத்திலீர்ப்பாய்
என்றுமண்டர்தொழும் பெருங்கணத்தீருனை வேண்டப்பதங் கொடுத்தாழ்வாய் யென்றுமப்பனே!

ஆறாத என்னைஅருள் கூறும்படிவைத்த பேராறுடைய பெம்மானே!
கூர்வேல் கொண்டென்னுளங் குழையாதளித்த செல்வச்சந்நிதிப் பாலா!
ஏறாத மலையேற்றி ஏழுலகம் தொழநின்ற சதானந்தச் சண்முகனே!
பாராளப் பாமாலையாக பூஜைசித்தி முத்தி புகலவுறு செந்திநாதா!

-க. தெய்வேந்திரம்-

வாழ்க்கையின் நோக்கமே பிறருக்கு உதவி செய்வதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிசாம்பாள்

## (வறுமையிலும் வாய்மையின் சின்னம்)

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

முன்னொரு காலத்தில் வளமான பண்பட்ட தேசத்தில் வானம் பொய்த்ததால் பஞ்சம் ஏற்பட்டது. பொதுமக்கள் வறுமை அடைந்தனர். சிறார்கள் பஞ்சத்தினால் ஏற் பட்ட வறுமையால் உணவின்றிப் பசியால் வாடினர். (கொடிது கொடிது இளமையில் வறுமை- ஔவையின் பொன்மொழி)

அக்காலத்தில் அங்கு வாழ்ந்த கண்ணியமும் இரக்கமும் கொண்ட தனவந்த ரான பெரியார் ஒருவர் இச்சிறார்களின் பசி வாட்டத்தைக் கண்டு (வாடிய பயிரைக் கண்டு இராமலிங்க வள்ளலார் தாம் வாடியதுபோல) மனம் வாடினார். இவர்களுக்கு உதவ முன் வந்தார். முதலில் அவ்வூரிலுள்ள பசியால் வாடும் சிறார்களை எண்ணி இருபது பேர் எனக் கணக்கெடுத்தார். தமது வீட்டை அடைந்தார். தமது மனைவிய்ை அழைத்து சிறார்களின் விபரத்தைக் கூறினார். பத்தாவிற் கேற்ற பதிவிரதை சிறுவர்கள் விரும்பியுண் பதும் சத்துள்ளதுமான மோதகம் அவிக்க ஏற்பாடு செய்தார். சிறார்கள் இருபது பேரை யும் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென் றார். கூடையில் இருக்கும் மோதகத்தில் ஆளுக்கு ஒன்றாக எடுத்துச் செல்லுமாறு அன்புடன் தெரிவித்தார்.

யாவருக்கும் கடும்பசி என்பதால் வேக மாக விழுந்தடித்து ஒவ்வொரு மோதகத்தை எடுத்ததும் பெரியாருக்கு நன்றியும் கூறாது ஓடிவிட்டனர். அவர்களுள் ஒருவரான "கிரி சாம்பாள்" என்னும் சிறுமி பெண்ணினத் திற்கே அணிகலனான அடக்கம், பொறுமை, நற்பண்பு சேரக் கடைசியாக நின்று மெல்ல வந்து இருபதாவது மோதகத்தை எடுத்ததும் சிந்தையிலிருந்த அன்பு பாராட்ட ஈர விழி களால் இறைவனை வேண்டினாள். அருகே இருந்த பெரியவருக்கு நன்றி கூறிவிட்டு மெல்ல நடந்தாள். வீடு சென்றதும் தாயிடம் கொடுத்தாள். தாயின் சிந்தையிற் குடிகொண்ட அன்பும் பண்பும் உந்த இறைவனுக்கு நன்றி கூறினாள். அதனைப் பகிர்ந்து தனது மறு பிள்ளைகளுக்கும் கொடுத்தாள். பிள்ளைகள் வாஞ்சையுடன் உண்பதைக் கண்டு தான் மன அமைதியை அடைந்தாள்.

சிறுமி கிரிசாம்பாளின் அடக்கம் பொறுமையைக் கண்ட பெரியாருக்கு அவள் மீது பரிவு ஏற்பட்டது. அவளின் அடக்கத்திற் கும் பொறுமைக்கும் பரிசாக மறுநாள் அவிக் கும் மோதகத்தில் ஒன்றை மிகச் சிறியதாக அமைத்து அதனுள் ஆறு வெள்ளிக் காசை வைப்பித்து விட்டார். அன்றும் வழமைபோல அனைவரும் வந்தனர். இடிபட்டு - முந்தி ஒவ்வொரு மோதகத்தை எடுத்துக்கொண்டு அடுத்து நின்ற பெரியாரையும் நோக்காது ஓடி மறைந்தனர். அன்றும் கிரிசாம்பாள் இறைவனுக்கு நன்றி கூறிவிட்டுக் குனிந்து எடுத்த மோதகம் சிறிதாக இருந்தபோதும் "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று பேருவகையுடன் ஏற்றாள். இறையருளால் பெருமனதுடன் பெரியாரின் உபகாரத்திற்கு உளமார நன்றி கூறிவிட்டு

*நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல நடந்து தனதில்லம் ஏகினாள். பெரியாருக்கு கிரிசாம்பாளின் ஒழுக்கமும் பண்பும் வெகுவாகப் பிடித்துக் கொண்டது. அவளைக் கனிவான வார்த்தை பேசி அன்புடன் அனுப்பி வைத்தார். கிரிசாம்பாள் தாயிடம் மோதகத் தைக் கொடுத்தாள். தாயும் அன்புடன் வாங் கியபோது சிறியதாக உள்ளதே எனக் கருதாது பகுத்துக் கொடுக்க அதனைப் பிரித் தாள். மோதகத்திலிருந்து ஆறு வெள்ளிக் காசுகள் கலீரென நிலத்தில் விழுந்தன. தாயார் தனது வாய்மையின் சின்னமான மகளை நோக்கி, மகளே! இந்தக் காசுகள் ஏதோ தவறுதலாக வைக்கப்பட்டுள்ளது. மோதகம் மட்டும் எமக்குரியது. அதனுள் இருந்த பணம் பெரியாருக்குரியது. இக்காசுகளை உடன் சென்று கொடுத்துவிட்டு வருமாறு அனுப்பி வைத்தாள்.

கிரிசாம்பாள் ஓடோடிச் சென்று பெரியாரை அணுகி வணங்கிவிட்டு ஐயா, எனது மோதகத்துள் இந்த ஆறு வெள்ளிக் காசுகள் தவறுதலாக வைக்கப்பட்டது. இது உங்களுக்கே சேர வேண்டியது எனக் காட்டினாள். பெரியார் அதனைப் பார்த்ததும் கிரிசாம்பாளின் முதுகைத் தடவி அன்புடன், "மகளே! நாம் இப்பணத்தை மோதகத்துள் தவறாக வைக்கவில்லை. உனது அன்பிற்கும் அடக்கத்திற்கும் பொறுமைக்கும் வெகுமதியாக வைக்கப்பட்டது. இது உனது பொறுமைக்கும் நேர்மைக்கும் கிடைத்த பரிசின் சின்னமாகக் கொண்டு செல்லுமாறு" கூறினார். கிரிசாம்பாள் மீண்டும் பெரியாருக்கு நன்றி கூறிவிட்டு தமது வீட்டை நாடினாள்.

"வறுமையிலும் செம்மையாக வாழ வாய்மை வழி செய்யும்"

## எதுவும் நிரந்தரம் இல்லை

மன்னன் ஒருவன், ஒருநாள் தன் குருவை தன் அரண்மனைக்கு வந்து தன்னுடன் தங்கும்படி அழைத்தான். அதற்குச் சம்மதித்த குரு மறுநாள் அரசனைச் சந்தித்தார். சில நாட்கள் உன் விடுதியில் தங்கிப்போக வந்துள்ளேன் என்றார், அவர். மன்னனுக்கோ அதிர்ச்சி. அவன் குருவிடம் வருத்தத்துடன் கேட்டான், குருவே, இது என் அரண்மனை. இதை விடுதி என்று சொல்கிறீர்களே? என்று கேட்டான்.

அதற்குக் குரு கேட்டார், மன்னா, உனக்கு முன்னால் இந்த அரண்மனையில் யார் இருந்தார்கள்? மன்னன், எனது தந்தையார் என்று சொல்ல, மீண்டும் குரு அதற்கு முன் யார் இருந்தார்கள்? என்று குரு கேட்டார். அரசனும் என் பாட்டனார் என்றான். உடனே குரு, உன் தந்தை, பாட்டனார் எல்லாம் இப்போது எங்கே இருக்கிறார்கள்? என்று கேட்டார்.

மன்னனும், அவர்கள் இறந்து மேலோகம் சென்று விட்டார்கள், என்று சொன்னான். அதன் பின் குரு கேட்டார், உனக்குப் பிறகு இந்த அரண்மனையில் யார் இருப்பார்கள்? அரசன் சொன்னான், என் மகன், அதன் பின் என் பேரன், உடனே குரு ஆக, உன் பாட்டனார் சிலகாலம் இருந்தார். பிறகு போய்விட்டார். அதன்பின் உன் தந்தையார் இருந்தார் பிறகு போய்விட்டார். இப்போது நீ இருக்கிறாய். நீயும் ஒருநாள் மேலுலகம் போய் விடுவாய். உனக்குப் பின் உன் மகன் இங்கு வசிப்பான். அவன் போனபின் உன் பேரன் தங்கியிருப்பான். எனவே யாரும் இங்கே நிரந்தரமாக இருக்கப்போவதில்லை. இப்படி ஒவ்வொருவரும் சில காலம் மட்டுமே தங்கிப்போகும் இந்த இடத்தை விடுதி என்று சொன்னதில் என்ன தவறு? என்று கேட்டார். மன்னருக்கு குரு சொன்ன விளக்கம் ஆச்சரியத்தை உண்டாக்கியது மேலும் அவரது மனதில் ஒரு தெளிவும் பிறந்தது.

*வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 05

## இறப்பவர்களும் நிரந்தரமானவர்களும்

### 14. ஒன்றை வேறொன்றாகக் காண்பது.

அங்ஙனமாயின், மரணிப்பதுதான் எது? வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கலந்து குழப்புவதன் காரணமாக எமது கண்களின் முன் மரணத் தோற்றப்பாடு பார்க்கக்கூடியதாக உள்ளது. இந்தக் குழப்பம் ஒன்றின்மீது வேறொன்றைச் சுமத்திக் கூறும் அத்தியாசம் என்ற தத்துவக் கலைச்சொல்லினால் அழைக்கப்படுகிறது. நாம் ஒன்றிலே உள்ள கருத்தை விட்டுவிட்டு அதிலே வேறு ஒரு கருத்தைக் கொள்ளுகின்றோம். அந்தக் கருத்து இதுதான் என்று மாற்றிக் கூறுகின்றோம். எது உள்ளதோ அது மரணிப்பதாக இருக்காது. அத்துடன் எது இல்லதோ அது மரணிக்கவும் முடியாது. எனவே எது மரணிக்கின்றது என்று ஒருவரால் கூறமுடியாது. மரணத்தின் செய்முறை மாறுவதைப் பற்றிய ஒரு விடயமாகும். எனவே அம்மரணச்செயல் எதனதும் ஓர் அழிவு அன்று. நிலைகளின் மாற்றங்களில் ஒன்றை நாம் மரணம் என்று அழைக்கின்றோம். அந்த மாற்றம் பிரபஞ்சத்தின் பரிணாம விதிக்கு அத்தியா வசியம், தேவையானது ஆகும்.

### 15. மாறுவதை அறிகின்ற மாறாதது.

உண்மையில் நாம் ஒவ்வொரு கணமும் இறந்துகொண்டு இருக்கின்றோம். எமது உடலில் உள்ள உயிர்க்கலங்கள் தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை எமது உருவம் முற்றாக மாறுகிறது என உயிரியலாளர்கள் கருதுகின்றனர். அந்தவகையில் உடலில் உள்ள எல்லா உயிர்க் கலன்களும் தம்மைப் புதுப்பித்துக் கொள்ளுகின்றன. எனவே பல வருடங்களின் பின் நாம் வேறொரு புதியவர் ஆகின்றோம். அதுமட்டும் அன்றி நாம் வளரும்போது ஒவ்வொரு நாளும் மாற்றம் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது. நாம் குழந்தைப் பருவத்திலிருந்து இன்று குமரப் பருவத்துக்கு வளர்ந்துள்ளோம். ஆனால் நாம் எப்படி வளர்ந்துள்ளோம் என்று ஒருபோதும் கண்டது கிடையாது. வளருகின்ற இந்தச் செய்முறை உணரமுடியாத ஒரு விடயம் ஆகும். அத்துடன் வளர்ச்சி, மாற்றம் அன்றி வேறு ஏதும் இல்லை எனின் அது எப்படி உணரப்பட முடியாது? ஒவ்வொரு கணமும் நாம் வேறொருவராக மாறுகிறோம் என்பதை நாம் அறிவதில்லை. எனினும் எல்லா மாற்றமும் உணரக்கூடியதும், காணக்கூடியதும், அடையாளப்படுத்தக் கூடியதும் ஆகும். ஆனால் எமது வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நாம் ஒருபோதும்

கடும் காற்று மழை கூட்டும்; கடும் நட்பு பகை காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை அறிவதில்லை. நாம் ஒருபோதும் அதனை அடையாளம் காணுவதும் இல்லை. நாம் மாறுகின்றோம் என்று ஒருபோதும் உணர்வதும் இல்லை. மாறாத ஏதோ ஒன்று நம்மிடம் இருப்பதனாலேயே அவ்வாறு எம்மால் உணரமுடியாது உள்ளது. மரண பயத்துக்கும் வாழ்க்கை விருப்பத்துக்கும் பின்னால் மாறாத ஒன்றின் பண்பே அந்தப் புதிருக்குக் காரணமாகும்.

**16. இரண்டை ஒன்று என்னும் கற்பனை.**

மாற்றம் என்பது ஒரு நிலை மட்டுமே. அது ஒரு பொருள் அன்று. எனவே மாற்றம் உண்மையானது அன்று. ஆனால், எமது எல்லா நடைமுறை நோக்கங்களுக்கு ஆகவும் மரண காலத்தில் ஏதோ ஒரு பெரிய நிகழ்ச்சி சம்பவிப்பதுபோல எமக்கு அது தோன்றுகிறது. மரணம் என்ற பெயரைக்கேட்டதுமே நாம் பெரிதும் பயப்படுகின்றோம். மரணத்தின் அதிபயங்கர மான தன்மை எமது வாழ்வின் இரண்டு மட்டங்களுக்கு உரிமையான பண்புகளை இனங் காணுவதன் பயனாகவே அமைகின்றது. ஆன்மீகத் தன்மையை உலகியலுக்குக் கொண்டு வருவதனாலேயே அது நிகழ்கிறது. நாம் ஒரே நேரத்தில் இரண்டு விடயங்களைப் பார்த் துக்கொண்டு ஒரு விடயம் மட்டும்தான் என்று கற்பனை செய்கின்றோம். அத்துடன், அதன் அனுபவமும் இரண்டு வித்தியாசமான விடயங்களைக் கொண்டிருக்கவில்லை என்றும் நாம் கற்பனை செய்கின்றோம். உண்மையில் நிகழ்ச்சிகளின் ஓர் ஓட்டமே இருக்கின்றது. அது ஒரு செய்முறையின் தொடர்ச்சியான மாற்றம் ஆகும். அச்செய்முறையானது எமது அடிப்படையான வாழ்வின் ஒருமைத்தன்மை உடையதும், பார்க்க முடியாததுமான அம்சத் தோடு கூடியது ஆகும். அதனை நாம் ஆத்மன், உயிர், அகம், சைதன்யம் என்ற வார்த்தை களினால் அழைக்கின்றோம். இது எம்மிடமுள்ள அழிக்கமுடியாத அம்சமாகும். அத்துடன் அது எல்லைக்கு உட்பட்ட எல்லாவற்றிலும் செறிந்துள்ள மாற்றத்தின் தன்மையோடு கலந்து உள்ளது. நாம் எல்லைக்கு உட்பட்டவற்றின் உலகத்தையும், எமது தனிப்பட்ட உடலோடு கூடிய உலகத்தையும் எமது மனத்துள் புகுத்தி உள்ளோம். அத்துடன், எமது மனத்தினால் எம்மைத் தனிப்படுத்தி அறிவதும் எமது எல்லைக்கு உட்பட்ட ஒரு பண்பே ஆகும்.

**17. எல்லைக்கு உட்பட்டதும் எல்லை அற்றதும்.**

எல்லைக்கு உட்பட்டது எல்லை அற்றதோடு தன்னை இணைத்துக்கொள்ளப் போராடிக் கொண்டு இருக்கின்றது. அந்த எல்லை அற்றதின் உடைமையாக உள்ளதே எல்லைக்கு உட்பட்டது ஆகும். அத்துடன், எல்லைக்கு உட்பட்டது எல்லை அற்றதை நோக்கி நகரும் போராட்டமே பரிணாமத்தின் முழு வரலாறும் ஆகும். எந்த வேளையிலும், இந்த உலகின் எந்த இடத்திலும், எப்படிப்பட்ட எந்த ஒரு நகர்வும், எந்த ஒரு மாற்றமும் எல்லைக்கு உட் பட்டதில் இருந்து எல்லை அற்ற தன் திசையை நோக்கிய உத்வேகத்தின் ஒரு விளைவே ஆகும். வாழ்வின் எல்லைக்கு உட்பட்ட தன்மை உயிரின் ஒரு அசாதாரண நிலையாக இருக்குமட்டும் எவரும் ஓர் எல்லைக்கு உட்பட்டவராக இருக்க முடியாது. அந்த அசாதாரணத் தன்மை எப்பொழுதும் அப்படியே இருக்க முடியாது. அது தானே அத்தன்மையை வென்று கடப்பதற்கு முயற்சி செய்யும். அத்துடன், அது தன்னை உயர்ந்த நிலைக்கு விரிவாக்கிக்

*சிரட்டைத் தண்ணீர் எறும்புக்குச் சமுத்திரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு எல்லையற்றதை அடைவதை நோக்கிப் படிப்படியாக நகர்ந்துகொண்டு இருக்கும். எம்மிடமுள்ள எல்லைக்கு உட்பட்டது எல்லை அற்றதை நோக்கிச் செல்லும் இந்தத் தன்மையே இறப்பு, பிறப்பு என்பவற்றிற்குப் பின்னாலுள்ள உண்மையாகும். நாம் எதனை இறப்பு, பிறப்பு, மறுபிறப்பு என்று அழைக்கின்றோமோ அது எல்லாவற்றிடமும் உள்ள ஓர் அத்தியாவசிய அம்சமாகும். அந்த அம்சம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய எல்லை அற்றதன் ஒளியில் உள்ள எல்லைக்கு உட்பட்டதாகும். எம்மால் தொடர்ந்து எமது தனிப்பட்ட ஆளுமைகளைப் பேணிவர முடியாது. இரண்டு விநாடிகளுக்குக் கூட அதே தனி ஆட்களாக எம்மால் இருக்க முடியாது. ஒவ்வொரு விநாடியும் ஒரு பெரிய சாதனையின் திசையில் நாம் மாறிக்கொண்டும், நகர்ந்து கொண்டும் இருக்கின்றோம். ஆனால் எமது உணர்வு உடல், மனம் என்பவற்றின் எல்லைக்குள் உட்பட்டதோடு பிணிக்கப்பட்டுள்ளதனால் எமது முழு வாழ்வும் மாறியுள்ளதுபோலத் தோன்றுகிறது. அத்துடன், மனது தனக்கு உள்ளேயே அந்த மாற்றத்தை வைத்திருக்க முடியாத அளவு செறிவுமிக்கதாக ஆகும்போதும், அந்த எல்லைக்கு உட்பட்டதன் உருவத்தில் ஒரு மாற்றம் நிகழும்போதும், எமது அடிப்படை வாழ்வே ஓர் அழிவுச் செய்முறைக்கு உட்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது.

**18. இருவகை மாற்றங்கள்.**

இரண்டு வகையான மாற்றங்கள் உள்ளன. நாம் குழந்தையில் இருந்து குமரப் பருவத்துக்கு மாறும் எமது வளர்ச்சியைப் பொறுத்தவரை தினமும் நாம் கடந்து செல்லும் மாற்றங்கள் ஒருவகையானது. மற்றவகை மாற்றத்தை நாம் வழமையாக மரணம் என்று அழைக்கின்றோம். எமது எல்லைக்கு உட்பட்ட பகுதியின் உள்ளடக்கங்கள் ஒரு புதிய உருவத்தில் வளர்ச்சி என்ற வகையில் மாறிக்கொண்டு இருக்கும்போது அம்மாற்றத்தைக் குறிப்பிட்ட அளவு உணருவது இல்லை. கால - இட உலகில் நாம் உடல் என்று அழைக்கும் இந்தச் சிக்கலான தொகுப்பு அதன் வடிவத்தைப் பேணி வருவதனாலும், புலன் உலகில் இந்த உடலையே ஆன்மா என்று கருதுவதனாலும் கால - இட அமைப்பில் எமக்கு ஏதாவது கடுமையான மாற்றம் நிகழ்ந்துள்ளதை நாம் உணருவது இல்லை. இந்த உருவம் பேணப்படும்வரை நாம் எம்மை நாமாகவே உணருகின்றோம். ஆனால் இந்த எல்லைக்கு உட்பட்ட வடிவத்தில் ஒரு மாற்றம், பரிமாணச் செய்முறை நிலைமைகள் தேவைப்படும்போதும், நாம் கால - இட ஒழுங்கில் ஒன்றில் இருந்து மற்றொன்றுக்கு நகர்த்தப்படும்போதும் ஆளுமையின் ஒட்டுமொத்தமான அழிவு உள்ளதாகத் தோன்றுகிறது. (தொடரும்...

---

**ஆன்மிகச் சிந்தனை**

ஆன்மிக வாழ்க்கையில் ஒழுக்கத்திற்குத்தான் முதலிடம். இயல்பான நல்வாழ்க்கையின் மூலமே ஒருவர் ஆன்மிக வாழ்க்கையில் பிரகாசிக்க முடியும். ஆன்மிகம் பற்றிப் பேசினால் பயன் ஏற்படாது. வாழ்க்கையில் கடைப்பிடித்தால் மட்டுமே பயன் விளையும். மனத்தைத் தூய்மையுடன் வைத்துக்கொள்வதற்கு இறையருள் மட்டும் போதாது. இடைவிடாத பயிற்சியும் முயற்சியும் வேண்டும். ஒழுங்காகவும் நல்லவனாகவும் உலகில் மனிதன் வாழ்வதற்கு ஆன்மிக நூல்களும் சத்சங்கமும் துணை புரியும். சாஸ்திர வாக்கியங்கள், சான்றோர் அறிவுரைகள் முதலில் பின்பற்றுவதற்குக் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் முடிவில் அவை நமக்கு நன்மையையே தரும். சொல், செயல், சிந்தனைகளால் இறைவனுக்கும், மக்களுக்கும் தொண்டு செய்வதே கர்மயோகம். நாம் பணி புரியத்தான் வேண்டும். அதையும் பணிவோடு செய்யவேண்டும்.

*காய்ந்த மரம் வளைந்திருக்கும், குணமுடையோர் பணிந்திருப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானத்தால் வளமான வாழ்வை அடையலாம்

– திரு கே. குணாளன் அவர்கள் –

வளமான வாழ்க்கைக்கு தியானம் மிக அவசியம். மனித மனமானது ஒரு குரங்கிற்கு ஒப்பானது. எங்கும் அலைபாய்ந்த வண்ணம் இருக்கும். இப்படியான மனதை ஓர் கட்டுக்கோப்பிற்குள் கொண்டு வருவதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. இத்தகைய மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு தியானம் என்னும் பயிற்சி மிகமிக அவசியமாகிறது.

உயர்ந்த குறிக்கோளில் நமது மனதைச் செலுத்துவது தியானம் ஆகும். இது ஒரு புனிதமான செயல். இதனை யாரும் செய்து மனதை ஒருவழிப்படுத்தலாம். தியானத்தின்மூலம் நாடு போற்றும் உத்தமர்களாக வாழ்ந்த பெரியோர்களை நாம் அறிவோம். தியானம்மூலம் பரம்பொருளைக் கண்டு கொண்டவர்களும் இப்பூவுலகில் வாழ்ந்துள்ளனர் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தியானம் செய்வதற்கு பொருத்தமான இடத்தை முதலில் தெரிவுசெய்ய வேண்டும். தரையில் அமர்ந்து தியானம் செய்வதே சிறந்தது என்பது எனது கருத்தாகும். அதிலும் பூசை அறையே தியானத்திற்கு மிகவும் உகந்தது.

தியானம் ஆரம்பிப்பதற்கு முன் தேவாரங்களைப் பாடுவது சாலச் சிறந்தது. இதன் பின் "நான் தியானம் செய்யப் போகிறேன்" என எமக்கு நாமே சொல்லிக்கொள்ள வேண்டும். எம்மைச் சுற்றி உள்ள பொருள்களை முதலில் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். பின் எமக்கு அயலில், தூரத்தில் கேட்கிற ஒலிகளை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இவற்றை கண்களை மூடியவாறு இலகுவாக அமர்ந்தவண்ணம் செய்ய வேண்டும். இதன்போது இந்நிகழ்வுகள் யாவும் ஓரிடத்தில் மையம் கொள்வதுபோன்ற எண்ணக்கரு உருவாகும். இந்நேரத்தில் எண்களை எண்ணிக்கொள்ளலாம். அதேவேளையில் எமது மனம் ஒரு நிலைக்கு வருவது எம் கண்முன்னே நிழலாகும். மேலும் மூச்சை நன்றாக உள்ளே இழுத்து வெளிவிட வேண்டும். இவ்வாறு மாறி மாறிச் செய்வதன்மூலம் எமது மனதை ஒருநிலைப்படுத்தலாம்.

மேலும் உணர்வுகளிலும் அவதானத்தைச் செலுத்த முடியும். உச்சந்தலை முதல் உள்ளந்தாள்வரை ஒவ்வொரு உறுப்பிலும் தெரியும் உணர்வுகளை அவதானிக்கலாம். நடுங்குகிறதா? விறைக்கிறதா? சுடுகிறதா? போன்ற உணர்வுகளை கண்களை மூடியவாறு ஒவ்வொரு உறுப்பிலும் அவதானிக்கலாம். தியானம் செய்வதால் மன அமைதி, மகிழ்ச்சி என்பன கிடைக்கும். அதேநேரம் குரோத மனப்பான்மை, பொறாமை, வன்செயல், தீய எண்ணங்கள் போன்ற தீச்செயல்கள் யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோக ஏதுவாகவும் இத்தியானம் உதவிபுரிகிறது. தியானம்மூலம் எமக்கு நேர இருக்கும் ஆபத்துக்களையும் வெற்றி கொள்ளலாம். தியானம் செய்யும்போது எமது குடும்ப உறவினர்கள், அயலவர்களை மனதில் நினைந்து அவர்களுக்கு நன்மை உண்டாக இறைவனை வேண்டிக் கொள்ளலாம்.

*உயர்ந்த உள்ளங்களின் இரக்க குணமே கருணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஏழைகள், ஏதிலிகள், புலம் பெயர்ந்தோர், நோயாளர்களை நினைவு படுத்தி இவர்களின் துன்பம் நீங்க வேண்டும் எனவும் கடவுளிடம் முறையிடலாம். இன்னும் உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் நலமுடன் இருக்க வேண்டும் எனவும் எல் லாம்வல்ல இறைவனிடத்து விண்ணப்பம் செய்யலாம். எமக்கு துன்பம் செய்தவர்களை யும் நினைந்து அவர்களை மன்னித்துவிட நினைப்பது சாலச் சிறந்தது. இவ்வாறு சகல ரது துன்பங்களும் நீங்க வேண்டும் என தியானத்தின்போது வேண்டுவது மிகச் சிறந்த செயலாகும். இதனால் மன அமைதியும் நன்மையுமே கிடைக்கும். இவை தவிர வேறு பாதகம் ஏதுமில்லை.

மேலும் ஒரு மனிதன் தியானத்தின் மூலம் தன்னைத் தானே உணரும் நிலை தோன்றும். அவ்வேளையில் அடக்கம், பணிவு, அமைதி, பொறுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு என்பன தாமாகவே எம்மை வந்து சேரும். தியானத்தின்மூலம் பேரின்ப வாழ்வைப் பெற்றவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை நாம் அறிந்துள்ளோம். அப்படியான ஞானிகள் இன்றும் எம்முடன் வாழ்கின்றார் கள். அவர்களை இனங்கண்டு அவர்களின் அருளாசியை நாம் பெற்றுக்கொண்டால் வாழ்க்கையில் சிறப்புடன் வாழ்ந்து கொள்ள லாம். தியானத்தின்மூலம் எம் எண்ணங்கள், செயல்கள், எதிர்பார்ப்புகள் நல்லனவாகவே அமைகின்றன.

மனச் சஞ்சலத்தைப் போக்க இரண்டு நிமிட தியானம் போதுமானதாகிறது. இல்லற வாழ்வியலுக்கு ஒரு நாளைக்கு குறைந்தது இரு தடவைகள் பரம்பொருளை நினைத்து தியானம் செய்வது சாலச்சிறந்தது. தியா னத்தை நாளாந்த பழக்கமாக நாம் கைக் கொண்டால் அத் தியானமே பேரின்பத்தை அளிக்கும். இவ்வாறு நாளாந்தம் பெறும் பேரின்பமானது நாளாக நாளாக நீங்காத பேரின்பமாக மாறுகிறது.

தியானம்மூலம் எமது வாழ்க்கையில் கட்டுப்பாடு, இலட்சியம், நேர்மை, உண்மை ஆகியவற்றை தானாகவே கைக்கொண்டு வாழ்க்கையை வெற்றிகரமாக நடாத்தலாம் என்பதில் எவ்விதமான ஐயமும் கிடையாது.

எவன் ஒருவன் மனதை ஒருநிலைப் படுத்தி கட்டுப்பாடாக தியானத்தில் ஈடுபடு கின்றானோ அவனைக் கண்டு துன்பம் எனும் துஷ்ட மிருகம் தலைதெறிக்க ஓடும். மனி தன் மனிதனாக வாழ வேண்டும். அதை விடுத்து சுயநலம் மிகு மிருகமாக வாழ முயற்சித்தால் வாழ்வில் இடைஞ்சல்கள் எல் லாம் அவனை வந்து சேரும். மனிதராகிய நாம் அயலிலுள்ளோர்க்கு சிறு துன்பம் நேர்ந் தாலும் அதை அறிந்து ஆறுதல் கூறி அனைவரையும் நேசிக்கப்பழக வேண்டும். அதை விடுத்து தானுண்டு, தன் குடும்பம் உண்டென வாழ எத்தனிக்கக் கூடாது. எமது அறிவு வளர்ச்சி ஆன்மீக நெறியுடன் பிணைந்த தாக இருக்க வேண்டும்.

தியானம் செய்வதன்மூலம் ஒரு மனி தன் வீட்டிற்கும் கிராமத்திற்கும் நாட்டிற்கும் நற்பிரஜையாக வாழ்ந்துகாட்ட முடியும். தியா னத்தின்மூலம் எம்மை நாமே நல்லவர்களாக வும் வல்லவர்களாகவும் வாழ்க்கையில் மிளி ரச் செய்யலாம். தியானத்தின்மூலம் பெரிய பெரிய ஆபத்துக்களில் இருந்து மீண்டவர் களின் வரலாறுகளும் இருக்கின்றன. மனதில் கோபம், வன்மம் ஏற்படும் வேளைகளில் நாம் தியானத்தில் ஆழ்ந்தால் மனம் லேசாகி சந்தோஷம் மனதில் உருவாகும்.

மேலும் தியானம் செய்வதற்கு குறிப் பிட்ட இடத்தையோ, நேரத்தையோ தேர்வு செய்யாது, நினைத்த இடத்தில், நினைத்த நேரத்தில் கண்களை மூடியவாறு ஈடுபடக் கூடியவர்கள் நமக்கு தெரியாது நம்

மூடத்தன நோயை முற்றாக விரட்டும் மூலிகைகளே புத்தகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். காலம் பொன்னைவிட மேலானது. கடமை கண்ணைவிட மேலானது. இவர்களிடத்து கடமை உணர்வுதான் மேலோங்கி நிற்கும். இவர்களிடத்தில் பரம்பொருள் பற்றிய நினைவே எப்போதும் இருக்கும். இவர்களது எண்ணங்கள், சிந்தனைகள், செயற்பாடுகள், எதிர்பார்ப்புகள் யாவும் நல்லவைகளாகவே இருக்கின்றன.

எனவே நாமும் இன்றுமுதலாவது தியானத்தை முதன்மையாக்கி எமது வாழ்வை வளப்படுத்திக்கொள்வோமாக.

## உழைப்பின் மதிப்பு

ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு மகன். அவன் ஊதாரித்தனமாக தனது தந்தை சேர்த்த செல்வத்தை எல்லாம் செலவழித்து வந்தான். அதனால் செல்வந்தர் மிகுந்த கவலை அடைந்தார். அப்போது அந்த ஊருக்கு ஒரு துறவி வந்தார். அவரிடம் செல்வந்தர் தமது கவலையைக் கூறினார். அதற்கு அந்தத் துறவி, "உங்கள் மகனை இங்கு அனுப்பி வையுங்கள்..." என்று கூறினார்.

செல்வந்தர் தம் மகனிடம், "நமது ஊருக்கு வந்திருக்கும் துறவி மிகவும் சக்தி வாய்ந்தவர்..., அவரைப் பார்த்துவிட்டு ஆசி வாங்கி வா..." என்றார். அவனும் வேண்டா வெறுப்பாக "சரி" என்று ஒப்புக்கொண்டு துறவியைப் பார்க்கச் சென்றான். துறவியைச் சந்தித்தான்.

அவரிடம், "என் தந்தையார் உங்களைப் பார்த்து ஆசி பெற்று வரச் சொன்னார்..." என்றான். துறவியும், "நல்லது... நான் அந்த மலைமேல் ஏறப்போகிறேன்... இங்கே பார்! இந்தப் பலாப்பழத்தைத் தூக்கிக்கொண்டு என் பின்னால் வா! மலையின் உச்சியை அடைந்தவுடன் உனக்கு ஒரு உபதேசம் செய்யப்போகிறேன்..." என்றார்.

அவனும் துறவியை பின்தொடர்ந்து மலைமீது அந்தச் சிறிய பலாப்பழத்தைக் கஷ்டப்பட்டுச் சுமந்துகொண்டு ஏறினான்! இருவரும் உச்சியை அடைந்தனர். துறவி அவனைப் பார்த்து "இப்போது நீ சுமந்து வந்த பலாப்பழத்தைக் கீழே உருட்டிவிடு!" என்றார். அவனுக்குக் கோபம் வந்தது. "என்ன விளையாடுகிறீர்களா? ஏன் இப்படிச் செய்யச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"காரணம் இருக்கிறது. நீ உருட்டிவிட்ட பழத்தைத் திரும்பவும் எடுத்துக்கொண்டு மலை உச்சிக்கு வா...! பிறகு சொல்கிறேன்". அவனுக்குக் கோபம் அதிகமாகியது. "இது என்ன முட்டாள்தனமாக இருக்கிறது? உருட்டி விடச் சொன்னதே அபத்தம். அதைவிட அந்தப் பழத்தை மீண்டும் மலை உச்சிக்கு எடுத்துவர நான் என்ன பைத்தியமா, எவ்வளவோ கஷ்டப்பட்டுக்கொண்டு வந்த என் உழைப்பை ஒரு நொடியில் வீணடிக்கச் சொல்கிறீர்களே?" "உன் தந்தை கஷ்டப்பட்டு சேர்த்த நன்மதிப்பும் இப்படித்தான்! இந்தப் பலாப்பழம் போன்றது! நீ அதை உருட்டிவிடுவதுபோல் பாழ் செய்கிறாய்... மீண்டும் அதைச் சுமந்து வர நீ மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். உன் தந்தையின் நன்மதிப்பை நீ பாழ் செய்வது எந்தவிதத்தில் நியாயம்?" என்றார் துறவி. உண்மை தெளிந்த அவன் தலைகுனிந்து துறவிக்கு நன்றி சொன்னான். இருவரும் மகிழ்ச்சியுடன் கீழே இறங்கினர். தன் தந்தையிடம் மன்னிப்புக் கேட்க முடிவெடுத்து வீட்டைநோக்கி விரைந்தான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

வைத்தியர் திரு நந்தகுமார் தலைமையில் எம்மோடு வந்த இளைஞர் படை சென்றது. அங்கும் அவர்களின் பணி மிகமிக அவசியமாக இருந்ததை வகுப்பில் கலந்துகொண்ட பிள்ளைகளுடனும் அவர்களுக்கு உதவியாக வந்த ஆசிரியர்களுடனும் அளவளாவியபொழுது அறிய முடிந்தது. ஆம்! அவர்கள் கணித பாடத்தில் மிக மிக பின்தங்கிய நிலையில் இருப்பதை அறியமுடிந்தது. பல பிள்ளைகள் பெருக்கல் வாய்ப்பாடு பிரயோகத்தில் இடைஞ்சல் பட்டதையும் சுட்டிக் காட்டினர். என் அன்பான வாசகர்களே, இது அவர்களது பாடசாலைகளிலல்ல எமது பாடசாலைகளிலும் காணப்படும் மிக மிகத் திருத்தவேண்டிய குறைபாடாகும். இதனைக் கருத்திற்கொண்டு எனது பாடசாலையில் மூன்றாண்டுத் திட்டம் ஒன்றினூடாக எம் பிள்ளைகளை வழி நடாத்தி ஓரளவு வெற்றியும் கண்டதையும் பகிரலாம். ஆனால் இப்போ ஒரு பாடசாலையில் உள்நுழைந்து 10-11ஆம் வகுப்புகளில் உள்ள பிள்ளைகளிடம் வாய்ப்பாட்டைக் கேட்டுப்பாருங்கள். களநிலை புரியும். ஏன் உங்கள் வீட்டுப் பிள்ளைகளே உங்களுக்கு உரைகல்லாகலாம். இன்று கணிதபாடம் வீழ்ச்சியுற்றுக்கொண்டு போவதற்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக வாய்ப்பாட்டுப் பிரயோகத்தையுங் கொள்ளலாம். அதனாலேயே,

பெருக்கல் வாய்ப்பாடு தெரியாதான் வாழ்க்கை
இடுக்கண் மிகுந்து விடும்.

என்பது என் சொந்தக் கவி வரிகள் ஆக இப்பயிற்சி வகுப்பு இவர்களிற்கு ஓர் உந்து சக்தியாக இருந்ததையும் இது தொடர்ந்து நடாத்தப்படவேண்டும் என்ற அவசியத்தையும் உணர வைத்தது.

தொடர்ந்து மூன்றாங் குழுவான எனது குழுவில் சுவாமிகளும் வந்திருந்தார்கள். நாங்கள் சென்ற பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம் ஆசிரிய வள நிலையத்துடன் ஏற்ற இறக்கங்களுடன் மிக அழகான பல கட்டிடத் தொகுதிகளைக் கொண்டு காணப்பட்டது. சித்திர, சங்கீத தொழில்நுட்ப ஆய்வு கூடங்களுடன் வெகு நேர்த்தியாக பல அலகுகள் கொண்டு ஒழுங்கமைந்த பாடசாலையாக இருந்தது. அன்று ஞாயிறு விடுமுறை தினமாக இருந்த பொழுதிலும் பொறுப்பான ஆசிரியர்களுடன் சில மாணவர்களும் வந்திருந்து தமக்குரிய வேலைகளைப் பொறுப்புணர்வுடன் செய்துகொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக அங்கு நான் கண்ட கூட்டுப்பசளை தயாரிக்கும் அலகினைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். இவை கட்டங்கட்டமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. ஆரம்ப உற்பத்தி, இடைநிலைப் பேணுகை, இறுதி வியாபார நிலை என்று மிக நேர்த்தியாக அமைந்திருந்தது. எம்மால் அவதானிக்கப்பட்டு வியப்புற்றோம். எமது பாடசாலைகளில் பலவிதமான திட்டங்களைத் தொடங்குவோம். ஆனால் பல தொடர்ந்து இயங்கா நிலையில் தூர்ந்து போனதை அவதானித்தவன் என்ற வகையில் வியப்பு இரட்டிப்பாயிற்று. அதுமட்டுமல்ல நல்ல தரமான

அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக்கூடத் திறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுப்பசளை பைக்கற்றுகளில் அடைக்கப் பட்டு வியாபாரத்திற்குத் தயாராக இருந்தமையும் இங்கு குறிப்பிடலாம். எமது பகுதிகளில் சமதரை தொழுவங்கள், சிறப்பான மூலப் பொருள் வசதிகள் பலவிருந்தும் வீட்டுக் கழிவுகள் தொடக்கம், அலுவலக நிறுவனக் கழிவுகள்வரை வீணாகத் தேங்கி, அல்லது எரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதையும் கழிவகற்றலே பாரிய அச்சுறுத்தலாக இருப்பதையும் ஒரு கணம் சிந்திக்க வைக்கின்றதல்லவா? தொடர்ந்து ஆசிரிய வள நிலையம் என்ற அலகிற்குச் சென்றோம். எமது பாடசாலைகளில் அமையப்பெற்றதுபோல நவீன காட்சிப்படுத்தல், கருவி, உபகரண வசதிகளுடன் அழகான வள நிலையமாக அமைந்திருந்தது.

இப்பொழுதுதான் சேவையில் இணைந்துள்ள ஏறக்குறைய முப்பது ஆசிரியர்களைக் கொண்டதாக அவர்களது வகுப்பு தொடர்ந்துகொண்டிருந்தது. மும்மதத்தினரும் இருந்தனர். எம்மைக் கண்டதும் மிகவும் அன்போடு வரவேற்று ஆசனம் தந்து அமர்த்தினர். நாம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததையும் எம்முடன் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளும் இணைந்திருந்ததையும் அறிந்து, மிகவும் ஆனந்தித்தார்கள். அத்துடன் எமது அறிமுகத்தில் ஓய்வுநிலை அதிபரான எம்மையும் அறிந்தபொழுது எமது பட்டறிவும் தங்கள் பயிற்சிக்கு வளஞ் சேர்க்கும் என்று கருதி எமது கருத்தையும் பகிரும்படி கோரினர். நான் சற்றும் இதனை எதிர்பார்க்கா நிலையில் ஏதோ அந்த நேரத்தில் என் மனநிலையில் உதித்தவற்றை ஒரு சிறிது நேரத்தில் மொழிந்தவற்றையும் இத்தொடரில் ஆவணப்படுத்த ஆசைப்படுகிறேன்.

அதற்குமுன் அவர்களது பயிற்சியில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த விடயங்களை நாம் அவதானித்து அவ்விரிவுரையாளரின் அலகு முடிந்த பிற்பாடே அவர்கள் எம்மிடங் கோரிய பாங்கு இவ்விடத்தில் சுட்டிக்காட்டத் தக்கது. இவர்களது வகுப்பின் ஒழுங்கமைப்பு, காட்சிப்படுத்தல், சமர்ப்பிப்பு எம்மையும் அவர்களில் ஒருவராக்கிய அரிய கணங்கள் அவை. மலையகத் தமிழில் மிகவும் இனிமையாகவும் வருங்கால ஆசிரியர்க்கு மட்டுமல்ல கேட்போருக்கும் உரியதாக கல்வி உலகுசார் விடயங்களின் பல தகவல்களை ஒருங்கு சேர்த்து சேகரித்து வழங்கியிருந்தார்கள்.

எம்மைப்பற்றி அறிய முற்பட்டவேளை எமது சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளையும் ஆச்சிரம சுவாமிகளையும் அறிந்ததுடன் அடியேனும் இவர்களில் ஒருவராகி ஓய்வுபெற்ற அதிபராகவும் இருந்தமையால் குறிப்பாக தங்கள் மாவட்டஞ் சார்ந்தனவாகவன்றி யாழ் மாவட்டத்தான் என்றவகையில் எமது சேவைக் காலத்தில் எமக்கு ஏற்பட்ட அனுபவப் பகிர்வு தங்கள் வளமான எதிர்காலக் கல்விச் சேவைக்கு உதவும் என்ற வகையில் கோரி நின்றார்கள். நான் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை என்றாலும் நிச்சயமாக இவர்களிற்கு ஏதாவது சொல்லியே ஆகவேண்டும் என்றவகையில் என் பட்டறிவுப் பகிர்வை வழங்கினேன்.

எனது அதிபர்காலம் மிக மிகச் சோதனைகள் வேதனைகள் கெடுபிடிகள் நிறைந்த போர்க்காலமாக இருந்தது. வலிகாம இடப்பெயர்வு ஓய்ந்து தென்மராட்சி இடப்பெயர்வு. தென்மராட்சியின் கிளி/ சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்திருந்த வேளை இவர்களைப் பார்வையிடுவதற்காக ஓர் கல்வி ஆசிரிய ஆலோசகர் வருகிறார். எனது அலுவலகம் எந்தவித ஆடம்பரங்களுமின்றி ஒரு சிறிய அறையில் இப்போ உள்ளது போன்று மின் விசிறியோ நவீன இலத்திரனியல் காட்சிப்படுத்தல்களோ எதுவுமின்றி தருணத்திற்கேற்ற வகையான காட்சிப்படுத்தல்களுடன் வாசலில் சுவரில் கதவுக்கு

*சான்றோருக்கு அளிக்கும் கௌரவம் கடவுளுக்குச் செய்யும் மரியாதையாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு மருங்கிலும் வெறும் பிறிஸ்ரல் அட்டையில் எனது கையினால் பெயின்ரிங் ஸ்ரிக்கரினால் எழுதப்பட்ட வாசகங்கள் இரண்டு வந்தவர்களை வாசிக்கத் தூண்டும் வகையில் அமைந்திருந்தன. அதனை அவ் ஆலோசகர் தமது தினக்குறிப்பில் எழுதி தம்மால் நடாத்தப்படும் ஆசிரியர்களின் சேவைக்கால புத்தூக்க வகுப்புக்களிலும் பிரயோகித்த அந்த வரிகளை உங்களுக்குத் தருகிறேன். ஆம் அப்படியென்ன அவ்வரிகளின் பிரமாதம். பெரிதாக ஒன்றுமில்லை. எமக்கு நன்கு புரிந்த வரிகள். ஆனால் எம்மில் பலர் அவற்றை வகுப்புகளிற் கடைப்பிடிக்காமையே எம் சந்ததியின் கல்வி வீழ்ச்சிக்கே காரணமான உண்மை வரிகள். இதோ அவை ஞானச்சுடர் வாசகர்களுக்காகவும்...... (காட்சி தொடரும்...

---

## ஞானச்சுடர் மலர் பற்றிய விமர்சனம்

பண்டைய மன்னர்களால் கண்போல் பேணிக்காக்கப்பட்ட எமது கலை, கலாச்சாரம் .இன்று விமர்சிக்கத்தக்க முறையில் நலிவடைந்து இருப்பதை யாவரும் உணர்வார்கள். இவற்றிற்கு வெளிநாட்டு மோகமும், விஞ்ஞானக் காரணிகளும் எமது கலை, கலாச்சாரத்தை மழுங்கடிக்கச் செய்கின்றன. இதனால் மக்கள் நெறிமுறை வாழ்க்கையைக் கைவிட்டு எப்படியும் வாழலாம் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இயந்திர வாழ்க்கையில் வாழ்கின்ற தற்போதைய மக்கள் மெஞ்ஞானத்தை மறந்து, எடுத்த பிறவியின் பயனை உணராது, பொருள் தேடும் வழியை நாடி ஓடுகின்றனர். இதனால் எமது கலை, கலாச்சாரம் அழிவதுடன் ஒழுக்கமும் சீரகெட்டுப் போகின்றது. பஞ்சமா பாவங்கள் தலைவிரித்தாடுகின்றன. மக்கள் வாழ்க்கையில் சந்தோஷமோ, நிம்மதியோ இல்லை. இயந்திரம்போல் வாழ்க்கையை இயக்குகின்றனர். உலகம் உய்ய உதித்த ஒருமுருகன் மக்கள்மேல் கருணைபூண்டு, மெய்ஞானத்தை உண்டாக்க “ஞானச்சுடர்” என்னும் மலரை வெளியிட சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளைத் தூண்டினான். அவன் வயப்பட்டு மோகனதாஸ் சுவாமிகள் ஞானச்சுடர் மலரை மலர வைத்தார். ஞானச் சுடர் மலரை மலரவிட்டு அன்னதானப் பணியையும் செய்யவிட்டான். ஞானவடிவேலன் செல்வச்சந்நிதியான் அருளாலும், அவன் தூண்டுதலாலும் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் ஞானச்சுடரை மலர விட்டதுடன் பல்வேறு அறப்பணிகளையும் ஆற்றி வருகிறார். கலை, கலாச்சாரம் மறந்து வாழத்தலைப்பட்ட மக்களுக்கு “ஞானச்சுடர்” என்னும் மலர் நல்வழிகாட்டியாக அமைந்தது முருகன் செயலல்லவா? மக்களுக்கு அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞானத்தை உணர்த்தும் நூலாக ஞானச்சுடர் விளங்குவதை வாசகர்கள் நன்கு அறிவார்கள். ஞானச்சுடர் ஆக்கங்கள், பல கோணங்களிலிருந்தும் பல மெய்யடியார்களிலிருந்தும், மெய் நெறியைக் காட்டும் ஆக்கங்களாக 2017ஆம் ஆண்டு மலர்ந்ததை அடியவர்களும் வாசகர்களும் நன்கு அறிவார்கள். எந்நிதியையும் கொடுப்பான் சந்நிதியான் தன்னை வந்து வழிபடும் அடியார்களுக்கு ஞானத்தை ஊட்டி, உண்மைப்பொருளை உணரவைக்கிறான். வரும் அடியவர்களை ஆச்சிரம சுவாமிகள் அரவணைத்து அன்னம் கொடுத்து மகிழ வைத்து தேன்சுவை சொட்டும் ஞானச்சுடர் மலரையும் கொடுக்கின்றார். மலரில் மனிதன் நன்நெறியில் வாழ்வதற்கேற்ற ஆக்கங்கள் பொதிந்திருப்பதைக் காணலாம். முருகன் அடியானாகிய என்னை ஒரு பொருளாக மதித்து, செல்வச்சந்நிதியான் “ஞானச்சுடர்” மலருக்கு ஆக்கங்களை கொடுக்கும்படி தூண்டுகின்றான். அந்தத் தூண்டுதல் காரணமாகவே சிறியேனாகிய நான் கட்டுரைகளை எழுதி வருகிறேன். “கூறும் நாவே முதலாக கூறும் காரணம் எல்லாம் நீ” என்று மாணிக்கவாசகர் பாவில் கூறியதுபோல், முருகனே என்னைப் பேச வைக்கிறான், எழுத வைக்கிறான், நற்செயல்களைச் செய்யத் தூண்டுகின்றானென்ற உண்மையை உணர்கிறேன். எனவே காலத்தின் தேவையான நூல் “ஞானச்சுடர்” வெளிவர செல்வச்சந்நிதியான் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு அருள் புரிந்தது மிகவும் போற்றக்கூடிய ஒன்றாகும். இறுதியாக தேன்மழை பொழியும் “ஞானச்சுடர்” மலர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென முருகன் அருள்வேண்டி நிற்கின்றேன்.

**இடைக்காடு.** புு. கதிரித்தம்பி

*தற்பெருமை கொள்ளும் மனிதனுக்கு வேறு விரோதிகளே தேவையில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அம்மா”

# முப்பெரும் சக்தி – மூலசக்தி

– திருமதி ப. நடராஜா அவர்கள் –

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை
தூய உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்

“அம்மா” என்றால் அன்பு. அன்பின் திருவுருவம் அம்மா. “அன்னை என்றால் அறிவொளியாகிய மதிநுட்பத்தை அருள் பவள். “மாதா” என்றால் தனக்கு நிகரில்லாத வள், பெருமை மிக்கவள், ஆற்றல் வாய்ந் தவள். இத்தகைய பெருமை வாய்ந்த அன்னை உலக மாதாவாக விளங்கும்போது “ஆதி பராசக்தி” என்னும் திருநாமம் கொண்டு விளங்குகின்றாள். “ஆதி” என்றால் மூலம் “பராசக்தி” என்றால் எங்கும் நிறைந்த சக்தி என்பதாகும். மூலம் பிரம்மமாதலால் மூல சக்தியாக முழுமுதலாக விளங்குவது இறைசக்தியாகிய பரப்பிரம்மத்தின் சக்தியே. இச் சக்தியையே ஆதிபராசக்தி என அழைக் கின்றோம். ஆராதிக்கின்றோம். உருவமற்ற ஒன்று உருவம் தரித்துவந்து விளையாடுவது இறைவனின் லீலையென விளம்பப்படுகின் றது. இது இறைவனின் மாய சக்தியால் நடைபெறுவதாகும். இறைவன் அருவமான, தோற்றப்படாத, கட்புலனுக்கு எட்டாத தூய சக்தி. இச்சக்தி உலகமாகப் பரிணமிக்கும் போது “மாயாசக்தி” எனப் பெயர் பெறுகின்றது.

உலகம் இறைவனால் படைக்கப்பட் டது. இது மாறும் இயல்புடையது. உதாரண மாக உயிர் வாழும் எல்லாமே பருவத்திற் கேற்ப பருவ காலங்களுக்கேற்ப மாற்றம் அடைவதை நாம் கண்கூடாகக் காண்கின் றோம். இறைவன் கர்த்தா ஆதலினால் மாற்றமில்லாதவன் என்றும் ஒன்றாக ஒரே அருட்சக்தியாக; தூய சக்தியாக விளங்கு பவன். கர்த்தாவாகிய இறைவனே உலகுக் குக் காரணம். ஆதலால் அவனே பெரியவன். ஆற்றல் மிக்கவன். இந்த இறைவனைப் பற்றிப்பிடித்துக்கொண்டால் உலக வாழ்வில் மயங்காது வாழலாம். இறைவன் நமக்குக் கொடுத்த பாத்திரத்தை ஏற்று அவன் சொற் படி இந்த உலக மேடையில் நடித்து விளை யாட்டாக வாழலாம். இந்த வாழ்க்கையே சுதந்திரமான, நிம்மதியான வாழ்க்கையாகும். ஐம்பூதங்களாகிய புலன்களுக்குக் கட்டுப் பட்டால் அது விலங்கு வாழ்க்கை. எந்நேர மும் அச்சம் பதைபதைப்பு, ஆக்ரோஷம் என்பவற்றால் பாதிக்கப்பட்டு நோயாலும் துன்பத்தாலும் பீடிக்கப்பட்டு உலக வாழ்வை

*வாழ்க்கை என்பது ஒரு துணிவுமிக்க வீரச் செயல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுக்கின்றனர். இறைவனே உலகத்தில் உள்ள எல்லாவற்றிலும் உள்ளான் என்ற உண்மையை உணர்ந்தவர் உலகில் இறைவனும் உலகமும் ஒன்றென உணர்ந்து நிறைவாக வாழ்வர்.

இறைவனின் கண்ணால் உலகைப் பார்க்கும்போது முழுதும் உண்மை என்பது புலனாகின்றது. இறைவனை விட்டு இந்தச் "சரீரம்" நான் என்ற எண்ணத்துடன் உலகைப் பார்க்கும்போது மாயையாகிய திரை மறைப்பதால் எல்லாமே பொய்த் தோற்றமாகத் தெரிகின்றது. இறைவனைப் பற்றிப் பிடித்து அவனைச் சரணடைந்தாலல்லாது உலக மாயையினின்றும் விடுபட்டு உண்மையை அறிய முடியாது.

ஒருமரம் முளைத்து வளர்ந்து மீண்டும் மரமாவதற்கு விதை அவசியம். உலகமாகிய விருட்சம் தோன்றுவதற்கான மூல விதை பரப்பிரம்மம் ஆகும். விதை முளைவிடும்போது இரண்டு சம பாதிகளாகப் பிரிந்து நடுவிலிருந்தே முளை தோன்றி வளர்கின்றது. எந்த விதையும் இதற்கு விதிவிலக்கல்ல. மூல விதையான பரப்பிரம்மமும் இறைவனும் இறை சக்தியுமாக ஆணாகவும் பெண்ணாகவும் சமமாகப் பிரிந்தே உலக உயிர்கள் படைக்கப்படுகின்றன. ஒவ்வோர் பொருளிடத்தும், உயிர் தாங்கிய உடலிடத்தும் இந்த முழுமையான பரிபூரணமான இறை சக்தியுண்டு. ஒவ்வோர் உயிரும் இறை சக்தியாலேயே இயங்குகின்றது. இந்த இறை சக்தியே உந்து சக்தியாக இருந்து வாழத் தூண்டுகின்றது.

ஒரு குழந்தை பிறக்கும்போது முழுமையானதாக பூரணமான இறை சக்தியாகவே பிறக்கின்றது. மூன்றாவது வயதிலிருந்தே குழந்தைக்கு அறியும் ஆற்றல் உண்டாகின்றது. இக்காலமே குழந்தையின் ஆரம்பக் கல்விக்கான காலமாகின்றது. இவ்வயதில் பிள்ளைகட்குச் செய்யத்தக்கவை செய்யத் தகாதவை என்பவற்றைக் கதைகள், நாடகங்கள்மூலம் கற்பிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் இறைவனே கர்த்தா இறைவனே பெரியவன் அவனே எல்லாமாயுள்ளான் என்ற நம்பிக்கை வலுவடையும் வண்ணம் படிப்படியாகக் கல்வி புகட்டப்பட வேண்டும். முக்கியமாக ஒவ்வொரு குழந்தைக்கும் இறை நம்பிக்கை ஊட்டப்பட வேண்டும். மூன்று வயதிலிருந்து பதினாறு வயதுவரை கல்வி கற்கவேண்டிய முக்கியமான காலமாகும். இந்த உண்மைக் கல்வியை இவர்கள் கற்றுணர உகந்தது குருகுலவாசம். இக்காலத்தில் பிரம்மச்சரிய விரதம் கட்டிக்காக்கப்பட வேண்டும். இதற்காகவே உணவு, உடை, உடற்பயிற்சி, சேவையுணர்வு, நல்லொழுக்கம், குருபக்தி இவையெல்லாம் குருகுலத்தில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இக்காலம் மாணவப் பருவமாகும்.

பெண்களுக்குக் கன்னிப் பருவமென்றும் ஆண்களுக்கு காளைப்பருவம் என்றும் பகர்வர். "கன்னி" என்றால் களங்கமற்றது, இளமையானது, தூய்மையானது என்பது பொருளாகும். "காளை" என்றால் பயமறியாது துள்ளித் திரியும் பருவம். எதையும் துணிந்து செய்யும் இளமையும் ஆற்றலும் கொண்ட பருவமாகும். இக்காலத்தில் ஏகாக்கிர சித்தத்தைப் பயிற்றுவித்து மன ஒருமைப்பாட்டை உண்டாக்கி நல்லனவற்றை அறிந்து செயற்பட வைப்பதே உண்மைக்கல்வி. இது வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கான அத்திவாரம். இவ்வத்திவாரத்தின் மேல் எழுப்பப்படும் சுவர்கள் தொழில் சார்ந்த கல்வியும் குடும்பக் கலையுமாகும். இவற்றைப் பயின்றபின் உலக உய்விற்காக அதாவது உலகம் இடையறாது இயங்கிக் கொண்டிருப்பதற்காக இல்லறம் என்னும் நல்லறத்தில் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து

*குற்றவாளி சட்டத்திற்கு அஞ்சுகின்றான். நல்ல மனிதன் மனச்சாட்சிக்கு அஞ்சுகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் பேணி அறவழியில் பொருளீட்டித் தான தர்மங்கள், உலக நன்மைக்கான யாகங்கள் என்பவற்றைச் செய்து நற்குண மான குழந்தைகளைப் பெற்று; அதனால் உண்டாகும் இன்ப துன்பம்; நன்மை தீமை ஆகிய அனுபவங்களைப் பெற்றுத் தம் கடமைகளைச் செவ்வனே முடித்தபின், மீண்டும் பற்றின்றி உலக சேவைக்காக (இறை சேவைக்காகத்) தம்மை அர்ப்பணிக் கும்போது அதுவே வீட்டின் கூரையாகின்றது. இது வீடுபேறாகும். அமைதியும் சாந்தியும் ஒற்றுமையும் கொண்டு விளங்கும் இல்லமே வீடுபேறாகும். இதற்கு மேல் வெட்டவெளி இது வானப்பிரஸ்தமாகும்.

மாணவப் பருவத்தில் (கன்னிப் பரு வத்தில்) தீயவற்றை விலக்கி நல்லவற்றை ஏற்றுச் செயற்படுத்துவதற்குத் தம்மைத் தயாராக்கும் காலமாகும். இக் காலத்தில் அன்னை துர்க்கா சக்தியாக ஒவ்வொரு பெண்ணும் விளங்குகின்றாள். இதன்பின் பெண்கள் பூப்பெய்தும் பருவத்தை அடை கின்றனர். கன்னித் தன்மை மலர்ந்து மணம் வீசும்போது அம்மலர் காலத்தினால் கருகிப் போகாது காயாகிக் கனியாகித் தாயாகி உலகிற்குப் பயன்பட வைப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் பெரியோர்களினதும் கடமை யாகும். இதனால் பெண்கள் பொக்கிஷமாக மதித்து வளர்க்கப்படுகின்றனர். இக்காலத் தில் குழந்தை வளர்ப்பு, உறவுகளைப் பேணுதல், தாய், தந்தை, கணவன் ஆகி யோரைத் திருப்திப்படுத்திக் குடும்ப ஒற்றுமை யைப் பேணுதல் ஆகிய குடும்பக்கலைகளை கற்றதற்கேற்பச் செயற்படுத்தி அனுபவத் தைப் பெறுவதற்காகத் திருமணம் செய்து வாழ்க்கையை நல்ல முறையில் வாழும் பயிற்சியைப் பெறுகின்றனர். இப்படித் தம் கடமைகளைச் செவ்வனே செய்து அடுத்த தலைமுறையினடரிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைத்து வானப்பிரஸ்தத்தை மேற்கொள் கின்றனர். பெற்றோரை இழந்த குழந்தைகள், ஆதரவற்றோர், துயரப்படுவோர் இவர்களுக்கு ஆறுதலளித்து உதவுவதன்மூலம் தன் குடும் பம், தன்பிள்ளைகள் என்னும் வட்டத்தைப் பெரிதாக்கி உலகக் குடும்பம் என்ற விசால மான உணர்வைப் பெறுகின்றனர்.

மாணவப் பருவத்தில் களங்கமற்ற கன்னி துர்க்கையாக விளங்கும் பெண் பின் னர் இல்லறத்தில் ஈடுபட்டுத் தன் வல்லமை யினால் தன்னையும் தன்னைச் சுற்றியுள் ளோரையும் திருப்திப்படுத்தி நிறைவான செல்வத்தைத் தரும் பூரணியாக, மகாலெட் சுமியாகத் திகழ்கின்றாள். இதன்பின் உலக முழுவதையும் ஈன்ற அன்னை மீண்டும் கன்னியாக ஞானத்தாயாகக் கலைமகளாக வீற்றிருந்து உலகக் குழந்தைகட்கு நல்லறி வைப் புகட்டுகின்றாள். இவ்வாறு மாதா மகேஸ்வரியாகச் சரஸ்வதியாக சாரதையாக இருந்து உலகை உய்ய வைக்கும் சக்தி வாய்ந்த அன்னையே, உலக மகாசக்தியான அன்னை ஆதிபராசக்தி.

பெண்மை ஆத்மசக்தியாகவும், ஆண்மை புருஷார்த்தமாகவும் பேணப்படுவது உலக வழக்கு. ஆன்மா கொடியாகவும் இறைவனாகிய புருஷன் ஆன்மாவாகிய கொடி பற்றிப் படர்வதற்கான உறுதியான மரமாகவும் கொள்ளப்படுகின்றது. இதுவே வள்ளிக் கொடியாகிய ஆன்மாவிற்கும் இறை வனாகிய முருகனுக்கும் உள்ள உறவாகும். இவற்றை உணர்ந்து அனுபவிப்பதே பிறவி யின் பயன். இதை உணர்த்துவதே கல்வி யின் கடன்.

*நீ உன் உரிமையை இழப்பின் உன் உணர்வையும் இழப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

மன்னா! இறந்தவர்களைக் குறித்துச் சோகமாய் இருப்பவன், இறந்தவனைப் பின் தொடர்வது இல்லை. உலகம் இப்படி இயற்கையாக இருக்கும்போது நீங்கள் எதற்காகத் துயரப்படுகிறீர்கள். விதுரர் தொடர்ந்தும் "காலமானது எல்லா உயிர்களையும் தனக்குள் இழுத்துக்கொள்கிறது. காலத்திற்கு வேண்டியவன், வேண்டாதவன் என்று யாரும் இல்லை. புல் நுனியைக் காற்று தன் வசப் படுத்திக்கொள்வதைப்போலக் காலமானது, உயிர்களைத் தன் வசமாக்கிக் கொள்கிறது. எவனுக்கு இயற்கை அழைப்பு விடுக்கிறதோ அவன் முந்திக் கொள்கிறான். அந்த விடயத்தில் நீங்கள் ஏன் புலம்ப வேண்டும்?"

மன்னா! சாத்திரங்கள் பிரமாணமாயிருந்தால், யுத்தத்தில் கொல்லப்பட்ட இவர்களைப் பற்றி நீங்கள் துக்கப்படுவது தகாததாகும். அவர்க்ள் எல்லோரும் உத்தமமான நிலையை அல்லவா அடைந்தார்கள். அவர்கள் வேதங்களை அறிந்தவர்கள் அல்லவா? விரதத்தைக் கடைப்பிடித்த அவர்கள் அனைவரும் யுத்தத்தில் எதிர்த்து நின்றே (எதிர் எதிரே நின்று) உயிர் விட்டார்கள். அவர்கள் பார்வைக்குத் தெரியாத இடத்தில் இருந்து வந்தார்கள். பார்வையில் படாமலேயே இப்போது போய்விட்டார்கள். அவர்கள் உங்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் இல்லை. நீங்களும் அவர்களுக்குச் சம்பந்தப்பட்டவர் இல்லை. மன்னா! கொல்லப்பட்ட வீரர்கள் வீர சுவர்க்கத்தை அடைகின்றனர். வென்றால் புகழை அடைகின்றனர். வீரர்களான மனிதர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களாகி எப்படி சுவர்க்கத்தை அடைகிறார்களோ, அப்படி யாகங்களாலும், தவங்களாலும், வித்தைகளினாலும் சுவர்க்கம் அடைவதில்லை. உத்தமமான நிலை அடைந்த அவர்களில் யாரைக் குறித்தும் நீங்கள் துன்பப்படக்கூடாது.

ஆயிரக்கணக்கான தாயார்களும் தந்தைகளும் நூற்றுக்கணக்கான பிள்ளைகளும் இல்லற வாழ்க்கையில் பிணைக்கப்பட்டவர்கள். அவர்கள் யாரோடு சம்பந்தப்பட்டவர்கள்? யாரும் யாருடனும் சம்பந்தப்பட்டவர் அல்லர். ஒவ்வொரு நாளும் துன்பத்துக்கிடமானவை ஆயிரக் கணக்கிலும், பயத்துக்கிடமானவை நூற்றுக் கணக்கிலும் மூடனைத்தான் வந்து அடைகின்றன. பண்டிதனை (வேதம் அறிந்தவனை) வந்து அடையாது.

## துக்கத்துக்கு மருந்து

இயற்கைக்கு எவனும் நண்பனும் இல்லை; பகைவனுமில்லை. இயற்கை (காலம்) எல்லாவற்றையும் இழுக்கிறது. இயற்கையாகிய காலம் பூதங்களைப் பக்குவம் செய்கிறது, மக்களை சம்ஹாரம் செய்கிறது. உயிர்கள் தூங்கும்போது கூட இயற்கையானது விழித்துக்கொண்டிருக்கிறது. இயற்கையை எந்த முறையிலும் தாண்டிவிட முடியாது.

இளமை, வடிவம், உயிர், செல்வம், ஆரோக்கியம் விருப்பமானவர்களுடன் சேர்ந்து வாழ்வது இவைகளெல்லாம் நிலையில்லாதவை. கற்றோர் இவைகளில் ஆசை வைக்கக் கூடாது. எல்லோருக்கும் பொதுவான துக்கத்தைப் பற்றி ஒருவன் நினைக்கக்

*முதியோர்களின் அறிவுரைகள் குளிர்காலச் சூரியனைப்போல் சுடாது ஒளிரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது. இவன் இறந்தால்கூட யாரும் துன்பப் படுவதில் அர்த்தம் இருப்பது இல்லை. எப் போதும் துக்கப்படாதவனாக இருந்து கொண்டு தேவையானவற்றைச் செய்ய வேண்டும். (உன் கடமையைத் தொடர வேண்டும்) அவர்கள் போய் விட்டார்களே, இவர்கள் போய்விட்டார்களே என்று சிந்திக்கா மல் இருப்பதுதான் இறந்தவர்கள் தொடர்பாக ஏற்படும் துக்கத்திற்கு மருந்தாகும். அதனையே சிந்திப்பதனால் அது குறையப் போவதில்லை. அதற்குப் பதிலாக மேலும் துக்கம்தான் அதிகமாகிறது.

சிந்தனையுடன் கூடிய செயலைச் செய் யாத மனிதர்கள், வேண்டாத காரியங்களில் சம்பந்தப்படுவதாலும், விரும்பியவற்றை பிரி வதனாலும் துன்பம் அடைகிறார்கள். எப்போ தும் இழந்தவற்றைப் (எல்லாவகையான) பற்றிய நினைப்பு அற்றுப்போகாவிடின் அறம், பொருள், இன்பத்தையும் இழக்க நேரிட்டு விடும்.

மன்னா! மனிதர்கள் பற்றுதலை அடிப்படையாகக் கொண்டு ஒருவரை ஒருவர் துன்பப்படுத்தும் நிலையை அடைகிறார்கள். அதனால் திருப்தி இல்லாதவர்களாகி மயங்கு கின்றார்கள். அறிவாளிகளோ, அறிவினால் மனத் துக்கத்தைப் போக்கிக்கொள்ள வேண் டும். வினையின் செயல் பற்றிய கருத்துக் களை அறிந்து துன்பத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும். துக்கத்தினால், குழந் தைகள்போல கண்ணீருடன் இருக்கக்கூடாது.

முன் வினையானது மனிதனைத் தொடர்ந்து வருகிறது. முன்வினையானது, நின்றால் நிற்கிறது. ஓடினால் ஓடுகிறது. மனிதன் எத்தகைய நன்மை தீமைகளைச் செய்கிறானோ, அதற்கு ஏற்ற வகையில் பலனை அடைகிறான். எவனெவன் எந்தெந்த உடம்போடு, எத்தகைய வினையைச் செய் தானோ, அவனவன் அந்தந்த உடம்போடு வினைப் பலனை அடைகிறான். மனிதன், தனக்குத் தானே உறவு, தனக்குத் தானே எதிரி, தான் செய்த நன்மைக்கும் தீமைக்கும் தானே சாட்சி, நல்ல செயல்களினால் மகிழ்ச்சி; தீய செயல்களினால் துன்பம் என்பது செயலைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது.

புத்திசாலிகள், ஞான விரோதமானவை களும், அனேக அபாயங்கள் உள்ளவற்றை யும், அடியோடு அழிக்கக்கூடியவற்றையும் முயற்சி செய்யமாட்டார்கள்.

திருதராஷ்டிரன், "விதுரா! நன்றாகச் சொன்னாய். என் கோபம் போய்விட்டது. மறுபடியும் நல்லவற்றைக் கேட்க விரும்பு கிறேன். வேண்டாதவை நடப்பதாலும், வேண்டி யவை நடக்காமல் போவதாலும் உண்டாகும் மனத் துக்கத்தை எப்படி அறிவாளிகள் விலக்கிக் கொள்கிறார்கள்" என்று கேட்டான்.

விதுரர், "மன்னா! மனமானது எந் தெந்த துக்கத்திலிருந்து விலகி நிற்கிறதோ, அந்தத் துக்கத்திலிருந்து அமைதியடைந்து, கற்றறிந்தவன் நல்ல கதியை அடைகிறான். ஆலோசித்தால் இவை எல்லாமே நிலையில் லாதவை.

இந்த உலகம் வாழைக்கு ஒப் பானது. இதற்கு வைரம் இல்லை. எப்போது பேரறிஞர்களும் முட்டாள்களும், பணக்காரர் களும், ஏழைகளுமாகிய அனைவரும் மர ணத்தை அடைந்து கவலையில்லாமல் தூங்கு கின்றார்களோ, அப்போது துன்பம் மறைந்து விடுகிறது.

மனிதர்கள் என்ன காரணத்தினால் வஞ்சபுத்தி உடையவர்களாகி ஒருவருக் கொருவர் தீமை செய்ய விரும்புகின்றார்கள்? மனிதர்களுக்கு உயிர் காலத்தினால் உடம்பு களைக் காவுகின்றன. காலத்தினால் பிரிக் கவும் படுகின்றன. எப்படிப் பழையதோ புதி யதோ ஒரு ஆடையை விட்டு மனிதன் வேறொரு ஆடையை விரும்புவதுபோலத்தான்

*கற்பனை நம் வாழ்க்கையை உயர்வடையச் செய்கிறது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உடம்புகளும். அரசே! இந்த உலகில் உயிர்கள் தங்களால் செய்யப்பட்ட வினைகளினாலேயே, துக்கத்தையோ, சுகத்தையோ அடைகின்றன. இதுதான் உண்மை.

எப்படி மண் பாண்டமானது சக்கரத்திலே ஏறி இருக்கும்போதோ, பாத்திரமாகச் செய்யப்படும்போதோ பாத்திரம் செய்யப்பட்டுச் சக்கரத்திலிருந்து கீழே இறக்கும்போதோ, ஈரமாய் இருக்கும்போதோ, காய்ந்து இருக்கும் போதோ, சூளையில் சுடப்படும் போதோ, சூளையிலிருந்து எடுக்கும்போதோ, தரையில் வைக்கப்படும்போதோ, கையாளும் போதோ பல்வேறு நிலைகளில் நாசத்தை அடைகின்றதோ அதுபோல உடம்பை எடுத்தவர்களின் உடம்புகளும் நாசமடைகின்றன.

(தொடரும்...



கிளிநொச்சி. இராமநாதபுரத்தில் வசிக்கும் உடல் ஊனமுற்ற குடும்பத் தலைவனைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு அவர்களது நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் தொட்டி, மின் மோட்டர் அதற்குரிய குழாய் உபகரணங்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டபோது குடும்பத் தலைவன் செ. தியாகராஜாவுடன் ஆச்சிரமம் சார்ந்தோரும்



எரிகிற விளக்காக இரு, அப்போதுதான் மற்ற விளக்குகளை ஏற்றி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாதச் சிறப்பு

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

சித்திரையும் வைகாசியும் இள வேனிற் காலமாகும். இளவேனிற் காலங்களில் ஈழத்திலும் இந்தியாவிலும் உள்ள ஆலயங்கள் திருவிழாக்களுக்கு இசைந்த காலமாகும். வேனியல் என்பது வெயில் காலம் என்றும் பொருளாகும். விசாக நட்சத்திரத்தில் பூரணை கூடிய மாதம் ஆதலால் வைகாசி எனப்பட்டது. முருகப் பெருமான் அவதரித்தது வைகாசி விசாக நட்சத்திர தினமாகும்.

வியாசராஜர் தங்கத் தட்டில் அவதரித்த மாதம் வைகாசி, உலகிற்கு அகிம்சையைப் போதித்த புத்த பகவான் அவதரித்ததும், ஞானம் பெற்று முத்தியடைந்ததும் வைகாசி மாதத்தில்த்தான். பௌத்த நாடுகளிலே வைகாசி விசாகம் இரு தினங்கள் கொண்டாடப்படுகின்றது. பௌத்தர்கள் ஒளி விளக்குகள் ஏற்றி கொண்டாடும் தினம் இதுவேயாகும். உலகம் முழுவதும் வாழுகின்ற பௌத்தர்களுக்கு வைகாசி விசாகம் ஒரு சிறந்த மத வைபவ நாளாகும். இலங்கை ஒரு பௌத்த நாடாகையால் இரு தினங்கள் அரசாங்க விடுமுறை கொடுத்து தான தருமம் செய்து கொண்டாடுகின்றார்கள்.

வைகாசி விசாகத் திருநாளில்த்தான் ஞானஆச்சார்ய நம்மாழ்வார் அவதரித்தார். காஞ்சிமகாப் பெரியவர் மகான் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சுவாமிகள் ஜெய ஆண்டு வைகாசி அனுஷத்தில் அவதரித்தார். வைகாசி மாதத்தில் காசியில் கால் வைப்பது சிறப்பாகக் கூறப்படுகின்றது. எனவேதான் வை - காசி என்று அம்மாதத்தைப் பெரியோர் போற்றுகின்றனர். வைகாசி திருஞானசம்பந்தர் சோமமாசி மாறனார் போன்ற நாயன்மார்களும், திருக்கோட்டி நம்பிகள் போன்ற வைணவப் பெரியோர்களும் அவதரித்த புண்ணிய மாதமாகும். வைகாசி மாதம் மூல நட்சத்திர தினமே திருஞான சம்பந்தர் அவதரித்த நன்னாளாகும்.

தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தபோது அமுதம் வெளிப்பட்டது வைகாசி மாத ஏகாதசி தினத்தில் ஆகும். இறைவன் அதைக் காத்துத் துவாதசியன்று தேவர்கள் உண்டது திரயோதசி தினம் மற்றும் பௌர்ணமி தினங்களில். எனவே வைகாசி மாதத்தில் வரும் ஏகாதசி, துவாதசி திரியோதசி பௌர்ணமி ஆகிய தினங்களில் செய்யப்படும் தான தருமங்களுக்கு ஒன்றிற்குப் பல மடங்கு பலன் கிட்டும் என்பது ஐதீகம்.

வைகாசி மாதத்தில் கண்ணகை அம்மன், காளி, துர்க்கை, பைரவர் போன்ற தெய்வங்கட்குப் பொங்கலிட்டு மடைபரவி கிராமந்தோறும் மக்கள் வழிபடுவதைக் காணலாம். பழங்கள் மிகச் செழிப்பாகவுள்ள காலம் இதுவாகும். இக்காலத்தில்த்தான் கிராமியத் தெய்வங்களின் பொங்கல் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறும்.

கிராமக் கோவில்களில் இக்காலத்தில் கூழ் ஊற்றும் விழாவும், கஞ்சி ஊற்று விழாவும் நடைபெற்று வருகின்றன.

### வைகாசி விசாக விரதம்

விசாக நட்சத்திரம் ஒவ்வொரு மாதமும் வந்தாலும் வைகாசி மாத விசாகநாள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கும்,

*திருப்தியும் பேரின்பமும் எம்முள் இருப்பின் நாம் மற்றவர்களால் விரும்பப்படுவோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசப்படுவதற்கும் காரணம் அன்றுதான் முருகப் பெருமான் அவதரித்த நாள். அவருடைய ஜென்ம நட்சத்திரம் விசாகம். இதனால் முருகன் விசாகன் என்று அழைக்கப்படுகின்றார். சரவணப் பொய்கையில் இருந்த ஆறு குழந்தைகளையும் உமையம்மை ஒன்றாகத் தூக்கி ஆறு திருமுகங்கள் உடைய ஒரு குழந்தையாக உருவாக்கிக் கொடுத்தநாளே வைகாசி விசாக நட்சத்திர நாளாகும். முருகன் பிறந்த நாளாகிய வைகாசி விசாகத் தன்று உலகங்களில் உள்ள முருகன் ஆலயங்களில் பெருவிழாவாகக் கொண்டாடுவர். இலங்கையிலே நல்லூர், செல்வச்சந்நிதி, கதிர்காமம் ஆகிய முருகன் ஆலயங்களிலும் மிகவும் சிறப்பாக விழா நடைபெறும். அன்றைய தினம் பக்தர்கள் காவடி ஏந்தி முருகனை வழிபடுவார்கள். இவ்விரதத்தை நோற்பவர்கள் வாழ்விலே சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெற்று நிம்மதியாக வாழ்வார்கள்.

## ஆன்மிகச் சிந்தனை

மரணம்தான் மனித குலத்தின் மிகப்பெரிய அதிர்ச்சி. மரணத்திற்கு அப்பால் என்ன என்று தெரியாததனாலேயே அந்தப் பயம் ஏற்படுகிறது. மரணத்திற்கு அப்பால் என்ன நடக்கும் என்று தெரிந்துவிட்டால் அந்தப் பயம் இருக்காது. ஞானத்தால் மரணபயத்தை வெற்றி கொள்ளலாமே தவிர, விஞ்ஞானத்தால் முடிந்ததில்லை. விஞ்ஞானத்தால் மரணத்தைச் சிறிதளவு தள்ளி வைக்க முடிந்ததே தவிர அதை வெற்றிகொள்ள முடியவில்லை. சில சமயங்களில் விஞ்ஞானம் மரணத்தை இழுத்து வந்து ஒட்டுமொத்தமாய் மனித குலத்தின் தலையிலே தள்ளிவிடுகிறது. சில இடங்களில் இலட்சக் கணக்கில் மனிதர்கள் பூச்சிகளைப்போல இறந்து போவதற்குக்கூட விஞ்ஞானம் வழி வகுத்திருக்கிறது. "மனதை உற்றுக் கவனித்தால் உடலினுள் உயிரினுடைய இருப்பு என்ன இலட்சணத்தில் இருக்கிறது என்றும், இறந்தபிறகு என்னவாகும் என்பதும் தெரியவரும்" என்கிறார்கள் ஞானிகள். மேலும் அவர்கள் குறிப்பிடுகையில் மரணத்தின்போது உயிரை விட்டுவிட உடம்பு சம்மதிக்காது. எப்படியாவது ஏதோ ஒரு விதத்தில் உயிரைத் தக்கவைத்துக்கொள்ள உடம்பு அவஸ்தைப்படும். இந்தப் போராட்டத்தில் உடல் தன்னிலிருந்து வலியைக் கிளறிவிடும். வலியினால் உயிர் போகாதிருக்க மனம் முயற்சி செய்யும். ஆனால் இறுதியில் தோல்வியுறும் என்றும் கூறுகிறார்கள். அதாவது என்ன செய்வது என்று தெரியாமல் மனம் கவலைப்பட... உயிர் வெளியேற அவசரப்பட... உடலானது உயிரைப் போகாதே என்று வலியை ஏற்படுத்த... மிகப்பெரிய போராட்டம் நடக்கும். பட்டம், பதவி, சொத்துக்களில் ஆசைகொள்பவர்களே இவ்வாறு அவஸ்த்தை மரணத்தைச் சந்திப்பார்கள். அடுத்தவரை மனம் நோக வைக்காதவர்கள், ஏழை எளியவர்களின் துயர்களைத் துடைத்து வாழ்பவர்கள் போன்ற சிலருக்கு மட்டுமே அமைதியான மரணம் கிடைக்கிறது. இந்தத் தருணத்தில் அவர்களால் மட்டுமே மரணத்தை நிதானமாய்ப் பயமின்றி ஏற்க முடியும் என்கின்றனர் ஞானிகள்.

ஒன்றைத் தெரிந்துகொள்வது வேறு. அதைப் புரிந்துகொள்வது வேறு. ஆன்மிகம் என்பது ஆன்மா சம்பந்தமுடையது. அது புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று. அதைத் தெரிந்துகொள்வதோடு நிறுத்தி விடுபவர்களுக்குத்தான் தேவையில்லாத குழப்பங்கள் எல்லாம் வந்து சேருகின்றன.

*தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணியாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 1000. 00 |
| ச. பிரவின் | பிரான்ஸ் | 10000. 00 |
| ம. விதுர்ஷன் | சுவிஸ் | 10000. 00 |
| பி. வெண்பா | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| கஜானன் அஸ்விதா | ஆவரங்கால் | 20000. 00 |
| ஆ. ரஞ்சித்குமார் குடும்பம் | அச்சுவேலி | 5000. 00 |
| த. ரஞ்சித் | தம்பாலை | 2500. 00 |
| மு. நிருஷிகா | அல்வாய் | 1000. 00 |
| சி. அருந்தவராசா | துன்னாலை தெற்கு | 1000. 00 |
| சி. யோகராஜா | புத்தூர் | 5000. 00 |
| ஐ. மணியன் | புத்தூர் | 500. 00 |
| லோ. கோபிநாத் | தெல்லிப்பழை | 1000. 00 |
| ப. சேயோன் | தெல்லிப்பழை | 2000. 00 |
| வெ. இரகுநாதன் | அரியாலை | 8000. 00 |
| க. கஜானனி, க. கஜானன் | கொழும்பு 1மூடை அரிசி, 15k பருப்பு | 2000. 00 |
| சி. சுதர்ஷன் (ஜேர்மனி) | ஊரெழு | 10000. 00 |
| நா. கதிர்காமநாதன் | கொழும்பு | 10000. 00 |
| தி. தியாகராஜா குடும்பம் | புங்கன்குளம் மரக்கறிவகை, 1மூடை அரிசி | |
| த. கமலா குடும்பம் "கமலபதி" | சித்தங்கேணி | 10000. 00 |
| R. கவி | கைதடி | 5000. 00 |
| மகாமாரி பல்பொருள் வாணிபம் | பருத்தித்துறை | 500. 00 |
| T. ராதிகா | கரவெட்டி | 10000. 00 |
| ம. ஜெயராசா குடும்பம் | கரவெட்டி | 5000. 00 |
| சு. நித்தியானந்தன் குடும்பம் | நல்லூர் | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாஷம் ஆசிரியர் | பருத்தித்துறை | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுன்னாகம் | 1000. 00 |
| ராகுலன், கணேசன் | புத்தூர் | 1000. 00 |
| ஈ. கிஷானா, ஈ. பிரவீனா | சாவகச்சேரி | 5000 00 |
| க. சண்முகநாதன் குடும்பம் | கனடா 1மூடை அரிசி | 6000. 00 |
| அனுஷ்ரா குகநாதன் | உரும்பராய் | 5000. 00 |
| ர. ரவிசாந், து. அமேலியா, து. அஸ்ரியா | சுன்னாகம் | 15000. 00 |

உழைத்துப் போராடாமல் வெற்றியை அடைய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| S. குணரட்ணம் | அச்சுவேலி | 5000. 00 |
| சி. செந்தில்வேல் | புத்தூர் | 2000. 00 |
| ச. வாகீசன் | இணுவில் | 2000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | 10000. 00 |
| குமாரசாமி குடும்பம், ஸ்ரீபாலகிருஷ்ணன் குடும்பம் லண்டன் | | 5000. 00 |
| த. வினுஷா (லதா) | பருத்தித்துறை | 5000. 00 |
| ந. பாலசுப்பிரமணியம் | நீர்வேலி | 500. 00 |
| க. பாலச்சந்திரன் | கொழும்பு | 1000. 00 |
| ம. சிவராசா | கரவெட்டி | 3000. 00 |
| N. நிஷாந் | ஜேர்மனி | 2000. 00 |
| திருமதி செ. கமலாவதி (சிவபூமி முதியோர் இல்லம்) தொல்புரம் | | 10000. 00 |
| சி. அஸ்வின் | நெல்லியடி | 1000. 00 |
| பா. டினேஷ் | நெல்லியடி | 1000. 00 |
| ஜெகதீசன் கிருபா | நெடியகாடு | 5000. 00 |
| S. உதயகுமார் | நல்லூர் | 2000. 00 |
| இ. சிவகுமார் | அளவெட்டி | 2000. 00 |
| க. தேயஸ்வினி, க. அபிக்ஷனா | அரியாலை | 1000. 00 |
| ப. கதிரைவேற்பிள்ளை | நெடியகாடு | 5000. 00 |
| S. ராஜேஸ்வரி | அச்சுவேலி | 5000. 00 |
| சு. இந்திராதேவி | நல்லூர் | 2000. 00 |
| ஸ்ரீனிவாசன் புருஷோத்தமன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| சொ. செல்லத்துரை | பருத்தித்துறை | 1000. 00 |
| வி. திவ்வியநாதன் | லண்டன் | 3000. 00 |
| மு. சரவணபவான் (கலைமகள் விலாஸ்) | சங்கானை | 5000. 00 |
| வ. சித்திரா | உரும்பராய் | 1000. 00 |
| N. ராஜேந்திரா | கோண்டாவில் | 1000. 00 |
| ஜெகதீஸ் கார்த்திகன் | இடைக்காடு | 5000. 00 |
| சுகந்தன் வேனுஜன் | இடைக்காடு | 5000. 00 |
| சோமசேகரம்பிள்ளை குடும்பம் | கிளிநொச்சி | 1000. 00 |
| S. கந்தசாமி | லண்டன் | 3000. 00 |
| அ. கார்த்திகா, அ. சாரங்கா | கனடா | 5000. 00 |
| S. கந்தசாமி | லண்டன் | 3000. 00 |
| ச. சண்முகநாதன் குடும்பம், செ. பாஸ்கரன் குடும்பம் யாழ்ப்பாணம் | | 10000. 00 |
| கு. குலேந்திரன் குடும்பம் | ஜேர்மனி | 5000. 00 |
| த. குணரட்ணம் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| திரு தியாகராஜா P.M | கோப்பாய் | 4000. 00 |
| மனோகரி ஆனந்தராசா | கொழும்பு (U.K) | 5000. 00 |

(தொடரும்...

படிப்பு என்ற மெழுகுவர்த்திக்கு ஆர்வமே திரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்குப் புகழ் சேர்த்த புன்னை மா நகரவாசி

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஈழத்துத் தமிழ் இலக்கிய இலக்கண சாம்ராஜ்ஜியத்தில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பேரறிஞராக ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரும் புலவன்தான் புன்னாலைக்கட்டுவன் வித்துவ சிரோன்மணி கணேசையர் ஆவார்.

இலக்கணத்தின் ஒளிவிளக்காக, இலக்கியத்தின் கனிரசமாக, உரைநடைப் பாங்கின் ஆற்றொழுக்காக, ஆய்வுக்கு ஏற்ற பாய்விரிப்பாக, வரலாற்றின் பெட்டகமாக, போதனையில் பொன்னொச்சியாக, சமூகப் பணியில் கற்பகதருவாக, பதிப்பினில் மாசறு பொன்னாக, படைப்பினில் பிரசாதமாக, தூதுவிடு பாங்கில் மலைதழுவு மேகமாக, தோற்றத்தில் சிவமயமாக, கோலத்தில் பதங்கெடாத தூய அந்தணராக, ஒழுக்கத்தில் நதிமூலமாக, தவ சாகரத்தில் ரிஷிமூலமாக, இல்லறத்தில் அன்னியோன்னியமாக மிளிர்ந்தவர்தான் மகா வித்துவான் புன்னாலைக்கட்டுவன் கணேசையராவார். இவரது ஆற்றலுக்கும் திறமைக்கும் ஆய்வுக்கும் இலக்கிய இலக்கணப் புலமைக்கும் ஈடாக தமிழிலக்கியப்பரப்பில் யாருமே தோன்றவில்லை என்பது சொல்லித்தான் தெரியவேண்டுமென்பது இல்லை. இந்தப் பெரிய மகானை அவரது சமூகத்தினர் சோரவிடாது, தீர முனைந்து போற்றி நீள நினைந்து ஒரு சிறந்த கைங்கரியத்தை அவர் வாழ்ந்த மருதடி வருத்தலை விளானில் அரங்கேற்றியிருப்பது வணங்குதற்குரியதாகும். இரண்டு நூல் வெளியீடும், பாணலிங்கப் பிரதிஷ்டையும் பேறு தருவனவாக அமைந்தன.

## பாணலிங்கம்

பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்கள் தமிழுக்காய் வாழ்ந்து தவம் செய்த இடத்தில் அவருக்கு ஒரு நினைவாலயம் எழுப்பப்பட்டுள்ளது. வருத்தலை விளான் மருதடிப் பிள்ளையார் ஆலய அருட்கடாட்சம் அருகிலே செறிந்திருக்க, அவர்களின் வேட்டகமும், அவரின் கொந்தாலிக்குப் பீறிட்ட கிணறும், அவர் வாழ்ந்திருந்த அத்திபார அடித்தளமும் சூழ்ந்திருக்க, காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட அற்புதமானதும் ஆசீர்வாதமும் உள்ளதுமான அழகான “பாண” லிங்கம் ஒன்று, 139ஆவது பிறந்ததினமான 26.03.2017இல் ஸ்தாபித்து ஆத்மலிங்கப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் புனிதமாக இனிதே நிறைவேற்றி வைக்கப்பட்டது. இது கணேசையரின் ஆத்ம பலத்தையும், வசீகரத்தையும் துலாம்பரமாக எடுத்தியம்பியது. மூத்த சிவாச்சாரியார்கள் பலர் இந்நிகழ்வினில் கலந்துகொண்டு சிறப்பித்தமை பிரம்மிக்க வைத்ததாகும். இந்த நினைவாலயத்தையும், அது சார்ந்த மண்டபத்தையும், அதற்கான ஏற்பாடுகளையும் வருத்தலைவிளான் அமரர் குமாரசாமி ஐயர் - சுப்பிரமணிய ஐயரின் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும், ஜெயராம சர்மா, ஸ்ரீரம்யா ஆகியோரும் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும் ஒன்றிணைந்து நிறைவேற்றினார்கள். அதைவிட ஏற்கனவே அவரது உருவச்சிலை புன்னாலைக்கட்டுவன்

*சிறிய தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் தெய்வீக வல்லமையோடு ஸ்தாபிக்கப்பட்டு உள்ளது. யாவரும் சிரம் தாழ்த்தி பணியவேண்டிய தமிழ்ப் பீடமது! பல்கலைக்கழக, பாடசாலை, தொழில்நுட்ப, ஆசிரிய பயிற்சி, கல்வியியற் கல்லூரி மாணவர்கள் தவறாது கணேசையரது நினைவாலயத்தையும், புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தின் முகப்போரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அவரது பிரமாண்டமான திருவுருவச் சிலையையும் தரிசிப்பது காலத்தின் கட்டளையாகும். பாண லிங்கம் காண்போருக்கு ஞானபோதம் கனிந்து வரும். ஆன கல்வி வேதம் பெருகி வரும். மோன சௌபாக்கியம் பொலிந்து வரும். தான தர்ம இல்லற கடாட்சம் விரைந்து பெருகும். எனவேதான் அந்தணச் சிவாச்சாரியார்கள் பாண லிங்கப் பிரதிஷ்டை செய்யும்போது தவறாது கலந்து பேறடைகிறார்கள். மற்றும் மேக தூதக்காரிகையுரையும், கணேசமணி ஆகிய இரு நூல்களும் காலம் கருதிய படைப்பாகும். இரண்டு நூல்களும் இலவசமாக எல்லோருக்கும் வழங்கப்பட்டன. இது பாராட்டுதற்குரியது.

## தோற்றம்

புன்னாலைக்கட்டுவன் காசிப கோத்திரம் பிரம்மஸ்ரீ சின்னையர் என்பவருக்கும், தெய்வபத்தினி - ஸ்ரீமதி சின்னம்மாள் அம்மையாருக்கும், 26.03.1878ஆம் திகதி பூராட நட்சத்திரத்தில் அவதரித்தவரே கணேசையர் ஆவார். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக தாய் தந்தையர் பூரிக்க வளர்ந்தார். கேள்வி ஞானமும் தேடல் ஞானமும், ஆய்வு ஞானமும், கலை ஞானமும் அவரிடம் குடிகொண்டன.

## கல்வி

குருகுல வாசமும், திண்ணைப் பாடசாலைகளுமே கல்விக்கு வரங்கொடுத்தன. ஆம்! பெரிய தந்தையாரான கதிர்காமரின் திண்ணைப் பாடசாலையிலும், வித்துவான் பொன்னம் பலப்பிள்ளை அவர்களின் திண்ணைப் பாடசாலையிலும், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் திண்ணைப் பாடசாலையிலும் கல்வி பயின்று, ஆசிரிய தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தார். கணேசையரின் உள்ளத்தில் தலைமகளும் விரும்பியுறைந்தாள். கரும்பென மகிழ்ந்தாள்.

## சேவை

இருபத்தொரு வயதில், வண்ணார்பண்ணை வேலுப்பிள்ளை வித்தியாலயத்திலும், சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் மற்றும் புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், வயாவிளான், கீரிமலை, தையிட்டி, நயினாதீவு, வருத்தலை விளான் சைவ வித்தியா சாலைகளிலும் ஆசிரியராகவும், சுன்னாகம் பிராசீனப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் நீண்டகாலம் பேராசானாகவும் கடமையாற்றினார். பணிவும், பக்குவமும், பயபக்தியும் சேர்ந்து வளர்ந்து செழிப்பாயின.

## படைப்பு

செந்தமிழ், ஈழகேசரி வாயிலாக அறுபத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய, இலக்கண கட்டுரைகள் மற்றும் இராமாவதாரம், தொல்காப்பியச் சூத்திரப்பொருள் ஆராய்ச்சி, பரிபாடல், ஐந்திணை ஆராய்ச்சி, தமிழ்நாட்டு மக்களின் ஒழுக்க மரபுகள், இல்லக் கிழத்தியின்

*உன் அயலானை நேசி, ஆனால் வேலியை எடுத்துவிடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்புகள், இளங்கோ அடிகளும் கம்பரும், தேவிமானபூசை- அந்தாதி, நீர் விளையாட்டு, செந்தமிழ், கபிலர், கவியின்பம், வாழ்த்துப்பாக்கள், கம்பரும் அவலச்சுவையும், சீவக சிந்தாமணி உரைநயம், திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கம், குமாரசுவாமிப்புலவர், பெண்களின் கற்புநிலை, இருகண்ணொருமணி, திணைமயக்கம், சாவாவுடம்பு, அந்தணர் நூல், உடம்படுமெய், அளபெடை, தொகைநிலை, ஆறனுருபு பிறிதுருபேற்றல், அகநானூறு, உலகியலும் இலக்கியமும், இயற்கை நவிற்சியும் செயற்கைப் புணர்ச்சியும், இரு பெயரொட்டுப் பெயரும் அன்மொழித் தொகையும், கவிச்சக்கரவர்த்தி கம்பனே, சேனாவரையப்பதிப்பும் - பிழை திருத்தமும்- ஆதியாம் பயன்பெறு கட்டுரைகளும், இன்னும் பல வெளிவராத கட்டுரை களுமாக ஏராளமானவை தமிழின் முதுசொம்களாக இன்றும் நின்று விளங்குகின்றன. இதைவிட மேகதூதக்காரிகையுரையும், தொல்காப்பிய விளக்க உரையும் உலகப் பிர சித்தமானவையாகும். வித்துவ சிரோன்மணி கணேசையரின் தொல்காப்பிய விளக்க உரையே தமிழகப் பேராசிரியர்களால் தூய உரையாக அங்கீகரிக்கப்படுகிறது. இத்தனை மகிமை களையும் சிரமேற்கொண்டு வருத்தலைவிளானுக்கும், புன்னாலைக்கட்டுவனுக்கும் வந்து வித்துவ சிரோன்மணியை வணங்குங்கள். பேறடையுங்கள்.

### சீடர்கள்

இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம், பண்டித வித்துவான் க.கி. நடராஜன், பண்டிதர் ச. பொன்னுத்துரை, பண்டிதர் ச. இளமுருகனார், பண்டிதர் ஆர்.கே. முருகேசன், பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர், ஈழகேசரி நா. பொன்னையா ஆகியோர் இவரது சீடர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். பேராசிரியர்கள் பலர், பண்டிதமணிகள், புலவர்கள், தமிழகத்து அறிஞர்கள் என இவரது தமிழ்ப்பட்டறையில் மகிழ்ந்தவர்கள் பலர் உளர். விரிவுரையாளர் விநாயகமூர்த்தியின் பயபக்திக்கு நிகராக எவரும் இலர்.

### நிறைவு

08.11.1958இல் அமரத்துவமடைந்த வித்துவசிரோன்மணி பற்றிய தமிழ் ஆய்வுகள் எளிதாக அடுத்த சந்ததிக்குச் சென்றடையும் வண்ணம் பேறாக்கப்பட வேண்டும். புன்னை நகர்க் கணேசையர் வெளியீட்டகம் தொடர்ந்தும் பாடுபட மருதடிப் பிள்ளையார் வருத்தலை விளானில் வரமருள்வாராக.

முன்னாள் விரிவுரையாளரும், சிறந்த ஆன்மீக வாதியும், முன்னிலைப் பேச்சாளரு மாகிய திரு ச. விநாயகமூர்த்தி அவர்கள் வித்துவ சிரோன்மணியின் ஆசிபெற்ற மாணவ னாவார். அவரிடம் குரு சீட அனுபவங்கள் ஏராளம் உண்டென்பதை அன்றைய தினம் அவர் ஆற்றிய உரையினின்றும் சபையால் உணரமுடிந்தது. பேராசிரியர் எஸ். சிவலிங்க ராஜாவும் விநாயகமூர்த்தி ஐயாவின் பேச்சின் உட்பொருளை வியந்து பாராட்டினார். அன்று வெளியிடப்பட்ட **"மேகதூதக் காரிகை உரை"** என்ற நூலும், **"வித்துவ கணேசமணி"** என்ற வரலாற்று ஆவண நூலும் வித்துவ சிரோன்மணியின் பூட்டனார் - பிரம்மஸ்ரீ பா. சுந்தர ராஜ சர்மா அவர்களின் அயராத பெருமுயற்சியால் வெளியிடப்பட்டமை தமிழன்னைக்குப் பெருமையளிக்கிறது. ஆயாக்கடவைப் பிள்ளையாரின் திருவருள், கணேசையரின் மேலும் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

*அறிவு தலைக்குக் கிரீடம். அடக்கம் காலுக்குச் செருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

முதலாந் திருமுறையிலுள்ள அனைத்துத் தேவாரங்களுக்கும் பொருளை இத்தொடரில் எழுதும் நோக்கமில்லாவிடினும் தினமும் பாடித் துதிக்கக்கூடிய சில தேவாரங்களை இம் முறையும் நோக்கலாம்.

ஞானப்பால் உண்டு ஞானம் பெற்று தேவாரப் பதிகங்களைப் பாடி தல தரிசனஞ் செய்யத் தொடங்கிய குழந்தையாகிய சம்பந்தப் பெருமான் சீர்காழியிலிருந்து அதற்கருகே அமைந்திருந்த திருக்கோலக்கா என்னும் தலத்திற்குச் சென்றார். அங்கு கோவிலை வலஞ் செய்து வழிபடுகையில் தன் சின்னஞ்சிறு பிஞ்சுக் கரங்கள் சிவக்க, கைத்தாளமிட்டு தக்கராகப் பண்ணில்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கை கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ

என்னும் தேவாரத்தைத் தொடக்கமாகக் கொண்ட பதிகத்தைப் பாடினார். தன் ஞானக் குழந்தையின் கைகளில் உண்டாகும் நோவினைப் பொறுக்காத ஈசன் பஞ்சாட்சர மந்திரம் பொறித்த செம்பொற்றாளத்தை சம்பந்தப்பெருமானுக்கு ஈந்தருளினார்.

பொய்கையின் நீரை மகளிர் குடைந்து நீராடுவதால் அதன் மடையிலுள்ள வாளை மீன்கள் துள்ளிப் பாய்கின்றன. அத்தகு பொய்கை கொண்ட கோலக்காவிலே உள்ளவன் சடையும் அதில் பிறையுங் கொண்டவன். நீறு பூசியவன், கீழுடை தரித்தவன். இவ்வாறான அவனது தோற்றம் எத்தகையுது! என்று இத்தேவாரத்தில் அந்தக் கோலக்காவுள்ளானின் திருவுருவங் கண்டு பிரமிக்கிறார் பெருமான்.

இந்த உலகில் பிறக்கிறோம். வாழ்கின்றோம். முடிவில் இறக்கின்றோம். இப்படியே சுழலும் வாழ்க்கைச் சக்கரத்தில் மாறி மாறி உழலும்போது சலிப்பு ஏற்படுகிறதல்லவா? இதிலிருந்து விடுபட என்ன செய்யலாம்? என்று தவிக்கும் எமக்கு ஏற்றதொரு தேவாரம் இதுவாகும்.

சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை
சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
ஆமா றறியா தலமந்துநீர்
அயர்த்துங் குறைவில்லை ஆனேறுடைப்
பூமாண் அலங்கல் இலங்கு கொன்றை
புனல்பொதிந்த புன்சடையி னான் உறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடத் தொழுமின்களே.

*ஆற்றலைக் காட்டிலும் ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேவாரத்தின் பண் பழந்தக்க ராகம். பதிகத்தின் முதலாவது தேவாரத்தையே எடுத்து எழுதி வருவதால் பதிகத்தின் அடுத்தடுத்து வருவனவற்றைப் பாடலாகாதோ? என்றொரு ஐயம் சிலருக்கு எழலாம். அப்படியில்லை. மனம் விரும்பும் ஒரு தேவாரத்தைப் பாடலாம். இத்தேவாரம் மூன்றாவதாகப் பதிகத்தில் அமைந்துள்ளது. ஆனால் அலமந்து நிற்கும் மனம் இதனைப் பாட மிக விரும்பும். எனவே அத்தகையோர் பாடக்கூடிய தேவாரமாக இது அமைந்துள்ளதால் பலரும் இதைத் தினமும் பாடிவருகின்றனர்.

பிறக்கும் நாள், வாழும் நாள், இறக்கும் நாள் ஆகியனவாய் அமைந்த இந்தச் சலிப்பான வாழ்க்கை இல்லாது போகச் செய்யும் தவத்தினை நன்கு அறியாது குழம்பித் தவித்து நீர் அயர்ந்தது குறையல்ல என்று கூறும் சம்பந்தர் அந்த வாழ்வு ஒழிய வழியொன்று செப்புகின்றார். "இடபத்தை உடையவரும் மலர்களிலே மாட்சிமையுடையதாய் விளங்கும் கொன்றையையும் கங்கையையும் அணிந்த சிவந்த சடையுடையவருமாகிய சிவபெருமான் உறையும் தூய்மையும் மாண்புமுடைய கடந்தை நகரிலுள்ள பெரிய கோவிலிருக்கும் திருத்தூங்கானை மாடத்தை வணங்குங்கள்" என்பதே அவர் காட்டும் வழி. அவ்வாறு வணங்கு வோருக்கு இந்தச் சலிப்பான வாழ்க்கை அற்றுப்போகும். இதுவே இத்தேவாரத்தின் பொருளாகும்.

இதன் கருத்தைச் சிந்திக்கச் சிந்திக்க ஆழ்ந்த தத்துவப் பொருளும் சித்தத்துள் தென்படும். அநித்தியமான வாழ்க்கை பற்றிச் சிந்திக்கச் செய்து மனதைச் செம்மைப்படுத்தும் தேவாரமாக இது அமைந்துள்ளது.

இதேபோன்று சிந்திக்கச் செய்யும் மற்றொரு தேவாரம் வருமாறு

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே.

இதன் பண் தக்கராகம்.

"சிந்தி நெஞ்சே" என்கின்றார் ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தப் பெருமான். மனதைச் "சிந்தி" என்று கூறவே தேவையில்லை. எவரும் கூறாமலே எந்த நேரமும் எதையெதையோ சிந்தித்துக்கொண்டிருக்கும். "பக்கத்து வீட்டுக்காரனுக்கு பணம் வந்து குவிகிறதே. எப்படி வருகிறது? நானும் படாதபாடு படுகிறேன். இருக்கின்ற செல்வமும் எங்கோ போகிறது. எதிர் வீட்டுக்காரனின் பிள்ளைகள் எவ்வளவு திறமைசாலியாக இருக்கிறார்கள். எனது பிள்ளை களையும் எத்தனை பிரசித்திபெற்ற ஆசிரியர்களிடம் கற்க விடுகிறேன். பரீட்சை முடிவுகள் ஏமாற்றத்தைத் தருகின்றன. ஏன் அப்படி?" என்பது போன்ற எண்ணங்கள் பலரது மனங்களில் உருவாகும்.

"இப்படிச் சிலருக்கு நன்மைகளும் சிலருக்குத் தீமைகளுமாய் நடந்தேறுவதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். அதுவும் பாவச் செயல்கள் செய்வோருக்கு நன்மைகளும் நல்ல மனிதர்களுக்குத் துன்பங்களும் வந்தெய்துவது எதனால்? முற்பிறவிகளிலே செய்த வினைகளின் பயன்களே இந்தப் பிறப்பில் இப்படிக் கிடைக்கிறது போலும்" என்றவாறு சிந்திப்போரும் உளர்.

*அறிவின்மை கேவலம், அதைவிடக் கேவலம் அறிய மனமில்லாமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த நூல்கள் நாம் செய்யும் வினைகளை பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என மூன்றாகக் கூறுகின்றன. நாம் செய்யும்போது அந்த வினை ஆகாமியம் எனப்படுகிறது. புண்ணியம், பாவம் என்று பயன்படும்போது அவ்வினை பிராரத்தம் என்று கூறப்படுகிறது. பயன் தரும் வரையும் இருக்கும் அவ்வினை சஞ்சிதம் என அழைக்கப்படுகிறது. எனவே பிரார்த்த வினையாகாமல் ஆகாமியமும் சஞ்சிதமாகவும் உள்ள வினைகள் போக ஒரு வழி இங்கு காட்டப்படுகின்றது. அதாவது நாம் செய்து கொண்டிருக்கும் வினைகளும் பயன் தந்த பின் எஞ்சிய வினைகளும் நீங்க சம்பந்தப் பெருமான் கூறும் மார்க்கம் இதுதான். நறுமணம் கமழும் செந்நிறச் சடாமுடி உடைய வரும் அந்தமற்றவருமான திருப்புன்கூரிலே கோவில் கொண்டிருக்கும் சிவபிரானை நெஞ்சே நீ சிந்தி. சிவனவன் அடிகளைச் சிந்தித்திருப்பவருக்கு வினைகள் நீங்கும். வினைகள் நீங்கினால் வீடுபேறு சித்திக்கும். ஆழமான தத்துவங்களைத் தம் மகத்தே கொண்ட இத்தேவாரங்களைப் பாடப் பாட வீடுபேறு சித்திக்கும்.

## என்று நீ மனங்கொள் வாயோ

மாருதம் வீசும் நேரம்
தொண்டைமா னாற்றி னோரம்
சேரிடம் அறிந்தே சேர்ந்த
சேய்களாய் நாமும் சேர்ந்து
குன்றுதோ றாடும் வேலன்
கழலினை நாடி நிற்போம்
என்றுதா னெங்கள் ஈனப்
பிறவிநோய் தீரும் ஐயா
நன்றுதான் நீயும் எங்கள்
பிறவிநோய் தீரும் ஐயா
கன்றுபோல் தாவிச் செல்லச்
சந்நிதி வந்தோம் செல்வா
என்று உன் அடியின் கீழே
இருமாந்து இருப்போம் கந்தா
நன்றுந் தமிழ் செய்விப்பாய்
நின்னரும் புகழைப் பாட
என்றுநீ மனங் கொள்வாயோ
செந்தமிழ் தரணி யாள.

-தி. பாலசுப்பிரமணியம்-

மௌனம் என்ற மரத்தில் அமைதி என்னும் கனி தொங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டர்க்கு வழிகாட்டியான மார்க்கண்டு சுவாமிகள்

– திரு ம. சிவயோகசுந்தரம் அவர்கள் –

யோகர் சுவாமிகள் தமது இறுதிக் காலங்களில் சிவதொண்டன் நிலையம் கைதடி மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமம் போன்ற இடங்களுக்கு அடிக்கடி வருவார். அப்படி ஒரு நாள் கைதடிக்கு வந்தபோது அவரைச் சுற்றி நின்ற சோல்பரிப் பிரபுவின் மகன் சந்தசுவாமி, சேர் வைத்திலிங்கம், துரைச்சாமி மற்றும் அடியவர்க்கு மார்க்கண்டு சுவாமி களை சுட்டிக்காட்டி "இவன் மார்க்கண்டுவை சிவதொண்டர் தறிகெட்டுப் போகாமல் இருக்க வழிகாட்டியாக விட்டுச் செல்கிறேன்" என அருளினார்.

தெய்வ சித்தம் ஒருவராலும் அறிய முடியாது. கைதடி ஆச்சிரமம் யோகர் சுவாமி கள் மனதில் முன்பே உதயமாகியுள்ளது. யோகர் சுவாமிகளின் அடியவர்களாக இருந்த எமது தகப்பனார் மயில்வாகனம், சிறிய தந்தையார் விசுவலிங்கம், மைத்துனர் முத்துக் குமாரசுவாமி (யாழ் இந்துக் கல்லூரி உப அதிபராக இருந்தவர்) வசித்த கைதடி வீட் டிற்கே 1940ஆம் ஆண்டுகளிலேயே யோகர் சுவாமிகள் பல தடவை வருகை தந்து ஆசீர வதித்துள்ளார். சற்குணசிங்கம் என்ற இயற் பெயருடைய அளவெட்டி சிவ சித்தர் சுவாமி கள் யோகர் சுவாமிகளின் அடியவராக விளங்கியவர். இவர் ஒருநாள் கொழும்பில் எமது தந்தையாரை கைதடி வளவில் ஒரு சிறிய ஆச்சிரமம் அமைக்குமாறு பணித்தார். எமது தந்தையாரும் சிலவேளை இவர் தங்கு வதற்கு இந்த ஆச்சிரமத்தை அமைக்கச் சொல்கிறார் என்று ஆச்சிரமத்தை நிறுவினார். ஆனால் சிவசித்தர் சுவாமிகள் இங்கு ஒரு நாளும் தங்கவில்லை. அவர் திருவடி நிழல் என்ற தமது ஆச்சிரமத்திலேயே தங்கி பல நாடுகளுக்குச் சென்று சைவ சித்தாந்தத் தைப் போதித்து 1956ஆம் ஆண்டு சமாதி யானார்.

வழமைபோல் எமது சிறிய தந்தை யார் விசுவலிங்கம் 1950ஆம் ஆண்டு யோகர் சுவாமிகளை தரிசித்தபோது அவரை நோக்கி "விசுவலிங்கம் உனது வீட்டு ஆச்சிரமத்தில் தங்க உனக்கு ஒரு நல்ல சினேகிதனைத் தருகிறேன். அவன் போகும்போது உங் களுக்கு எல்லாவற்றையும் தந்து விட்டுச் செல்வான். நாளை அவனை கைதடியில் தங்க கூட்டி வருவேன். போய் ஆயத்தங் களைச் செய்" எனப் பணித்தார்.

அடுத்தநாள் யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளை அழைத்து வந்து அங்கே தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமி களும் தாம் சமாதியாகும்வரை இவ்வாச்சிரமத் தில் ஆன்மீக சாதனைகளில் ஈடுபட்டார். இளைஞர் மார்க்கண்டு பிரான்பற்று என்ற ஊரைப் பூர்வீகமாகக் கொண்டவர். இளமை யிலேயே இறை பக்தியுடையவர். தமது கல் வியை பூர்த்தி செய்து தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் பணியாற்றினார். அந்த வேளையில்த்தான் இளைஞர் மார்க் கண்டுவை யோகர் சுவாமிகள் ஆட்கொண் டார். மலைநாட்டுக்குச் செல்லும்போதெல்லாம் மார்க்கண்டர் வசித்த தியத்தலாவை இல்லத் திற்குச் சென்று ஆருமறியாமல் அந்தரங்கமாக

*விடுதலை பெறும்போதுதான் உண்மையைக் காணமுடிகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் பாலித்தார். மார்க்கண்டர் தமது ஐம்பதாம் வயதில் உத்தியோகத்தை உதறித் தள்ளி கொழும்புத்துறை சென்று யோகர் சுவாமிகளை பணிந்து நின்றார். யோகர் சுவாமிகள் சில நாட்கள் மார்க்கண்டரை யாழ்ப்பாணத்தில் தங்க வைத்து பின்னர் கைதடியில் நிரந்தரமாகத் தங்க வைத்தார்.

யோகர் சுவாமிகளும் கைதடி ஆச்சிரமத்திற்கு வந்து சில வேளைகளில் இரவில் தங்கியும் மார்க்கண்டருக்கு நற்சிந்தனை என்னும் நல்லமிர்தத்தை பருக வைத்தார். ஒருநாள் நல்லூர் தேரிற்குச் செல்ல மார்க்கண்டு சுவாமிகள் யோகர் சுவாமிகளை இரந்து நின்றார். உடனே யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளின் உடலைச் சுட்டிக் காட்டி "இதுதான் நல்லூர். இதுதான் தேர்" என்று கூறி பின்னர் தேரிற்குச் செல்லுமாறு பணித்தார். யோகர் சுவாமிகள் சந்தசுவாமிகளை (சோல்பரி பிரபுவின் மகன்) மார்க்கண்டு சுவாமிகளுடன் பல காலம் தங்க வைத்து பல அருள்மொழிகளை புகட்டியுள்ளார். இவை தற்சமயம் சிவதொண்டன் நிலையத்தினால் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. மார்க்கண்டு சுவாமிகளும் சற்குருவின் போதனைப்படி ஒரு சோறும் ஒரு கறியும் உண்டு உண்டியைச் சுருக்கி சிவத்தியானத்தில் ஈடுபட்டார். சில வேளைகளில் அவர் தியானத்தில் இருக்கும் போது காகம், குருவிகள்கூட அவர் தலையில் அமர்ந்திருக்கும்.

யோகர் சுவாமிகள் சமாதி நாளன்று மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமத்திலிருந்து மூன்று நாட்கள் எங்கு சென்றாரென ஒருவரும் அறியார். பின்னர் திரும்பி வந்து ஒன்றும் அறியாதவர் போலிருந்தார். அப்பொழுதுதான் தம்மை வணங்கும் அடியவர்க்கு தம்முன் கற்பூரம் கொளுத்தவும் வழிபடவும் அனுமதித்தார். அவர் மேனியோ யோகர் சுவாமிகளின் திருமேனியின் சாருபத்தை பெறும் வண்ணமான ஆற்றல் வாய்ந்ததாயிருந்தது. யோகர் சுவாமிகளுடன் மார்க்கண்டு சுவாமிகளுக்கு இருந்த உறவு திருநாவுக்கரசருக்கும் அப்பூதியடிகளுக்கும் காணப்பட்ட உறவாக இருந்தது.

தமது இறுதிக்காலத்தில் குளிப்பு முழுக்கை கைவிட்டு தியானத்திலிருந்தார். அச்சமயம் அவருடன் சந்த சுவாமிகள் தங்கி பணி விடைகள் செய்தார். ஒருநாள் சந்த சுவாமிகளின் கனவில் மார்க்கண்டு சுவாமிகள் "நீ இங்கிலாந்து சென்று உன் உறவினர்களைப் பார்த்துவிட்டு வா" எனக் கூறினார். இதை முத்துக்குமாரசுவாமிக்குக் கூறி இங்கிலாந்து பயணமானார்.

சந்த சுவாமிகள் இங்கிலாந்து சென்ற சில நாட்களில் தமது உடலைத் துறக்க முடிவெடுத்து 1984ஆம் ஆண்டு வைகாசி கார்த்திகை நட்சத்திரத்தில் யோக குருநாதன் திருவடிகளைப் பற்றினார். இவ்வாச்சிரமத்தில் திருவடி பிரதிட்டை செய்யப்பெற்று நற்சிந்தனைப் பாராயணம், கார்த்திகை மாசபூசைகளும் வைகாசியில் குருபூசையும் அடியவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

"குரு பக்தியே பெறும்பேறு அதைக்
கொண்டாடி நீ ஆறு"

## தூய்மை

உன் மனதில் தீங்கு உள்ளது. அதனால்த்தான் உன்னால் அமைதியைப் பெற முடியவில்லை. தூய்மை, தூய்மையின்மை இரண்டுமே மனதில்த்தான் உள்ளது. தூய்மையான மனம் உடையவர்கள் அனைத்தையும் தூய்மையாகவே காண்கிறார்கள். முதலில் மனதை தூய்மையாக வை. இறைவனைக் காண வழி கிடைக்கும்.


-சாரதாதேவி-

*தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்.



உண்மையை மறைப்பதும் பொய் சொல்வதற்கே ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்.




சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலருடன்
அன்றைய நிகழ்வில் கலந்துகொண்ட அடியார்கள்.



ஒருதுளி மையினால் எழுதும் கருத்துக்கள் ஓராயிரம் பேரைச் சிந்திக்க வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கண்ட தசீதரன்

– மோகனதாஸ் சுவாமிகள் –

ஆம்! நாம் கண்ட தசீதரன் என்று கூறுவது கடந்த வாரம் எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்த (13.05.2017 சனிக்கிழமை) அமரர் க. நித்தியதசீதரன் அவர்களைத்தான். அவரது ஆற்றாத பிரிவின் தன்மை எம் மனதில் பெரிய சுமையை ஏற்படுத்தி விட்டது என்றே கூறலாம். அவ்வகையில் அவரது இழப்பானது சமூகம் சார்ந்ததும் அல்லாமல் சமயஞ் சார்ந்ததாகவும் அமைந்துவிட்டது. அவரது இளம் பிராயத்திலிருந்து சமயம் சார்ந்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அச்செயற்பாடுகளுக்கு தானும் ஒருவனாக முன் நின்று பணிபுரிவதில் தசீதரனுக்கு நிகர் தசீதரனே.



2000ஆம் ஆண்டளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வின்போது அக்காலப் பகுதியில் பேரவை உறுப்பினராகவும் பின்பு தலைவராகவும் இருந்த திரு க. அருள்லிங்கம் அவர்கள்மூலம் வெள்ளிதோறும் இடம்பெறும் வாராந்த நிகழ்வில் இளம் சொற்பொழிவாளராக மேடையேறியதை இன்றும் எம்மால் மறக்கமுடியாது. அதன் பயனாக பலமுறை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வழங்கப்பட்ட விருதுகளையும் பெற்றுக்கொண்டவர். அவரது வாழ்க்கையில் சமய ஆசிரியராக, சொற்பொழிவாளராக, ஆன்மீக வாதியாக, குடும்பத் தலைவனாக, இரு பிள்ளைகளின் தந்தையாக இருந்தது மட்டுமல்லாமல் எந்நேரமும் தான் சைவன் என்பதை நிலைநிறுத்தும் வண்ணம் நெற்றியில் திருநீற்றுடன் வாழ்ந்த பெருமைக்குரியவர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாதாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் மலையகப் பணியில் தானும் ஒருவனாக கலந்து எம்மோடு வருகை புரிந்து தனது சொற்பொழிவுகள் மூலம் "யார் அந்த நித்திய தசீதரன்" என்று கேட்குமளவிற்கு தனது பணியை மலையகம் எங்கும் பரவச் செய்தவர். மலையகத்தில் அவர் ஆற்றிய சேவையின் பயனாக பண்டாரவளை இந்து மாமன்றத்தால் நினைவுக் கேடயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றோம். எத்தனை பாடசாலைகள், எத்தனை அறநெறிப் பாடசாலைகள், எத்தனை ஆலயங்கள் அங்கெல்லாம் எம்மோடு இணைந்து வந்து எமது மலையகச் செயற்பாட்டிற்கு பெரும் பங்காற்றியவர். கடந்த வருடம் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய யாத்திரையில்

*எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்மோடு இணைந்து காசிமுதற் கொண்டு நேபாளம் காட்மண்டு வரை தலயாத்திரையில் தான் பெற்ற அனுபவப் பகிர்வின்மூலம் தன்னால் மேற்கொள்ளப்பட்ட சொற்பொழிவுகளின் வலிமையை மேம்படச் செய்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அனைத்துப் பணிகளுக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கியதோடு தானும் எம்மோடு ஒருவனாகக் கலந்து சேவையாற்றிய பெருமகன்.

இந்த இளம் வயதிற்குள் அவர் ஆற்றிய பணிகள் பல. அவரது செய்கையின் மூலம் பயனடைந்த நிறுவனங்கள் பல. முக்கியமாக அவரது கல்விப் பணியில் சிறந்ததொரு ஆசானாக பணி புரிந்து எல்லோர் மனதிலும் நீங்காத ஓர் இடத்தைப் பெற்று நிலையான வாழ்வை அடைந்தவர். ஆச்சிரமத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வின் ஏதாவதொரு தடங்கல் ஏற்படின் "கூப்பிடு நித்திய தசீதரனை" என்று கூறுமளவிற்கு அர்ப்பணிப்புடனும் ஆளுமை யுடனும் செயற்பட்டவர். இப்படியானவர்களைக் காண்பது அரிது. அவரது பூதவுடல் மறைந்தாலும் அவர் ஆற்றிய பணிகள்மூலம் என்றும் எல்லோர் மனத்திலும் நிலையாக நிலைத்து நிற்பார் என்பது திண்ணம்.



வட இந்திய தலயாத்திரை மேற்கொண்டபோது...

வாழ்க்கை ஒரு போர்க்களம். நம்பிக்கைதான் ஆயுதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 30)


# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர்கள்

### யோகர் சுவாமிகள்: பாகம்- II

சிவயோக சுவாமிகள் அருளிய அருள்வாக்கு சிவதொண்டன் நிலையத்தால் வெளியிடப்பெற்ற நற்சிந்தனை நூலில் அவருடைய கையெழுத்தோடு பதிவு செய்யப்பட்டுள்ளது.



"நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்".

-யோகர் சுவாமிகளின் மந்திர மொழி-

எங்களுடைய சமய மரபில் முதல் வணக்கம் விநாயகப் பெருமானுக்கே உரியது. அறிவுத் தெய்வமாகிய விநாயகப் பெருமான் நாம் செய்கின்ற காரியங்களில் ஏற்படும் தடைகளை நீக்கி காரிய சித்திக்கு வழிகாட்டுபவர். ஆனை முகத்தை உடையவன். சிவனின் மைந்தன் பெருவயிறன், காதில் தோடு அணிந்தவன், கயாமுகசுரனை வதம் செய்து இந்திரனைக் காப்பாற்றியவன், ஓங்கார வடிவாகக் காட்சி தருபவனுமாகிய விநாயகப் பெருமானை யான் என்றும் மறவேன் என யோகர் சுவாமிகள் அருளிய தெய்வ வணக்கப் பாடல் அனுபூதி வாசகமாகவே காணப்படுகிறது.

"நந்தி முகத்தனைச் சங்கரன் மைந்தனைத்
தொந்தி வயிறனைத் தோடணி செவியனை
இந்திரனுக்கருள் ஈந்த இறைவனை
மந்திர ரூபனை நான் மறவேனே"

"எங்கள் குருநாதன்" என்ற தலைப்பில் பாடப்பெற்ற பத்துப் பாடல்களும் நற்சிந்தனை என்ற வேதத்தின் மகுடமாகத் திகழ்கிறது. யோகர் சுவாமிகளே இதனைத் தான் பாடியது என்று கூற முடியாது என்கிறார். பரம்பொருளாகிய இறைவன் யோகர் சுவாமிகளைக் கருவியாகக் கொண்டு இப்பாடல்களைத் தந்துள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் தெய்வ வாக்கே ஆகும்.

இப் பத்துப் பாடல்களின் சாரமாக முதற் பத்துப் பாடலும் முதற்பாடலின் சாரமாக என்னை எனக்கு அறிவித்தான் என்ற முதல் வாசகமும் காணப்படுகின்றன. "தன்னை

*உண்மையை நேசி; பிழையை மன்னித்துவிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தவன் தத்துவ ஞானி" என்றும், "தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை" என்றும் தவயோகி திருமூலநாயனார் அருளிய திருமந்திரமும் குறிப்பிடுகிறது. இப் பத்துப் பாடல்களிலே தான் யார்? தன்னை அறிவிக்கும் தலைவன் யார்? அத்தலைவன் எவ்வாறு தன்னை அறி விக்கிறான், அவன் அறிவிக்கும் நெறிகளில் யோகநெறி, பக்தி நெறி, ஞான நெறி, அன்பு நெறி, அருள்நெறி, இன்பநெறி, உண்மைநெறி, உபாய நெறி என்னும் இவையெல்லாம் செறிந்திருக்கின்றன. குருவின் நாமம் மானிடப் போர்வையின் அடையாளங்கள் எதுவும் இந்தப் பத்துப் பாடல்களிலும் குறிப்பிடப்படவில்லை. சித்தத்துள் திகழுகின்றான். விண்ணும் மண்ணுமாகி நிற்கிறான். மூவருக்கு மறியவொண்ணான், தத்துவாதீதன் என அவரது தெய்வீகம் மட்டுமே விளக்கப்பட்டுள்ளது.

"என்னையெனக் கறிவித்தா னெங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள் குருநாதன்
அன்னை பிதாக் குருவானா னெங்கள் குருநாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள் குருநாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள் குருநாதன்
நன்மை தீமையறியாதா னெங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றா னெங்கள் குருநாதன்"

இறையருளால் வெளியிடப்பட்ட பத்துப் பாடல்களில் இது முதலாவது பாடலாகும். மணிவாசகரின் திருவாசகத்தில் வரும் சிவபுராணப் பாடலைப் பாராயணம் செய்வதுபோல எங்கள் குருநாதன் என்ற தலைப்பில் வரும் பத்துப் பாடல்களையும் உணர்ந்து பாடினால் இகபர சுகங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

மாணிக்கவாசகப் பெருமான் அருளிய தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் கண்ட பத்து என்றோர் பகுதி உண்டு. தில்லையிலே ஆனந்தக் கூத்தாடும் நடராசப் பெருமானின் நளின பொற்பாதத்தைக் கண்டு அந்தமிலா ஆனந்தம் அனுபவித்ததை மணிவாசகர் பாடு கின்றார். யோகர் சுவாமிகள் அருளிச்செய்த நற்சிந்தனைப் பாடலிலும் கண்டபத்து எனப் பதிகம் ஒன்றுண்டு. செல்லப்ப தேசிகர் நல்லூர்த் தேரடியில் காட்டி வைத்த திருவடிக் காட்சியை யோகர் சுவாமிகள் தான் அருளிய கண்டபத்துப் பாடல்களில் பாடியுள்ளார்.

"பொறிவழியே போய்ப் புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயே நானென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறி பொழில் சூழ் நல்லை நகரத் தேரடியில் கண்டேனே"

பொறிகளின் வலையில் அகப்பட்டு புலம்பித் திரிந்த தன்னை ஆட்கொண்டு நீயே நானென்றுரைத்தவர் எனது குருநாதன். பித்தனென்று பிறர் கூறும் அந்த ஞானச் செல்வரை நல்லூர்த் தேரடியில் கண்டேன் என்கிறார் யோகர் சுவாமிகள்.

சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு ஞானபூமியாகவே மிளிர்ந்தது. பக்தர்கள், யோகிகள், சித்தர்கள், ஞானிகள் என அருளாளர்கள் பலரும் நட மாடித் திரிந்த பிரதேசம். கிராமங்கள்தோறும் அடியார்களுக்கு திருவருளை வாரி வழங்கும் பெருங் கருணைத் தேக்கங்களாக உள்ள ஆலயங்கள் நிறைந்திருக்கும் பூமி. படிப்பறிவில்லாத

*தேவைப்படும்போது தன் முடிவை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவன்தான் அறிவாளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமர மக்களும் செவிநுகர்கனிகளாக கந்தபுராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றை ஆலயங்களில் நடைபெற்ற புராண படனங்களின் ஊடாக அறிந்து வைத்திருந்தார்கள்.

எங்கள் வளநாடு என்ற தலைப்பில் யோகர் சுவாமிகள் பாடிய பாட்டில் எமது நாட்டின் பெருமைகளையும், சிறப்புக்களையும் விதந்து போற்றியுள்ளார். அன்பர்கள் பணி செய்திடும் நாடு, இறையருள் நிறைந்த நாடு, துன்பங்களைப் போக்கிடும் நாடு, இன்பப் பயிர் ஓங்கி வளரும் நாடு, புலனிச்சைக்கு உட்பட்ட கள்வர்கள் இல்லாத நாடு என எங்கள் நாட்டின் சிறப்பினைப் பாடியுள்ளார்.

"அன்பர் பணிந்தேத்தி நிற்கும் நாடெங்கள் நாடே
அரனுறைதற்கிடமான நாடெங்கள் நாடே
துன்பக் களை போக்கி நிற்கும் நாடெங்கள் நாடே
தூயவருள் மழை பொழியும் நாடெங்கள் நாடே
இன்பப் பயிர் ஓங்கி வளர் நாடெங்கள் நாடே
இந்திரியக் கள்வரற்ற நாடெங்கள் நாடே
என்பு நனி நெக்குருக என்னை வலிந்தாண்ட
என்குரவன் காட்டி வைத்த தெங்கள் வள நாடே"

"சிவனடியைச் சிந்தி நெஞ்சே" என்ற தலைப்பில் பாடிய பாடல்களில் அறவிழுமியத்தைப் பேணி வாழவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பாடியுள்ளார். தருமம் செய்வதில் என்றும் தவறாதே; இழிவான செயல்கள் எதனையும் வாழ்வில் செய்யாதே; மரணம் ஏற்படினும் சத்திய நெறியில் நின்றும் தவறாதே; எமக்கு ஏற்படுகின்ற நன்மையும் தீமையும் எமது கைகளில் இல்லை; எல்லாம் இறைவன் செயல் என நினைந்து சிவனடியைச் சிந்தித்து வாழ வேண்டும் என்று மனதிற்கு உபதேசம் செய்யும் பாடலை யோகர் சுவாமிகள் அருளி உள்ளார்.

"ஈவது விலக்காதே; இழிதொழில்கள் செய்யாதே
சாவது வந்தாலும் சத்தியத்தை மறவாதே
ஆவதும் அழிவதும் நமக்கில்லை என அறிந்து
தேவர்கள் தொழுதேத்தும் சிவனடியைச் சிந்தி நெஞ்சே"

"சிவ நாமஞ் சொல்லித் தெளியோமோ" என்ற தலைப்பில் சில பாடல்களைக் குறள் வெண்பா வடிவில் யோகர் சுவாமிகள் பாடியருளியுள்ளார்.

01) சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ
திருவடி கண்டு களியோமோ
02) பொறிவழி மனத்தைப் போகாமற் கொல்வோம்
பூரணமான நிட்டையிற் செல்வோம்
03) நன்றியை நாங்கள் மறந்திட மாட்டோம்
நாடெங்கும் சென்று சிவதொண்டு செய்வோம்
04) இன்பமே யல்லாமற் துன்பம் நமக்கில்லை
ஈசனை மறந்தால் வந்திடுந் தொல்லை.

*நேர்மையான உழைப்பில் கௌரவம் இருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகர் சுவாமிகள் நல்லைக் கந்தன்மீது பாடிய பாடல்கள்

செல்லப்பா சுவாமிகள் நல்லூர்த் தேரடியைத் தனது ஞான அனுபவத்திற்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்து வாழ்ந்து வந்தார். செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப்பெற்ற அருட் செல்வராகிய யோகர் சுவாமிகள் நல்லூரான்மீது பாடிய பாடல்கள் முருகப் பெருமானின் திருவருளை உணரவைக்கும் ஞானப் பாடல்களாகக் காணப்படுகின்றன. "ஈனப்பிறவி நீக்கும் எழிலறிந்த செல்லப்பா சுவாமிகள் ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், முழுவதும் உண்மை, நாமறியோம் என்னும் மகா வாக்கியங்களை யோகர் சுவாமிகளுக்கு பகர்ந்தருளினார். யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள் இம் மகா வாக்கியங் களை உண்மை விளக்கம் செய்யும் பாடல்களாகவே அமைந்துள்ளன. நற்சிந்தனைப் பாடல் களை "மகா வாக்கிய மாபாடியம்" எனக் கூறலாம் என்பது யோகர் சுவாமிகளின் நேரடிச் சீடராகிய செல்லத்துரை சுவாமிகளின் கருத்தாகும்.

உலகியல் வாழ்வில் நாம் படும் துன்பங்கள், துயரங்கள் வேதனைகள் நீங்க வேண்டுமானால் செல்லப்பா சுவாமிகள் தவம் செய்த நல்லூரை நாம் வலம் வந்து வணங்க வேண்டும் என நற்சிந்தனைப் பாடல் குறிப்பிடுகிறது.

01) எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.

02) அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு.

தத்துவங்கள் பேசுவதால் இறையருளைப் பெற முடியாது. நல்லூரான் வீதி நடந்தாலே வினை தீரும் என்பார்கள். வீதியில் வந்து விழுந்து கும்பிட்டால் வினைகள் எல்லாம் பொசுங்கி விடும் என்கிறார் யோகர் சுவாமிகள்.

"வேதாந்தம் சித்தாந்தம் கற்றதனாலென்ன
வேடிக்கை கதைகள் பேசினாலென்ன
வீதியில் வந்தொருக்கா விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே"

ஊன் உருகினால்த்தான் உள்ளத்தில் ஆன்ம ஒளி உண்டாகும். சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும். நல்லைக் கந்தனின் திருவருள் கிடைத்துவிட்டால் கல்நெஞ்சும் கசிந் துருகும். ஆன்மா அழியாத பொருள் என்பதை உணர்த்தி பிறவிநோய் நீங்க வழி காட்ட வேண்டும் என்றும் உடலைவிட்டு உயிர் போகமுன்பே முருகப் பெருமானின் தரிசனத்தைக் காணவேண்டும் என்றும் பிரார்த்திப்பதைப் பின்வரும் நற்சிந்தனைப் பாடல்களில் காணலாம்.

01) நல்லைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே
நல்லவழி காட்டி நாயேனை யாண்டிடடா.

02) கல்லை நிகர்த்த மனம் கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா.

03) ஆன்மாவை நித்தியமென்றறிய வரந்தந்திடடா
வீண் பாவனை யெல்லாம் விலக்க வருள் தாடா.

04) மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா.

*மனித வாழ்வு என்பது தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை தெளியவும் மனதில் சாந்தி தோன்றவும் நல்லைக் கந்தனின் திருவருள் துணை செய்யும். "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு என நாள்தோறும் பூவும் நீரும் கொண்டு இறைவனைப் பூசித்தால் எல்லா மனச் சுமைகளும் நீங்கிவிடும் என்று திருமூலரும் குறிப்பிடுகின்றார். அடியவர்க்கு எளியவனாகிய முருகப் பெருமான் தன்னை நாடிவரும் அடியவர்களின் துன்ப துயரங்களை எல்லாம் நீக்கி அருள் செய்வான். மெய்யடியார்கள் நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனத்தோடு வணங்கினால் நல்லூர் முருகன் தோகை மயில் வாகனத்தில் வந்து அபயகரத்தைக் காட்டி "யாமிருக்க பயம் ஏன்? என்று அடியார்களுக்கு அருள் செய்வான். சஞ்சலப்பட்ட மனதில் சாந்தி தோன்றி விடும் என நற்சிந்தனைப் பாடல் குறிப்பிடுகிறது.

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி"

மனம் அடங்கினால் முத்தியும் சினம் அடங்கினால் சித்தியும் கிடைக்கும் என்று சித்தர் பாடல் குறிப்பிடுகிறது. பன்னிரு கையோனைப் பணிந்து வணங்கினால் மனமும் சினமும் அடங்குவதோடு சாந்தமும் பொறுமையும் ஏற்பட்டுவிடும் என யோகர் சுவாமிகள் தான் அருளிய நற்சிந்தனைப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

பவம் நீங்கும் பன்னிரு கைவேலாவெனவே
தவமோங்குஞ் சாந்தம் பொறுமை - சிவமாம்
மனமடங்குமே மாசனைத்துந் தீருமே
சினமடங்குமே தேர்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்பது தமிழ் மூதாட்டி ஒளவையின் வாக்காகும். பொருள் இல்லாதவனை உலகமே எள்ளி நகையாடும். செல்வம் உடையோரை அனைவரும் சிறப்புச் செய்வார்கள்.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு"

என்றே தமிழ்மறையாகிய திருக்குறளும் கூறுகிறது. மனிதனிடம் வறுமையென்ற பாவி தோன்றினால் உடலழகும், செல்வமும், நல்ல மனமும், நற்குணமும், பிறந்த குடியின் பெருமை குலத்தின் பெருமை ஆகிய அனைத்தும் அவனை விட்டு விலகி வேறு இடத்திற்கு குடிபோய் விடும். தரித்திரமும் துக்கமும் மனிதனைச் சூழ்ந்துகொள்ளும். இவ்வுலக வாழ்வில் இத்தகைய துன்பங்கள் வராது தன்னைக் காத்தருள வேண்டும் என்று அருணகிரிநாதர் பிரார்த்திப்பதைக் கந்தரநுபூதியின் பத்தொன்பதாவது பாடலில் காணலாம்.

"வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியுங் குலமுங் குடிபோகியவா
அடியந்தமிலா அயில் வேல் அரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே"

வறுமைப் பிணிக்கான மருந்து நல்லூரில் காணப்படுகிறது. இங்கு வந்து நல்லைக் கந்தனின் திருவருள் மருந்தை அருந்தியவர்கள் அனைவரும் செழிப்பாக வாழ்கிறார்கள் என நற்சிந்தனைப் பாடல் குறிப்பிடுகிறது.

*மன்னிக்கும் உள்ளத்தில் கடவுள் குடியிருக்கின்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வறுமைப் பிணிக்கு மருந்தொன்றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே"

நல்லைக் கந்தனைத் தஞ்சமென வழிபடும் அடியவர்கள் எதற்கும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. பஞ்சம் வந்தாலும் படை வந்தாலும் ஆறுமுகனைத் தஞ்சம் என்று பிடித்தால் அவனுடைய அபயகரம் அடியவர்களைக் காக்கும் என்பது தவயோகி யோகர் சுவாமிகளின் வாக்காகும்.

"பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி"

## அன்புநெறியின் சிறப்பினைக் கூறும் நற்சிந்தனைப் பாடல்கள்.

அன்பு நெறி எல்லோர்க்கும் பொது நெறி, எவ்வுயிர்க்கும் பொது நெறி. "அன்பே சிவம்" என்றே திருமூலரும் கூறுகின்றார். அன்பால் அடையக்கூடிய ஆன்ம சாதனையை அறிவால் அடையமுடியாது. அன்பாய இகத்திலும், அருள் என்னும் அன்பின் குழவியாய் பரத்திலும் உயிர்க்கு உறுதுணையாய் நிற்கும் சிறப்பு வாய்ந்தது. அன்பாகு அறிவுடையார் எல்லாம் உடையவராயினும், அவர் அரம்போலக் கூர்மையரேனும் மக்கட பண்பாகிய அன்பு இல்லாவிடில் மரம்போல்வர் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

அரம்போலக் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்.

-திருக்குறள்-

யோகர் சுவாமிகளும் அன்பு நெறியே தாமுய்ந்த நெறியெனக் கூறியதோடு ஏனையோரும் உய்விக்கும் நெறியும் இதுவே எனக் காட்டி அவர்களையும் வழிப்படுத்தியுள்ளார்.

"பக்தி செய் யோக சுவாமி"

எனத் தம்மைத் தாமே பெயரிட்டு அழைக்கும் சுவாமிகள்.

"அன்பே கடவுள் அன்பே உலகம்
அன்பே உயிர்கள் அன்பே அனைத்தும்
அன்பே ஆவதும் அழிவதும் போலாம்
அன்பின் அதிசயம் ஆர் அறிவாரே."

என அன்பே எல்லாமாகக் கண்ட அதிசயத்தைக் கூறுகின்றார்.

சிவனடிக்கு அன்பு செய்பவர் அனைத்தையும் சிவமாகவே காண்பர். அன்பு நெறியில் நின்றால் சீவன் முத்தியைப் பெறலாம். எனவே அன்பு செய்பவர் பெரியவராவார்; செய்யாதவர் சிறியவர் ஆவார் எனவும் நற்சிந்தனைப் பாடல் குறிப்பிடுகிறது.

சிவனடிக்கன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக்கன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக்கன்பு சிறப்பினை யளிக்கும்
சிவனடிக்கன்பு சீவன் முத்தியே.

(தொடரும்...

*எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சி.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த வைகாசிப் பெருவிழா – 2017

– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

21.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி. பெருவிழாக் காண சந்நிதியான் ஆச்சிரமத்தில் கூடிய மக்களும், விழாவில் கௌரவம் பெறவிருந்த இருவர் உட்பட முக்கியஸ்தர்கள் அனைவரும் ஆச்சிரமத்திலிருந்து செல்வச்சந்நிதி முருகன் சந்நிதானத்தை நோக்கிப் புறப்பட்டனர். சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை நிகழ்வுகளைத் தொடர்ந்து - மங்கள இசையுடன், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள் - விழாக் குழுவினர் புடைசூழ - வைகாசிப் பெருவிழா நாயகர்கள் இருவரும் ஆச்சிரம வாசலுக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.








இரக்கத்தை அறிந்தவன் எல்லாம் அறிந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் சரியாக 9.30. ஊர்வலம் ஆச்சிரம வாசலில் பூரண கும்ப வரவேற்பிடம் வந்தடைந்ததும், ஆச்சிரமப் பூசையறையில் பூசையினை நிறைவு செய்த சுவாமிகள் திருநீற்றுத் தட்டத்துடன் வரவேற்பிடத்துக்கு வந்து விழா நாயகர்களுக்கும் - ஏனைய முக்கியஸ்தர்களுக்கும் நெற்றியில் நீறுபூசி உள்ளே அழைத்துச் செல்கிறார். மேடையில் நாயகர்கள் இருவரும் வீற்றிருக்க மங்கள இசை ஒலிக்கிறது. "முதல்வணக்கம் எங்கள் முருகனுக்கே..." என்றும் "நீ அல்லால் வேறு தெய்வமில்லை... முருகா" என்றும் அனைத்தும் முருகன் பாடல்களாக நாதஸ்வரத்தில் வாசித்து அரைமணி நேரம் அசத்தியபின் சரியாக 10.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.





திரு செ. பரமேஸ்வரன் அவர்களால் பஞ்சபுராணம் ஓதப்பட்டபோது, விழா மண்டபத்தில் அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செய்தனர். சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சார்பாக, திரு கு. அருணகிரிநாதன் அவர்கள் இன்றைய விழாவின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறியதுடன் கவிமணி திரு க. ஆனந்தராசா (அன்னைதாசன்)







அவர்களை வரவேற்புரை நிகழ்த்துமாறு அழைத்தார். சைவத்துக்கும் - சமூகத்திற்கும் அரும்பணியாற்றி வரும் வியாவில் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் திரு க. சோமசேகரம்

வாசிப்பு என்பது மகிழ்ச்சியான உலகத்தின் பக்கம் திறந்து வைக்கப்பட்ட கதவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மகாராணி) அவர்களையும், எவ்வித எதிர்பார்ப்புமின்றி நீண்டகாலமாகவே மக்களுக்கு மருத்துவ சேவையாற்றிவரும் மருத்துவர் லயன் S.S. அருளானந்தம் அவர்களையும் விழா நாயகர்களாக சபையோருக்கு அறிமுகப்படுத்தியதுடன் விழாவின் ஏனைய பிரமுகர்களையும் வரவேற்று உரை செய்தார். "கவிமணி" எனும் சிறப்பு கௌரவத்திற்கு ஏற்றபடி, கவிதையில் ஆரம்பித்து, உரைநடையாகத் தொடர்ந்து, கவிதையிலேயே தனது வரவேற்புரையினை நிறைவு செய்து கவிமணி தமிழுக்கு அணி செய்தார்.

மண்டபத்தில் கூடியிருந்த அனைவருக்கும் வழங்கப்பட்ட, அளவிற் பெரியதான கொழுக்கட்டையும் - வடையும் - வாழைப்பழமும் - குளிர்பானமும் அனைவருக்கும் சோர்வினை நீக்கிப் புதுத் தெம்பூட்டியது.

வைகாசிப் பெருவிழா ஆச்சிரமத்திற்குப் புதிய விடயமல்ல. 1993முதல் 2006 வரை தொடர்ச்சியாக 10 பேருக்கு "ஞான பண்டித..." எனத் தொடங்கும் கௌரவிப்புகள், பல்துறைகளிலும் மக்கள் பணி புரியும் பலருக்கும் வழங்கப்பட்டு வந்தது. ஞான பண்டித... என்பது ஆச்சிரமத்தின் அடையாளம். அதன் பின் வரும் சொல் அல்லது சொற்களே கௌரவிக்கப்படுபவரின் சேவையைக் குறித்து நிற்பது. இந்த வரிசையில் கடைசியாக 2006இல் வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை அவர்களால் திரு கு. கங்கைவேணியன் அவர்கட்கு "ஞான **பண்டித ஆன்மீகச் செம்மல்**" என்ற கௌரவம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் ஏற்பட்ட கால சூழ்நிலைகளின் காரணமாக இத்தகைய கௌரவிப்புகள் சில காலம் தடைப்பட்டு, மீண்டும் இவ்வாண்டு ஆரம்பமாகியுள்ளது. இன்று (21.05.2017) சமய- சமூகப் பணிகள் பலவும் புரிந்துவரும் காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் திரு க. சோமசேகரம் (மகாராணி) அவர்கள் "**ஞான பண்டித சமூக இரட்சகர்**" எனும் உயரிய விருதினைப் பெற்றுள்ளார். அவர் அமைதியாக - ஆடம்பரமின்றி- விளம்பரமின்றி- எதிர்பார்ப்பு எதுவுமின்றி ஆற்றிவரும் சமய- சமூகப் பணிகள் மிக அதிகம். அவற்றின் உச்சமாக இருப்பது "இரட்சைப்" பணியேயாகும். மாடுகளைப் பண்ணையில் வளர்த்து அவற்றின் சாணத்தைச் சேகரித்து நெருப்பில் சுட்டு நீறாக்கி சுத்தமான திருநீறாக அயற் கோவில்களுக்கு வழங்கிவரும் அரும்பணி அவருடையது. "இரட்சை" என்பது வீபூதி. நமது நெற்றிக்கு அணி செய்யும் வீபூதியை நமக்கு அளிக்கும் சோமசேகரம் ஐயா இந்தக் கௌரவத்திற்கு முற்றிலும் தகுதியானவரே. தகுதியானவரைத் தேர்ந்தெடுப்பதுவே சுவாமிகளின் தனித்துவம்.



மயிலிட்டியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து சந்நிதிச் சுற்றாடலில் தங்கியிருந்த 1988, 89, 90 காலப்பகுதி மிக நெருக்கடியானது. பெரும் தொகையானோர் ஆச்சிரமத்திலேயே தங்கியிருக்க நேர்ந்ததால், ஆச்சிரமம் அகதிகள் முகாமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் அனைத்துத் தேவைகளையும் ஆச்சிரமமே கவனித்துவந்த காலகட்டமது. தனிப்பட்ட முறையிலும், தான் சார்ந்திருந்த I.C.R.C, லயன் கழகம் முதலான நிறுவனங்கள் சார்பாகவும்-வாரத்தில் இருமுறை ஆச்சிரம முகாமிற்கு வருகை தந்து துன்பப்பட்ட மக்களுக்கு மருத்துவ சேவையளித்த மருத்துவர் லயன் S.S. அருளானந்தம் அவர்களின் மக்கள் பணி மறக்கமுடியாதது. இவரே இன்றைய வைகாசிப் பெருவிழாவின் அடுத்த நாயகனாவார்.



தமக்கே உரித்தான பாணியில் அழகான தமிழ் நடையில், அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் பெரு விழாவிற்குத் தலைமை உரையாற்றினார். உடல் ரீதியாக - உள ரீதியாக அனைவரையும் நல்ல வண்ணம் வாழ வைக்கும் சந்நிதி முருகன், ஆச்சிரமத்தில் வெள்ளி தோறும் நடைபெறும் அறுபத்துமூவர் குருபூசை தினத்தில் அறுபத்து நாலாவது நாயனாராக அமர்ந்திருந்து அமுதுசெய்து அருள் பாலிக்கும் அவனது காலடியில் கௌரவிக்கப்படும் இருவரையும் வாழ்த்தி வரவேற்று ஆச்சிரம நற்பணிகளை நினைவுபடுத்தி தமது தலைமை உரையினை நிறைவு செய்து கொண்டார் அவர்.



சிறப்புரை வழங்குவதற்காக முதலில் அழைக்கப்பட்ட செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் (ஆசிரியர்) அவர்கள் ஞான பண்டித சமூக இரட்சகர் திரு க. சோமசேகரம் அவர்களின் பணிகள்பற்றி வித்தியாசமான கோணத்தில் விபரங்களை எடுத்துரைத்தார். யாழ் கம்பன் கழகத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவராக இருந்தமைபற்றியும், நல்லை இளங் கலைஞர் மன்றத்தின் விசேட உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிகள் பற்றியும், ஒரு காலத்தில் நல்லை ஆதீனம் பெரும் நிதி நெருக்கடியினை எதிர்கொண்ட வேளையில் திரு க. சோமசேகரம் ஆற்றிய உதவிகள் பற்றியும் விரிவாகக் கூறினார்.

இளைப்பாறிய வடபிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் திரு சி. பத்மநாதன் அவர்கள் சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டார். விழா நாயகர்கள் இருவரதும் சேவைகள் - சிறப்புக்கள் பற்றி எடுத்துக் கூறியதுடன் வைத்தியர் லயன் S.S. அருளானந்தம் அவர்கள் பற்றி மேலதிக தகவல் ஒன்றையும் வெளியிட்டார். யாழ்ப்பாணத்தில் I.P.K.F எனப்படும் இந்திய அமைதிப்படை இங்கு தங்கியிருந்த காலத்தில் லயன் S.S. அருளானந்தம் அவர்கள்

நான் என்ன செய்கின்றேன் என்று உணர்வது சுயதரிசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பிரஜைகள் குழுவில் பொறுப்பான பதவியிலிருந்தார். நியாயமற்ற விதத்தில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த பல இளைஞர்களை தனது வாதத் திறமையினால் விடுதலை பெற்றுத்தந்த பெருமகன் ஆவார். அந்த வேளையில் I.P.K.Fஇன் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்தவர் சர்வேஸ் பாண்டே என்பவராவார். இவர் பின்னாளில் தாம் எழுதிய "Jaffna Assignment" எனும் ஆங்கில நூலில் லயன் S.S. அருளானந்தம் அவர்களின் நேர்மையையும் - வாதிடும் திறமைபற்றியும் சிலாகித்துக் கூறியுள்ளமை இவரது பெருமைக்குச் சான்றாக அமைகிறது.



நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தமது ஆசியுரையில், ஆச்சிரமப் பணிகள் - விழா நாயகர்களின் சிறப்புக் கள் பற்றிக் கூறி ஆசீர்வதித்தார். நல்லை ஆதீனத் தின் ஆசியுரையின் இறுதியில், "இரண்டு வாரங்களுக்கு முன்புவரை நம்மோடு ஒன்றிணைந்து சமயப் பணி கள் பலவும் புரிந்த சைவப்புலவர் நித்திய தசீதரன் அவர்களின் மறைவு சைவ உலகம் முழுவதற்கு மான பேரிழப்பு" என அறிவித்தபோது, சபையினர் அமைதி காத்து- மனசார அவரது ஆத்ம சாந்திக் காக பிரார்த்தனையும் செய்தனர்.



பேராதனைப் பல்கலைக் கழகத்தின் 3ஆம் வருட மாணவியான செல்வி தயாளினி குமாரசாமி அவர் களே வைகாசிப் பெருவிழா நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி- வர்ணனை செய்து அசத்தினார். தங்கு தடையற்ற தொடர்பான அழகு தமிழ் உச்சரிப்பினால் சபையோர் அனைவரையும் தன்பால் கவர்ந்திழுத் தார். மேலும் மேலும் அவரது வர்ணனைப்பணி தொடர வாழ்த்து கிறோம். சைவப் புலவர் திரு செ. பரமேஸ்வரன் அவர்களது எழுத் தாக்கம் - நெறியாள்கையில், "சிறை காக்கும் காப்பு எவன் செய்யினும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை" எனும் தலைப்பில்



காலம் வரும் என நினைத்து கடமையைக் கைவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்பட்டு, யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மாணவ மாணவிகளான ர. குயின்சன், சு. சுகிகேதரன், தி. சங்கீரத்தனன், ஜெ. வினோத், இ. ஜேன்சிகா, ம. கோமகள், ச. சரண்யா ஆகியோர் பங்குகொண்ட வில்லிசை நிகழ்ச்சி சபையோரின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றது.

இரு விருது வழங்கும் வேளை. திரு துரை. கணேசமூர்த்தி, திரு செ. பரமேஸ்வரன் இருவரதும் கூட்டுத் தயாரிப்பில் உருவான வாழ்த்துப்பாவினை திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் சந்து பிரித்துப் பொருள் விளங்க சபையில் வாசித்தார். வாழ்த்துப் பாமாலையின் ஒவ்வொரு அடியிலும், க. சோமசேகரம் ஐயா அவர்களின் சமய - சமூகப் பணிகள் ஒன்றுவிடாமல் சிறப்புறச் சுட்டப்பட்டிருந்தமை தனிச் சிறப்பானதாகும். ஞானதான வள்ளல் திரு மோகனதாஸ் சுவாமிகள், "ஞான பண்டித சமூக இரட்சகர்" எனப் பொறிக்கப்பட்ட விருதினையும் வாழ்த்துப் பாவினையும் வழங்கிக் கௌரவப்படுத்தினார்.




அதேபோன்று, மருத்துவர் லயன் S.S. அருளானந்தம் அவர்களுக்கும் சுவாமிகள் பொன்னாடை போர்த்தி, அவரது மருத்துவ சேவையினைப் பாராட்டி விருதினையும் வழங்கிக் கௌரவமளித்தார்.

தொடர்ந்து, பாடசாலை செல்லும் வசதி குறைந்த மூன்று மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. வவுனியா/ கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவர்களான அரசிலன்குமார் தனுசியா - சத்தியசீலன் டிலக்ஷன்,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி. மாணவியான பற்குணசிங்கம் டிலேக்கா ஆகிய 10ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மூன்று மாணவர்களுக்கும் பெருவிழாவின் கதாநாயகர்கள் இருவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளைக் கையளித்தனர்.








அடுத்து, விழாவின் நாயகர்களான திரு க. சோம சேகரம் அவர்களதும், திரு லயன் S.S. அருளானந்தம் அவர்களதும் ஏற்புரை நிகழ்வு நடைபெற்றது. ஆச்சிரமம், பேரவை, சுவாமிகள், விழா ஏற்பாட்டுக் குழுவினர் என அனைவருக்கும் தத்தமது உளப்பூர்வமான நன்றி யினைத் தெரிவித்துக் கொண்டனர். குறிப்பாக இவ்விருதினை ஆச்சிரம சுவாமிகள் கையினால் பெற வேண்டும் என்ற அவாவினை சந்நிதி வேலவன் நிறை வேற்றியதையிட்டும் இருவரது பொருள் பொதிந்த ஏற்புரையானது மன ஆழத்திலிருந்து வெளிப்பட்டது என்பது அவர்களது மகிழ்ச்சியிலும் - நெகிழ்ச்சியிலும்

*அறத்தை நம்பாதவர்கள் சாவோடு சேர்ந்த தீய வாழ்க்கையிலேயே அமிழ்கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளெனப் புலப்பட்டது. நிகழ்ச்சி நிரலின்படி இறுதி நிகழ்ச்சியாக, காரைநகர் கிழவன்காடு கலாமன்ற இசை ஆசிரியை செல்வி இ. லீலாவதி அவர்களின் (பக்கவாத்திய சகிதம்)



இன்னிசை நிகழ்வு நிறைவு பெற்றதும், ஆச்சிரம சுவாமிகளின் நன்றியுரையினைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டுக்கான வைகாசிப் பெருவிழா 1.30க்கு இனிதே நிறைவுக்கு வந்தது.



அறிவுள்ளவர்கள் ஆபத்து வேளைகளில் ஒன்றும் சொல்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| த. கணேசமூர்த்தி | இலங்கை வங்கி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வை. துரைராசா | ஒஸ்காலேன் | உரும்பராய் | 3000. 00 |
| செ. நவரத்தினராசா | (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் | | சங்கானை | 5000. 00 |
| இ. இராசநாயகம் | துர்க்கா மரக்காலை | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| M.S.K. மகேஸ்வரன் | | தாவடி வடக்கு | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம் (செல்வம்ஸ்) | சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| மகாராணி புடவையகம் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வ. இராசையா c/o. இ. இராஜேஸ்வரன் | கேணியடி | திருநெல்வேலி | 2000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | | நீர்வேலி | 1000. 00 |
| Dr சி. இராசலிங்கம் இளை. வைத்திய பொறுப்பதிகாரி | | அச்சுவேலி | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் | மாலிசந்தி | அல்வாய் | 2000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் | | கரணவாய் தெற்கு | 2000. 00 |
| சி. சரவணப்பெருமாள் | | கரணவாய் தெற்கு | 1500. 00 |
| செல்வி சண்முகப்பிரியா வைத்தியநாதக் குருக்கள் | | பொலிகண்டி | 2000. 00 |
| Dr E. கனகரெத்தினம் | கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | தொண்டைமானாறு | 2000. 00 |
| சுந்தர்சன்ஸ் | | மானிப்பாய் | 3000. 00 |
| சி. நாகலிங்கம் | லிங்கம்ஸ் | கரணவாய் தெற்கு | 2000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | | ஆவரங்கால் | 2000. 00 |
| த. சிவகுருநாதன் | துவாரகா வெதுப்பகம் | கரணவாய் | 3000. 00 |
| லிங்கம் கூல்பார் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |




*உரையற்ற அமைதி உடன்பாட்டின் அறிகுறி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் இருபத்தோராம் நாள் (21.05.2017)

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற வைகாசிப் பெருவிழா வேளையில்

**சமய - சமூகத் தொண்டர் திரு க. சோமசேகரம் (மகாராணி)**

அவர்களுக்கு வழங்கப்படும்

## வாழ்த்துப் பாமாலை

சான்றணி துலங்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின்
ஞான பண்டித நெறிசேர் பட்டமதை
ஆனதோர் திறமிருத்தி பேறாகப் பெறுந்திருவாய்
சான்று பெற்றார் சோமசேகரம் வாழ்க வாழ்கவே!

ஆகு நற்திறமெலாஞ் சிறக்க - செல்வச்
சந்நிதியான் நீழலிடை யாச்சிரமத்தின்
ஞானதான வள்ளலெனும் மோகனதாஸ் சுவாமிகளை
உந்தியதோர் எண்ணமதால்
வண்ணமெனக் கண்டதோர் பேரவையால்
வழங்கு நல் **ஞான பண்டித சமூக இரட்சகர்**
சோமசேகரமே! நீர் நீடு வாழ்கவே!

திருநெறி கமழும் களபூமியாம்
காரைநகர் வியாவில் தன்னில் குடியிருக்கும்
ஐயனாராலய அறங்காவலராகியும்
மெய்யுணர் ஞான நூல்களின் பாதுகாவலனாகியும்
வாய்மொழி பகராச் சீவன்களின் ஆயுட் காப்பாளனாகியும்
மெய்யதனில் ஊனம் கண்டாலுமதை உத்தமப் பிறப்பாக்கி
மேலான செல்வமாம் இரட்சையினை மெய்யாகத் தந்து
செய்திருச் செம்மலர் சமூக இரட்சகர் சோமசேகரம் வாழ்கவே!
வாழ்க வாழ்கவே! ஞான பண்டித சமூக இரட்சகர் வாழ்கவே!
நீள் பணித்திறங்காண் சோமசேகர இரட்சகர் வாழ்கவே!
வள்ளலாய் வாழும் மெய்நெறிச் சேகரம் வாழ்கவே!
ஞானபண்டித சமூக இரட்சக சோமசேகரம் வாழ்கவே!

வாழ்த்துவோர்:

சந்நிதியான் ஆச்சிரம விழாக் குழுவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2017 வைகாசிமலர்

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

02.06.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சைவ வாழ்வியல்"

வழங்குபவர் :- சிவஸ்ரீ குமாரசாமி சுமுகலிங்கம் அவர்கள்

(சைவப் புலவர்)

---

09.06.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

16.06.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "முருக தோத்திரங்களில் பக்தி"

வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்

---

23.06.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

30.06.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா

(நீர்வைமணி) அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு க. நவரத்தினம் அவர்கள்

(இளை. ஆசிரியர், நெல்லியடி)

234ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/82/NEWS/2017

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org